# தமிழின் வெற்றி

கி. வா. ஜகந்நாதன்



அமுத நிலையம்

# தமிழின் வெற்றி

★

கி. வா. ஜகந்நாதன்

★

அமுத நிலையம் லிமிடெட்
தேனாம்பேட்டை :: சென்னை - 18

முதற் பதிப்பு—நவம்பர், 1952
அமுதம்—52
உரிமை பதிவு

விலை ரூ. 1—4—0

நாஷனல் ஆர்ட் பிரஸ்
தேனாம்பேட்டை சென்னை - 18

# முன்னுரை

இந்தப் புத்தகத்தில் வரும் பத்து வரலாறுகளும் தமிழ்ப் புலவர்களைப் பற்றியவை. அவர்கள் தம்முடைய கவித் திறத்தால் பிறரை வியப்பில் ஆழ்த்துவதும், குற்றம் தோன்றாமல் மாற்றிச் சமாதானம் சொல்வதும், உயிரை மீட்பதும், தக்காரை வாழ்த்தித் தகாதவரைக் குறிப்பாகப் பழிப்பதும், பாடல்களை வசையாகத் தொடங்கி இசையாக மாற்றுவதும், மாறுபட்ட கருத்துடையவர்களையும் மாற்றிப் பாராட்டுக் கூறச் செய்வதும் ஆகிய செயல்களை நிறைவேற்றுகிறார்கள்; சோதனைகளில் வெற்றி பெறுகிறார்கள். தமிழ் வேறு, தமிழ்ப் புலவர்கள் வேறு அல்ல; ஆகையால் புலவர்களின் செந்தமிழ்ப் புலமை பல நிலைகளிலும் காரியத்தைச் சாதித்துத் தரும் வரலாறுகள் அடங்கிய இதற்கு, 'தமிழின் வெற்றி' என்ற பெயரை வைத்தேன்.

இந்தப் புத்தகத்தில் புறநானூற்றுப் பாடல்களை ஒட்டிய வரலாறுகள் மூன்றும், தனிப் பாடல்களை ஒட்டியவை ஐந்தும், நூல்கள் எழுந்த வரலாறுகள் இரண்டும் உள்ளன. பாடல்களில் அமைந்த பொருளையும், அவற்றோடு உள்ள குறிப்புகளையும் கொண்டு நிகழ்ச்சிகளைக் கற்பனையினால் விரித்து அமைத்து எழுதியவை இவை.

இந்த முறையில் 'புது மெருகு', 'எல்லாம் தமிழ்' என்ற பெயருடன் இரண்டு புத்தகங்கள் முன்பு எழுதியிருக்கிறேன்.

இந்தப் புத்தகத்தில் உள்ள வரலாறுகளால் புலவர்களின் பெருமிதமும், ஆற்றலும், தமிழின் ஏற்றமும் வெளியாகும். வரலாற்றினிடையே வரும் தமிழ்ப் பாடல்களின் பொருளும் தெளிவாக விளங்கும்.

1—11—52 கி. வா. ஜகந்நாதன்

# பொருள் அடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | எப்படிப் புகழ்வேன்! | ... | 1 |
| 2. | யார் குற்றம்? | ... | 13 |
| 3. | மீண்ட குழந்தைகள் | ... | 25 |
| 4. | வாழைப் பாட்டு | ... | 36 |
| 5. | மாற்றிய பாட்டு | ... | 44 |
| 6. | செருக்கழிந்த புலவர் | ... | 53 |
| 7. | கிழவியின் தந்திரம் | ... | 58 |
| 8. | இருளும் நிலவும் | ... | 64 |
| 9. | வசையும் இசையும் | ... | 73 |
| 10. | சொற்கோயில் | ... | 81 |
| | குறிப்புகள் | ... | 98 |

# எப்படிப் புகழ்வேன்!

கிள்ளிவளவன் சிங்காதனத்தில் வீற்றிருந் தான். அரசவை கூடியிருந்தது. அரசனுடைய சுற்றமாகிய அமைச்சர், படைத் தலைவர் முதலி யோரும் புலவரும் பாணரும் பிறரும் அவையில் அமர்ந்திருந்தனர். புலவர்கள் அன்று கிள்ளி வளவனுடைய இயல்புகளைப் பாராட்டிப் பல பாடல் களைப் பாடினார்கள்.

ஒரு புலவர் அவனுடைய ஈகையைச் சிறப் பித்துப் பாடினர். "கற்பகமும் காரும் தோல்வி யுறும்படி ஈந்து உவக்கும் பெருவண்மை படைத் தவன். யார் எத்தனை முறை வந்தாலும் இல்லை யென்னுமல் உதவும் பெருங் கொடையாளன்" என்று பாராட்டினர். அருகில் இருந்த புலவர்களும் பாணரும் அந்தப் பாடலை நன்றாகக் கேட்டு இன்புற் றனர். அரசனுடைய ஈகையை நன்கு அறிந் தவர்கள் அவர்கள். ஆதலின் அரசன் கொடையிற் சிறந்தவன் என்பதை மற்றவர்களைக் காட்டிலும் அதிகமாக அவர்கள் உணர்ந்து சுவைக்க முடிந்தது. புலவர் கூறியது அத்தனையும் உண்மை யென் பதைத் தம்முடைய சிரக் கம்பத்தால் புலப்படுத் தினார்கள். ஈதலால் வரும் இசையைத் தேக்கிக் கொண்டவன் கிள்ளிவளவன் என்பதை அந்தப் பாடலால் புலவர் நிலை நிறுத்தினர்.

அடுத்தபடி வளவனுடைய வீரத்தைப் பாராட்டி மற்றொரு புலவர் ஒரு பாடல் பாடினார். பகைவர்களுக்கு அஞ்சாமல் அவர்களுடைய நாட்டுக்குச் சென்று பொருது அவர்களைப் பணிய வைத்து அவர்கள் இட்ட திறைகளைக் கொண்டு வந்ததையும், அவ்வாறு பணியாத மன்னர்களைப் பொருது அழித்ததையும், புறங்காட்டினவர் அஞ்சினவர் முதலியவர்களைக் கொல்லாமல் விட்டதையும் பாடினார் அவர். பின்னும் ஒரு புலவர் அவன் செய்த போர்களை வருணித்தார். அவையில் இருந்த படைத் தலைவரும் பிறரும் அரசனுடைய வீரப் புகழைப் பாடும் அந்தப் பாடல்களை மிகுதியாகச் சுவைத்து இன்புற்றனர். கிள்ளிவளவனுக்கு அவற்றைக் கேட்டபோது தோள்கள் பூரித்தன.

சோழனுடைய கொடையையும் வீரத்தையும் பாராட்டிய பிறகு வேறு சிறப்பாகச் சொல்ல வேண்டியது என்ன இருக்கிறது? ஆனாலும் மற்றொரு புலவர் புது வகையில் ஒரு பாடலைச் சொன்னார். அதில் கிள்ளிவளவன் குடிமக்களுடைய முறையீட்டைக் கேட்டு நியாயம் வழங்கும் திறத்தை எடுத்துரைத்தார். சான்றோர்களைக் கூட்டி வைத்துக் கொண்டு அவர்களுடைய நல்லுரைகளைக் கேட்டுத் தானும் ஆராய்ந்து குற்றம் யாருடையது என்பதைத் தீர்மானித்துக் குற்றவாளிக்குத் தண்டனையும், துன்புற்றவர்களுக்குக் குறைதீரும் வகையில் ஆறுதலும் பொருளும் அளிக்கும் இயல்பை விரித்துரைத்தார். அறங்கூறவையம் என்ற நியாய சபையில் மக்களின் நம்பிக்கைக்கும் மதிப்புக்கும் உரிய சான்றோர்களை நியமித்திருத்தலை அவர் தம் பாடலில் எடுத்து இயம்

பினர். அதைக் கேட்டு அரசவையில் இருந்த சான்றோர்கள் யாவரும் மட்டில்லாத மகிழ்ச்சியை அடைந்தனர். "யார்க்கும் இல்லாத புகழ் இது" என்று அவர்கள் பாராட்டினார்கள். புலவரும் வீரரும் படைத் தலைவரும் அமைச்சரும் சான்றோரும் பிறரும் அந்த அவையில் கேட்ட பாடல்களில் தங்களுக்கு மிக்க விருப்பமானதைப் பற்றி எண்ணி இன்புற்றனர்.

ஒருவாறு புலவர்கள் தங்கள் கவிகளையெல்லாம் சொல்லிவிட்டார்கள். இன்னும் யார் என்ன சொல்லப் போகிறார்கள் என்று அவைக்களத்தில் இருந்தவர்கள் ஆவலோடு பார்த்தார்கள். அங்கே ஓரிடத்தில் தனியே பெண்கள் சிலர் அமர்ந்திருந்தார்கள். பாட்டுப் பாடி ஆடும் விறலியர் சிலரும், அரசனுக்கு ஏவல் புரியும் மகளிரும் அங்கே இருந்தார்கள். அவர்களிடையே ஒரு பெண் புலவரும் இருந்தார். மாறோக்கம் என்ற ஊரிலிருந்து வந்தவர் அவர்; நப்பசலையார் என்ற பெயர் உள்ளவர்.

ஆடவர் கூட்டத்தில் இருந்த புலவர்கள் தங்கள் பாடல்களைச் சொன்னபோது நப்பசலையார் அவற்றைக் கேட்டுக்கொண்டே இருந்தார். எல்லோரும் தம்முடைய கவிகளைச் சொல்லி முடித்த பின்னர், இன்னும் யாராவது பாடல் சொல்லப் போகிறாரா என்று பார்த்தார். ஒருவரும் சொல்வதாகக் காணவில்லை. அப்போது, "நான் ஒரு பாடல் சொல்லலாமா?" என்று மெல்லக் கேட்டார்.

அதுவரையில் அப் பெண்புலவர் அங்கே இருந்ததை மற்றப் புலவர்கள் மறந்தே போயிருந்தனர். அவர் இந்தக் கேள்வியைக் கேட்டவுடன் அவர்கள்,

"அடடா! நப்பசலையாரை மறந்தே போய் விட்டோமே! அவருடைய பாடலை நாமே அல்லவா சொல்லும்படி கேட்டிருக்க வேண்டும்?" என்றார்கள்.

கிள்ளிவளவன் பெண்கள் பக்கம் திரும்பினான். "தங்களை ஆடவர்கள் அடியோடு மறந்தே போய் விட்டார்களே!" என்றான்.

"மறந்தாலும் நினைப்பூட்டுவது பெண்குலத்தின் இயல்பு" என்றார் நப்பசலையார்.

"தாய்த் தன்மை என்பது அதுதானே?" என்று கிள்ளிவளவன் நயமாகச் சொன்னான்; "தங்கள் பாடலைக் கேட்க அவையினர் மிக்க ஆவலாக இருக்கிறார்கள். இத்தனை பேரும் என்னை வானளாவப் புகழ்ந்துவிட்டார்கள். இவ்வளவு புகழையும் தாங்கும் வன்மை எனக்கு இல்லை. நீங்களும் இவர்களோடு சேர்ந்து சுமையை அதிக மாக்கப் போகிறீர்களா?" என்றான்.

"அவர்கள் போன வழியிலே நான் போக மாட்டேன். உங்கள் சுமையைக் குறைக்கலா மென்றே எண்ணுகிறேன்" என்றார் நப்பசலையார்.

புலவர்கள் சற்று விழித்தனர். நப்பசலையாரின் கருத்து அவர்களுக்கு விளங்கவில்லை.

நப்பசலையார் இப்போது புலவர்களை நோக்கிப் பேச ஆரம்பித்தார். "இது காறும் நீங்கள் நம் மன்னருடைய புகழை விரிவாகப் பாடினீர்கள். அவர் இயல்புகளை யெல்லாம் எடுத்து எளிதிலே பாராட்டி விட்டீர்கள். எனக்கோ இப் பெருமானை இன்னபடி புகழ்வது என்று தோன்றவில்லை. உண்மையைச் சொல்லப் போனால், 'இவருக்குப்

புகழ் ஏது? புகழ வேண்டியது அவசியந்தானு?' என்றுகூடத் தோன்றுகிறது."

புலவர்கள் திடுக்கிட்டார்கள். 'நப்பசலையார் அறிவுள்ள புலவர். மனம்போனபடி பேசமாட்டார். எதையோ சுற்றி வளைத்துச் சொல்ல வருகிறார்' என்று எண்ணினார்கள். நப்பசலையார் மேலும் பேசலானார்.

"நீங்கள் எல்லாம் இப்பெருமானுடைய புகழைப் பலவகையில் சொன்னீர்கள். இவருடைய ஈகையைப் புகழ்ந்தீர்கள். மனிதர் நடக்கிறார்கள். அதைப் பார்த்து, 'ஆகா என்ன அழகு! இவர் நடக்கிறாரே!' என்று யாராவது பாராட்டுவார்களா? மனித இனம் பரம்பரை பரம்பரையாகக் காலால் நடக்கும் பழக்கத்தை உடையது. அதைப் பெரிது படுத்திச் சொல்லிக் கொண்டிருப்பார்களா? வளவர் குலத்தில் ஈகை என்பது மருந்துக்கும் இல்லாமல் இவரிடம் மாத்திரம் இருந்ததானுல் அதைத் தனியே எடுத்துச் சொல்லலாம். கை படைத்த பயன் ஈகை என்று எண்ணும் குலம் இது. வெறும் பொருளை மாத்திரமா கொடுத்தார்கள்? பொருளைக் கொடுத்தார்கள்; புவியைக் கொடுத்தார்கள்; உடம்பையே கொடுத்தார்கள். மனிதருக்கு மாத்திரமா கொடுத்தார்கள்? பறவைக்கும் கொடுத்தார்கள். இந்தச் செம்பியர் குலத்தின் முன்னோர்களில் ஒருவன் சிபி என்பது உங்களுக்குத் தெரியாதா? ஒரு புரு அடைந்த இன்னலைக் கண்டு அதனை விடுவித்தற் பொருட்டு அதனைத் துரத்தி வந்த பருந்துக்குப் புருவின் நிறைக்குத் தக்கபடி தன் உடம்பை அரிந்து கொடுத்த அவன் பெருமையை நம் நாட்டு

இதிகாசங்கள் சொல்கின்றன. அந்த மரபில் வந்தவர் ஈகையில் வல்லவர் என்பது ஒரு புகழா?"

நப்பசலையார் சிறிதே நிறுத்திப் புலவர்கள் முகத்தைப் பார்த்தார். அவர்கள் வியப்போடு நப்பசலையாரையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"ஆகவே ஈதல் என்பது இவருக்கு மாத்திரம் உரிய தனிப் புகழ் அன்று என்று சொன்னல் தவருகுமா?"

"தவறு ஆகாது" என்று அவையில் இருந்த சான்ருேர் ஒருவர் சொன்னர்.

"அப்படியானல் என் பாட்டைக் கேளுங்கள். எல்லோரும் 'ஈதல் நின்புகழ்' என்று பாடினர்கள். நான் 'ஈதல் நின் புகழ் அன்றே' என்று பாடு கிறேன். காரணத்தோடு பாடுகிறேன். கேளுங்கள்.

> புறவின் அல்லல் சொல்லிய கறையடி
> யானை வான்மருப்பு எறிந்த வெண்கடைக்
> கோல்நிறை துலாஅம் புக்கோன் மருக!
> ஈதல் நின் புகழும் அன்றே!

[புருவினது வருத்தத்தைப் போக்கும் பொருட்டு உரலைப் போன்ற அடியையுடைய யானையினது வெண்மையான தந்தத்தை வெட்டிச் செய்த வெள்ளிய ஓரத்தையுடைய கோலைப் பெற்ற நிறுத்தலையுடைய தராசில் புகுந்தவனுடைய மரபில் வந்த மன்னனே, அவன் மரபில் வந்த உனக்குக் கொடை இயற்கை யாக வந்ததே யன்றிச் சிறப்பாக வந்தது அன்று; ஆதலின் ஈவது உன் புகழுக்கு உரியது அன்று.]

கிள்ளிவளவன் முகத்தில் ஒளி வீசியது. 'நம் முடைய முன்னேர் பெருமையை நமக்கு நினைவூட்டி, பெரிய பெரிய தியாகங்களைச் செய்தவர்கள் இருக்க நாம் அளிக்கும் கொடை சிறிதென்று எண்ணச் செய்து, புலவர்களின் புகழால் நாம் தருக்கடையா

மல் செய்கிறார் இந்த அன்னையார்' என்ற சிந்தனையில் அவன் ஆழ்ந்தான்.

நப்பசலையார் பாடலைச் சொல்லிவிட்டு மறுபடியும் பேசத் தொடங்கினார்.

"பகைவர்களை வெல்வதும் கொல்வதுமாகிய வீரத்திற் சிறந்தவர் என்று மன்னர்பிரானை நீங்கள் புகழ்ந்தீர்கள். அந்தப் புகழ்ச் சுமையையும் இறக்கி வளவர் பெருமானுக்கு ஆறுதல் அளிக்கலாமென்று எண்ணுகிறேன். சான்றோர் தம்மை ஒருவர் புகழ்ந்தால் நாணுவார்கள். நம் அரசர் பெருமான் நீங்கள் புகழப் புகழத் தலை குனிந்து கொண்டார். அவருடைய திருமுடி நிமிரும்பொருட்டு, நீங்கள் ஏற்றிய பாரத்தை ஒவ்வொன்றாக இறக்கி வைக்கப் போகிறேன். பகைவரை அடுதல் இப்பெருமானுடைய புகழ் என்று பாராட்டினீர்கள். அதுவும் இவருக்கே உரிய புகழ் அன்று என்று நான் சொல்கிறேன்."

'இந்த முறை வளவர்பிரானுடைய முன்னோர்களில் யாரைச் சொல்லப் போகிறாரோ!' என்று அவைக் களத்தினர் அத்தனை பேரும் ஆவலோடு காதைக் கூர்மையாக்கிக் கொண்டிருந்தனர்.

"இவ்வுலகத்தில் ஒரு நாட்டிலுள்ள அரசனை வெல்வது யாரும் செய்யும் காரியம். மலையரணும் காட்டரணும் நீரரணும் படைத்த பேரரசனை இருந்தாலும் அவனுடைய அரண்கள் எல்லாம் இந்நிலப் பரப்பில் இருக்கின்றவைதாமே? சோழர் குலத்தில் செய்தற்கரிய காரியங்களைச் செய்த பெருவீரர்கள் இருந்திருக்கிறார்கள். வானத்தில் தொங்கும் மதிலையுடைய பகைவர்கள் உலகத்துக்குத்

துன்பத்தைச் செய்து வந்தார்கள். முப்புரங்களுக்குத் தலைவர்களாகிய அசுரர்கள் அப்படிச் செய்ததாகப் புராணத்தில் கேட்டிருக்கிறோம். ஆனால் இந்த உலகில் அவ்வாறு தொங்கிய மதிலை அழித்து வெற்றி கொண்ட அரசர் ஒரு செம்பியர்; சோழர். தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியர் என்ற சோழ மன்னர் பெற்ற வெற்றி இந்தக் குலத்துக்கே உரியது. இந்தக் குலத்தில் வந்த ஒருவர், நிலத்தில் வாழும் மன்னர்களை அட்டார் என்பது எடுத்துச் சொல்வதற்குரிய செய்கையா? சிங்கம் யானையைக் கொன்றது என்பது வலியற்ற மனிதர்கள் பேசி வியக்கும் செயல். அதை மனிதர்கள் தமக்குள்ளே சொல்லிக் கொள்ளலாம். சிங்கத்தினிடம் போய், 'ஆ! நீ யானையைக் கொன்றாயே! உன் வீரமே வீரம்' என்று சொல்வது எதற்காக? ஆகையால் பகைவரை அடுவதும் நம் அரசர் பெருமானுடைய புகழுக்கு உரியது அன்று."

புலவர்கள் தலையை அசைத்தார்கள். நப்பசலையார் பாட்டின் இரண்டாவது பகுதியைச் சொன்னார்.

**சார்தல்**

ஒன்னார் உட்கும் துன்னரும் கடுந்திறல்
தூங்குஎயில் எறிந்தநின் ஊங்கணோர் நினைப்பின்
அடுதல்நின் புகழும் அன்றே!

[அணுகுதற்கும் பகைவர்கள் அஞ்சும், அடைய அரிய, மிக்க திறலையுடைய, தொங்கும் மதிலை அழித்த நின்னுடைய முன்னோரை நினைத்தால், இப்போதுள்ள பகைவரைக் கொல்லுதல் நினக்கு இயற்கையான காரியமேயன்றிப் புகழுதற்குரிய சிறப்பான செயல் அன்றே!]

நப்பசலையார் பாட்டு இன்னும் முடியவில்லை. ஆகவே புலவர்கள் அடுத்தபடி அப்புலமைப் பிராட்டியார் என்ன சொல்லப் போகிறார் என்று பார்த்தனர்.

"நீங்கள் சுமத்திய ஈகைப் புகழையும் வீரப் புகழையும் இறக்கி உங்கள் கோபத்தையும் அரசர் பெருமானுடைய—"

"வியப்போடு கலந்த மகிழ்ச்சியையும் பெற்றீர்கள்" என்று வளவன் அந்த வாக்கியத்தை முடித்தபோது அவையில் உவகை ஆரவாரம் எழுந்தது. புலவர் கூட்டத்திலிருந்து, "கோபமா! நாங்கள் வியப்பில் அல்லவா ஆழ்ந்திருக்கிறோம்?" என்ற வார்த்தைகள் வந்தன.

"அப்படியா! மூன்றாவது சுமையையும் இறக்கி விடுகிறேன். முறை செய்து நீதி வழங்கும் இயல்பை நீங்கள் பாராட்டினீர்கள். அதுவும் இப்பெருமானுக்குப் புகழ் அன்று. இந்த உறையூரை எப்போது கரிகால் வளவர் அமைத்தாரோ அப்போதே இங்கே அறங்கூரவையம் அமைந்துவிட்டது. வீரம் மிக்க சோழருடைய அவையத்தில் நீதி நிலையாக நிற்கிறது என்பது உலகமறிந்த உண்மை. ஆகவே முன்பே இருக்கும் நீதியை, முறையை, இம்மன்னர் பிரான் புதிதாக அமைத்தார் என்று சொல்லலாமா? எப்போதும் உள்ளதை இவர் மாற்றவில்லை என்று சொல்வது ஒரு புகழா? ஆகவே முறைமைகூட இவர் புகழ் அன்று என்று சொல்கிறேன்."

"நீங்கள் எப்படிச் சொன்னாலும் அழகாக இருக்கிறது" என்றார் சான்றோர் ஒருவர்.

நப்பசலையார் பாட்டின் அடுத்த பகுதியைச் சொன்னார்.

கெடுஇன்று
மறம்கெழு சோழர் உறந்தை அவையத்து
அறம்நின்று நிலையிற்று ஆதலின் அதனால்
முறைமைநின் புகழும் அன்றே!

[கெடுதல் இல்லாமல் வீரம் பொருந்திய சோழருடைய உறையூரிலுள்ள அவையில் அறம் எப்போதும் தளர்வில்லாமல் நின்று நிலைபெற்றிருக்கிறது; ஆதலால் முறை செய்து நீதி வழங்குதலும் உனக்குப் புகழ் அன்று.]

இவ்வாறு கொடை, வீரம், முறைமை என்ற மூன்றையும் கிள்ளிவளவனுக்கே உரிய புகழாகச் சொன்ன புலவர்களுக் கெதிரே, அம் மூன்றும் நெடுங்காலமாகச் சோழர்குலத்துக்கு உரியன என்று சொன்னார் நப்பசலையார். "இந்தக் குலப் பெருமையை நீ பாதுகாக்கிறாய். மற்றவர்களுக்கெல்லாம் சிறப்புத் தரும் செயல்கள் உனக்கு இயல்பாகவே இருக்கின்றன" என்று கிள்ளிவளவனைப் புகழாமல் புகழ்ந்தார்.

புலவர்கள் அவருடைய சதுரப் பாட்டை வியந்தார்கள். "இன்னும் பாடலை நிறைவேற்றவில்லையே!" என்றார் ஒரு புலவர்.

"இதோ நிறைவு செய்கிறேன். புகழுக்குரிய கொடை, வீரம், முறைமை என்பவற்றில் ஒன்றும் இவருக்கென்று தனிச் சொத்தாக இல்லாதபோது இவரை எப்படிப் புகழ்வது என்ற எண்ணம் எனக்கு வந்துவிட்டது. இமயத்தில் வில்லைப் பொறித்த சேரனை வென்ற இப் பெருமானைப் புகழலாம்

என்று முயன்றால், எவ்வாறு புகழ்வது என்ற கேள்வியே எழுகிறது. அந்தக் கேள்வியையே நான் பாட்டாகப் பாடிவிடுகிறேன். என்னசெய்வது!" என்று கூறிவிட்டுப் பாடலின் பிற்பகுதியைச் சொன்னார், அந்தக் கவிப் பெருமாட்டியார்.

மறம்மிக்கு

எழுசமம் கடந்த எழுஉறழ் திணிதோட்
கண்ணார் கண்ணிக் கலிமான் வளவ!
யாங்கனம் மொழிகோ யானே? ஓங்கிய
வரைஅளந்து அறியாப் பொன்படு நெடுங்கோட்டு
இமயம் சூட்டிய ஏம விற்பொறி
மாண்வினை நெடுந்தேர் வானவன் தொலைய,
வாடா வஞ்சி வாட்டும்நின்
பீடுகெழு நோன்றாள் பாடுங் காலே.

[வீரம்மிக்குக் கிளர்ந்தெழுந்த போரை வென்ற இருப்புத் தூண்போன்ற செறிந்த தோளையும் அழகையுடைய கண்ணியையும் செருக்கையுடைய குதிரையையும் உடைய கிள்ளிவளவனே! உயர்ந்து நின்ற, இவ்வளவென்று அளந்து அறிய முடியாத, பொன்விளைகின்ற உயர்ந்த சிகரத்தை உடைய இமய மலையிலே சூட்டிய காவலாகிய வில் அடையாளத்தையும், மாட்சிமை கைத் தொழிற் சிறப்பு இவற்றை உடைய உயர்ந்த தேரையும் பெற்ற சேரன் அழியும்படியாக அவனுடைய தலைநகரமாகிய வஞ்சிமா நகரத்தை வாடச்செய்த நின்னுடைய பெருமை பொருந்திய வலிய முயற்சியைப் பாடும்போது, நான் எவ்வாறு சொல்வேன்!]

"எப்படிச் சொல்வது? வழிசொல்லுங்கள்" என்று கூறி நிறுத்தினார் நப்பசலையார்.

'எப்படிச் சொல்வதென்று கேட்டுக்கொண்டே நம் மன்னர்பிரானுடைய வீரச் சிறப்பையும், வெற்றிப் பெருமையையும், முயற்சியின் வலிமையையும்,

குலத்தின் மாண்பையும், எளிதிலே ஈந்து வெற்றி கொண்டு நீதியை நிலைநிறுத்தும் இயல்பையும் அழகாகச் சொல்லிவிட்டீர்களே! இன்னும் சொல்வதற்கு என்ன இருக்கிறது? அழகு, அழகு!" என்றார் அங்கிருந்த சான்றோர்களில் ஆண்டில் முதிர்ந்த ஒருவர்.

அவர் கூறியது சரி என்பதை அப்போது அவைக் களத்தில் எழுந்த ஆரவாரம் உறுதி செய்தது.

# யார் குற்றம்?

தமிழ் நூல்களில் புலவர்கள் பாராட்டிய மன்னர்களும் செல்வர்களும் பலர். அவர்களுக்குள்ளே முடியுடை மன்னர்கள் புலவர்களை ஆதரித்ததும், தம்பால் வந்த இரவலர்களுக்கு வேண்டிய அளவு பொருள் அளித்துப் பாதுகாத்ததும் அருமையான செயல்கள் அல்ல. அவ்வாறு செய்வதற்கு அவர்களிடம் நிரம்பின செல்வம் இருந்தது. ஆனால் சில சிற்றரசர்களும் செல்வர்களும் தங்களை நாடி வந்தவர்களுக்கு இல்லையென்று சொல்லாமல் அளித்து வந்தனர். பறவை, செடி ஆகியவற்றினிடங் கூட அவர்களுடைய கருணை சென்றது. அப்படி வாழ்ந்த வள்ளல்களுக்குள் சிறந்தவர்களென்று ஏழு பேரைப் புலவர்கள் சேர்த்துப் பாராட்டியிருக்கிறார்கள். பாரத நாடு முழுவதும் வாழ்ந்த வள்ளல்களாகப் பதினன்கு பேரை முதலெழு வள்ளல்கள் என்றும், இடையெழு வள்ளல்கள் என்றும் சொல்லும் வழக்கம் பிற்காலத்தில் உண்டாயிற்று. தமிழ் நாட்டில் வாழ்ந்த வள்ளல்களைக் கடையெழு வள்ளல்கள் என்று அந்த முறையிலே சொல்வார்கள்,

பல புலவர்கள் இந்த ஏழு வள்ளல்களை ஒருங்கு சேர்த்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்த ஏழுபேர்களில் நள்ளி என்பவன் ஒருவன். அவன் கண்டீரம் என்னும் மலையைச் சார்ந்த இடத்தில் இருந்து வாழ்ந்த சிற்றரசன். தோட்டி என்ற மலை அவனுக்கு உரியதாக இருந்தது. புலவர்களுக்குக் கணக்கில்

லாமல் ஈயும் கொடையாளன் அவன். இசைபாடும் பாணர்களுக்குப் பலவகையில் உபசாரம் செய்து அவர்களுடைய இன்னிசையிலே மூழ்கித் திளைப்ப வன். அவ்வாறு பலகாலும் இசைவிருந்தை நுகர்ந்த தனால் அவனுக்கு இசையின் நுணுக்கங்களெல்லாம் நன்ருகத் தெரிந்திருந்தன.

ஒரு சமயம் நள்ளியைத் தேடிக் கொண்டு புகழ் பெற்ற பாணன் ஒருவன் வந்தான். அவன் இனி மையாக யாழ்வாசிப்பதில் வல்லவன். அவனுடைய இசையைக் கேட்டு மகிழாத மன்னரோ, செல்வரோ தமிழ்நாட்டில் இல்லை யென்றே சொல்லிவிடலாம். அவன் நள்ளியைமாத்திரம் நெடுநாட்களாகப் பார்த்த தில்லை. வேறு பாணர் பலர் நள்ளியிடம் சென்று பாடிப் பரிசில் பெற்று வருவர். அவர்களை இந்தப் பாணன் சந்திக்கும் போது அவர்கள் நள்ளியின் இயல்பைப் பாராட்டிக் கூறுவார்கள். "நாங்களும் எவ்வளவோ இடங்களில் பாடுகிரும். பரிசு பெறு கிரும். தமிழ் நாட்டில் இசையை விரும்பிக் கேட் கும் வள்ளல்கள் பலர் இருக்கிருர்கள். ஆனல் நள் ளியின் திறமே வேறு. அவரும் மற்றவர்களைப் போலத்தானே பரிசு கொடுக்கிருர் என்று நீங்கள் கேட்கலாம். பரிசை நாம் பெறுவது பெரிதன்று. நம்முடைய ஆற்றலைத் தெரிந்து பாராட்டிக் கொடுக் கும் பரிசு ஆயிரமடங்கு உயர்ந்தது. இசைப்புலமை யுடையவர்கள் சில சமயங்களில் மிகவும் அற்புத மாகப் பாடுவார்கள். அந்தச் சமயமறிந்து பாராட்டி ஞல் அந்தப் பாராட்டைவிடச் சிறந்த பரிசு வேறு இல்லை. எத்தனை நுட்பமான வகையிலே நம்முடைய இசைத்திறனைக் காட்டினலும் அந்த நுட்பத்தை

உணர்ந்து 'இந்த இடம் அற்புதம்' என்று பாராட்டும் கலைஞர் நள்ளி. ஆகவேதான் அவரைக் காட்டிலும் நிலையிலும் பொருளிலும் சிறந்தவர்கள் தமிழ் நாட்டிலே இருந்தாலும், அவரையே அடிக்கடி நாடிச் செல்கிறோம்" என்று அவர்கள் தங்கள் அநுபவத்தைச் சொல்வார்கள்.

இத்தகைய பேச்சைக் கேட்கக் கேட்க முன்னே சொன்ன பாணனுக்கு நள்ளியைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் அதிகமாயிற்று. தன்னுடைய மாணாக்கர் கூட்டத்தோடும் சுற்றத்தோடும் நள்ளியை நாடிச் சென்றான்.

இவன் போன சமயம் நள்ளி வேறு எங்கோ புறப்படும் நிலையில் இருந்தான். வந்தவர்களைப் போங்கள் என்று சொல்லும் வழக்கம் அவனிடம் இல்லை. ஆதலின், "நீங்கள் இங்கேயே இருங்கள். உங்கள் வீடாகவே இந்த இடத்தைக் கருதி வேண்டியவற்றைப் பெற்று இன்புறலாம். இன்றியமையாத கடமை ஒன்றை நிறைவேற்ற நான் போகவேண்டியிருக்கிறது. விரைவில் வந்து விடுகிறேன். என்றும் வராத நீங்கள் வந்திருக்கிறீர்கள். உங்களை உடனிருந்து உபசரிக்கும் நிலை எனக்கு இப்போது இல்லாமைக்கு வருந்துகிறேன். ஆனாலும் நீங்கள் ஒரு குறைவும் இல்லாமல் இங்கே தங்கலாம்" என்று அன்புடன் சொன்னான். அமைச்சரிடமும் பிற அதிகாரிகளிடமும் அவர்களைத் தக்கவண்ணம் உபசரிக்கும்படி சொல்லிவிட்டுச் சென்றான். அவன் மீண்டு வருவதற்கு ஒரு வாரமாகி விட்டது.

பாணன் நள்ளியின் அரண்மனையில் தங்கியிருந்தான். ஒவ்வொரு வேளையும் விருந்துதான். புதிய

ஆடைகளை அவனுக்கும் அவனுடன் வந்தவர்களுக்கும் அரண்மனை அதிகாரிகள் அளித்தார்கள். அவற்றை அணிந்து மனம் விரும்பிய மட்டும் இனிய உணவை உண்டு ஒரு நாளைக்கு ஒரு நாள் உடம்பு பொலிவு பெற, அவர்கள் அங்கே தங்கியிருந்தார்கள்.

நள்ளி வந்தான். "உங்களை இங்கு இருப்பவர்கள் சரியாகக் கவனித்துக் கொண்டார்களா?" என்று கேட்டான்.

"எங்கள் வாழ்நாளில் பெறாத உபசாரங்களை இங்கே ஒரு வாரமாகப் பெற்று வாழ்கிறோம். முன்பு எங்களைப் பார்த்தவர்கள் இப்போது எங்களைப்பார்த்தால் அடையாளமே கண்டுபிடிக்க மாட்டார்கள்" என்றான் பாணன்.

"உங்கள் பெருந்தன்மையால் நீங்கள் அப்படித்தான் சொல்வீர்கள். நீங்கள் போகும் இடங்களில் எல்லாம் மக்கள் உங்களை வரவேற்று உபசரிப்பார்கள். பேரரசர்களிடம் உபசாரங்களைப் பெற்றிருப்பீர்கள். அந்த உபசாரங்களைவிடவா இங்கே சிறப்பாக நடக்க முடியும்?" என்று நள்ளி கூறினான்.

"உங்கள் யாழிசையை அமைதியாக இருந்து நெடு நேரம் கேட்கவேண்டுமென்று ஆசைப்படுகிறேன். அதற்குரிய வேளை வரவேண்டும். இங்கே என்னை நாடிச் சில அன்பர்கள் வருகிறார்கள். மிகவும் அவசியமான சில ஆலோசனைகள் நடத்த வேண்டும். அதனால் ஊருக்கு வந்தும் உங்கள் இசையை உடனே கேட்கமுடியவில்லை. கேட்டோம் என்று பெயர் பண்ணுவதற்காகச் சிறிது நேரம் கேட்டு விட்டுப் போவது எனக்கு விருப்பம் அன்று.

வேறு அவசியமான வேலை உங்களுக்கு ஒன்றும் இராதென்று எண்ணுகிறேன். இங்கே தங்குவதிலும் உங்களுக்குத் தடை இருக்க நியாயமில்லை. உபசார வகையில் ஏதேனும் குறையிருந்தாலும் பொருட்படுத்தாமல் இங்கே இன்னும் சில நாட்களேனும் தங்கினால் எனக்கு மகிழ்ச்சியாக இருக்கும்" என்றும் சொன்னான்.

"தங்களுடைய திருவுள்ளப்படியே தங்களுக்கு எப்போது எங்கள் இசையைக் கேட்கமுடியுமோ அப்போது கேட்கலாம். எங்களுக்கு இங்கே கிடைக்கும் உபசாரம் 'இது தான் சொர்க்கபோகமோ' என்று நினைக்கும் படியாக இருக்கிறது. இவ்வளவு நாட்களாக இங்கே வராமற்போனோமே என்று ஒவ்வொரு கணமும் நினைக்கிறோம்" என்று பாணன் விடை பகர்ந்தான்.

★

மேலும் ஒரு வாரம் பாணனுடைய பாட்டைக் கேட்கும் செவ்வி நள்ளிக்குக் கிடைக்கவில்லை. பாட்டைக் கேட்கவேண்டுமென்ற ஆசை நாளுக்கு நாள் அவனுக்கு மிகுந்து வந்தது. கடைசியில் ஒரு நாள் மாலை பாணனும் அவனைச் சார்ந்தவர்களும் தங்கள் யாழை வாசித்தும் பாடியும் காட்டுவதற்கு ஏற்பாடு ஆயிற்று. வேறு ஊர்களிலிருந்து நள்ளியைக் காண்பதற்குச் சிலர் வந்திருந்தார்கள். புலவர்கள் சிலரும் வந்தார்கள். வன்பரணர் என்ற புலவர் பெருமானும் வந்திருந்தார். இத்தனை பேரும் இருக்கும்போது பாணனைப் பாடச் சொன்னால், அந்த இசையை யாவரும் அநுபவிக்கலாம், பாணனுக்கும் பெரு

மகிழ்ச்சி உண்டாகும் என்ற எண்ணத்தால் அன்று இசையரங்கு நிகழும்படி திட்டம் செய்தான்.

வந்திருந்த பாணன் நள்ளியின் முன் இது காறும் யாழை வாசிக்கவில்லை. ஆனாலும் ஒவ்வொரு நாளும் தனியே இருந்து யாழை வாசித்துக் கொண்டிருந்தான். இசையில் வல்லவர்கள் நாள் தவறாமல் இசைப் பயிற்சியை விடாமல் செய்து வந்தால் தான் இசைத் திறமை அவர்களிடம் நிலைத்து நிற்கும். அன்று காலை பாணன் நெடுநேரம் யாழை வாசித்துக் கொண்டிருந்தான். கலைஞர்கள் தம் கலையினால் விளையும் இன்பத்தில் தாமே ஆழ்ந்து தம்மை மறந்து விடுவார்கள். இந்தப் பாணன் அன்று காலையில் யாழை வாசித்தான். ஒவ்வொரு நேரத்துக்கும் இன்ன இன்ன பண் உரியதென்ற வரையறை உண்டு. காலைநேரத்துக்கு உரியது மருதப் பண். மாலைநேரத்தில் பாடுவதற்குரியது செவ்வழிப் பண். பாணன் மருதப் பண்ணை மிகவிரிவாகப் பாடினான். அவன் இந்த உலகத்தையே மறந்து மருதப்பண்ணின் இசைக் கூறுகள் அலை யலையாகப் பரவிமோத அந்தக் கடலில் வேறு ஒன்றையும் காணாத நிலையில் ஈடுபட்டிருந்தான். யாழ் வாசிப்பதை நிறுத்தினபிறகும் மருதப்பண் அவன் காதிலும் கருத்திலும் ஒலித்துக் கொண்டே இருந்தது. அதனுடைய ஆரோகண அவரோகண கதியிலே அவன் இன்னும் மூழ்கியிருந்தான்.

மாலையில் நள்ளி தன் அவைக்களத்தில் வீற்றிருந்தான். அவனுக்கு அருகில் வன்பரணர் அமர்ந்திருந்தார். இருபக்கங்களிலும் வேறு சில புலவர்களும் நண்பர்களும் அதிகாரிகளும் அயலூர்க்காரர்

களும் இருந்தார்கள். எதிரே பாணனும் அவனைச் சார்ந்தாரும் தங்கள் தங்கள் இசைக்கருவிகளுடன் உட்கார்ந்திருந்தனர். பாணர்தலைவன் முன்னே அமர்ந்திருந்தான்.

இசையரங்கு தொடங்கியது. யாழுக்குச் சுருதி சேர்த்தார்கள். முதலில் பாணர் தலைவனே வாசிக்கத் தொடங்கினான். காலையில் மருதப்பண்ணிலே தோய்ந்து நின்ற அவன் உள்ளம் இன்னும் அந்த நிலையினின்றும் மாறாமலே இருந்தது. இப்போது மாலை; முறைப்படி செவ்வழிப்பண்ணை வாசிக்க வேண்டும். ஆனால் பாணன் உள்ளமும் காதும் இன்னும் மருதப்பண்ணிலே லயித்திருந்தன. ஆதலின் அவன் பாடத் தொடங்கியபோது அவனையே அறியாமல் அவன் விரல்கள் மருதப் பண்ணின் சுரங்களை எழுப்பின. எழுப்பின பிறகு அதன் இன்னிசை ஒலி மீட்டும் அவனைக் காலையிலே யாழ்வாசிக்கிறோம் என்ற பிரமையை உண்டாக்கியது; காலையில் வாசித்ததன் தொடர்ச்சியாக வாசிப்பதாகவே அவன் எண்ணிக்கொண்டு விட்டான். அப்படிச் சொல்வதைவிட, இப்போது மாலை என்ற நினைப்பே அவன் உள்ளத்திலே தோன்றவில்லை என்று சொல்வதுதான் பொருத்தமாக இருக்கும்.

ஆரம்பத்தில், 'மாலைநேரத்தில் இவர் மருதப் பண்ணைப் பாடுகிறாரே' என்று இசையிலக்கணம் தெரிந்தவர்கள் மயங்கினார்கள். நள்ளியும் அப்படியே எண்ணினான். சிறிது நேரம் கழித்து யாவரும் அந்தப் பண்ணின் இனிமையில் ஆழ்ந்துபோனார்கள்.

பாணன் வாசித்துக் கொண்டே போனான். அவனுடைய மருதப்பண் இசையிலே காலை நேரத்தின்

அமைதி பரவியது தாமரை மலர் மலரும்போது வண்டுகள் மெல்லென்ற ஒலியோடு அதில் புகுவது போன்ற நினைப்பு உண்டாயிற்று. எங்கும் புது விழிப்பும் கலகலப்பும் மூளவிடுவது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. கீழ் ஸ்தாயியிலிருந்து மெல்ல மெல்ல மேலே ஏறினன். கூட்டில் இருந்த பறவை ஜிவ்வென்று மேலே போகிற மாதிரி இருந்தது. ஆடாமல் அசையாமல் பாணன் பாடினன். அனை வரும் கேட்டார்கள். பாட்டு ஒரு வகையாக முடிவு பெற்றது. மருதப்பண்ணென்னும் இசைக்கடலின் மறுகரை இன்னும் தெரியவில்லை. சிறிது நேரம் கேட்பவர்களுடைய மனம் மருதப்பண்ணோடே சஞ் சாரம் பண்ணிக் கொண்டிருந்தது. இனி அடுத்த பாட்டு ஆரம்பமாகவேண்டும்.

அதற்குள் நள்ளி மருதப் பண்ணிலே ஆழ்ந்து கிடந்த மயக்கத்திலிருந்து விழித்து எழுந்தான். "அருமையிலும் அருமை! மருதப் பண் காலை நேரத்தையே இப்போது இங்கே கொண்டு வந்து விட்டது. பாணர் இது மாலை என்பதை மறந்து மருதத்தை வாசித்தார். நாமும் மாலையை மறந்து காலை என்ற உணர்ச்சியோடு இந்தப் பண்ணைக் கேட்டு இன்புற்றோம். இதுவரையிலும் பலர் பாடி இந்தப் பண்ணைக் கேட்டிருக்கிறேன். ஆனல் இது ஒரு தனிச் சிறப்புடையதாக இருந்தது" என்று பாராட்டினன். அந்தப் பாராட்டினூடே, அவனுக்கு இசையைப் பற்றிய செய்திகளும் தெரியும் என்ப தைக் காட்டிக் கொண்டான்.

அவன் பேசியபொழுது அவன் கூறிய பாராட் டுரைகளைக் கேட்டு மகிழவில்லை பாணன். "காலை

நேரத்தில் பாடவேண்டிய பண்ணை இப்போது பாட லாமா?" என்று சுட்டிக் காட்டுவது போலவே தோன்றியது. தன்னுடைய பிழையை அப்பொழுது தான் உணர்ந்தான். முறைப்படி மாலைக்குரிய செவ்வழிப் பண்ணைப் பாடியிருக்கவேண்டும். காலையிலே பாடிய மருதப் பண் அவனை ஆட்கொண்டு மூழ்க்கி விட்டது. அதனால் இவ்வளவு பெரிய பிழையைச் செய்துவிட்டான்.

நள்ளியின் பேச்சு, பாணனுக்கு உண்மையை உணர்த்தியது. அவன் முகம் வாடியது; உடம்பு வேர்த்தது. நள்ளி குறைகூறும் முறையில் ஒன்றும் சொல்லவில்லை. ஆயினும் அவன் மருதம் காலைப் பண் என்பதை உணர்ந்து பேசினான். சிறந்த புலமையும் மானமும் உடைய பாணனுக்கு அந்தக் குறிப்பே போதுமானதாக இருந்தது.

பாணன் சித்திரப் பொம்மைபோல இருந்தான். அவனுடைய மனம் ஏதோ பெரிய பிழையைச் செய்துவிட்டது போலத் துன்புற்றது. அவன் அகத்திலே தோன்றிய வேதனை முகத்திலே தெரிந்தது.

புலவர் வன்பரணர் அவன் முகத்தைக் கவனித் தார். நள்ளியின் பேச்சினால் தான் செய்த பிழையை உணர்ந்து செயலற்ற நிலையில் அவன் இருப்பதை உணர்ந்தார். கலைஞன் தவறு செய் தால் அதற்கு ஏதோ காரணம் இருக்கவேண்டும். அதைத் தெரிந்து கொள்ள இப்போது முடிய வில்லை. என்ன காரணம் என்ற ஆராய்ச்சியைச் செய்து கொண்டிருப்பது இப்போதுள்ள நிலையைப் பின்னும் நயமற்றதாக்கிவிடும். ஆகவே இந்தக்

குழப்பமான நிலையை மாற்றவேண்டும் என்று எண்ணினர் வன்பரணர்.

"வள்ளற் பெருமானே!" என்று வன்பரணர் பேசத் தொடங்கினர். எல்லோர் முகங்களும் அவரை நோக்கித் திரும்பின.

"பாணர் தலைவர் இப்போது மருதம் வாசித்த தற்கு ஏதாவது தக்க காரணம் இருக்கும். ஆனாலும் காலமல்லாத காலத்தில் இந்தப் பண்ணை வாசித்தது அவருடைய புலமைக் குறை யென்று தோற்ற வில்லை. அதற்கு மூலகாரணம் தங்களுடைய வள்ளன்மைதான்" என்றார் புலவர்.

புலவர் என்ன சொல்லப் போகிறார் என்று எல்லோரும் கூர்ந்து கவனித்தனர்.

"கலைஞர்களைப் போற்றிப் பாராட்டி உண வூட்டி ஊக்கமளிப்பதே தங்களுடைய வாழ்க்கையின் முதற் கடமையாகக் கொண்டிருக்கிறீர்கள். நாங்க ளெல்லாம் வறுமையோடு உறவாடுகிறவர்கள். நாலு பேரைப் பார்க்க வேண்டுமென்று எண்ணுவோம். சும்மா பார்க்கலாமா? கற்ற வித்தையைக் காட்டிப் பரிசு பெறவேண்டும். ஆதலால் எப்போதும் மேலும் மேலும் பயிற்சி செய்துகொண்டே இருப் போம்."

புலவர் என்ன சமாதானம் சொல்லப் போகிறார் என்று இன்னும் ஒருவருக்கும் புலப்படவில்லை. அவர்களுடைய ஆவல் அதிகமாகிக் கொண்டே வந்தது.

"இங்கே நாங்கள் வந்துவிட்டால் வேளைக்கு வேளை அளவுக்கு மிஞ்சிய உணவு. அதைச் சாப் பிட்டால் உடனே இளைப்பாற வேண்டியிருக்கிறது.

இளைப்பாறி எழுந்தால் மறுபடியும் ஏதாவது சிற்றுண்டி வந்துவிடுகிறது. இப்படி விருந்துண்பதும் இளைப்பாறுவதுமாக இங்கே நாட்களைக் கழித்தால் நாங்கள் கற்ற வித்தையும் இளைப்பாறப் போய்விடுகிறது. யாழ் வாசித்துக் கொண்டே இருக்கும் எங்களவர்களைத் தாங்கள் விருந்து போட்டுச் சும்மா தூங்கப் பண்ணுகிறீர்கள். தங்களுடைய வள்ளன்மை இன்ப மயக்கத்தை உண்டு பண்ணிவிடுகிறது. அதனால் என்றைக்காவது யாழை எடுத்து வாசித்தால் நேரமே தெரிவதில்லை; இன்ன நேரத்துக்கு இன்ன பண் என்ற முறையும் மறந்து போகிறது. மாலைக் காலத்தில் மருதம் வாசிக்கிறோம்; காலை நேரத்தில் செவ்வழிப் பண்ணை இசைக்கிறோம். இவ்வளவுக்கும் காரணம் தாங்கள் எங்களுக்குச் செய்யும் உபசாரந்தான். இது தவறாக இருந்தால், அதற்குக் காரணமாகிய தங்கள் வள்ளன்மையும் தவறாக முடியும்."

புலவர் சொல்லி முடித்தவுடன் எல்லோரும் மகிழ்ச்சியினால் ஆரவாரம் செய்தார்கள். நள்ளியின் வள்ளன்மையைப் புகழ இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக்கொண்டு, அப்போது அங்கே இருந்த, களை இழந்த நிலையை அவர் மாற்றினாரே என்று தமக்குள் வியந்தார்கள்.

"நான் தவறென்று சொல்லவில்லையே! காலைப் பண்ணை இப்போது பாடினாரென்பதைப் பின்னாலேதான் உணர முடிந்தது. பாட்டு முடிகிற வரையில் நம்மையே மறந்து கேட்டோமே" என்று நள்ளி புலவரை நோக்கிச் சொன்னான்.

பாணனுக்குச் சற்றே உணர்வு வந்தது. குனிந்த தலை நிமிர்ந்தது. அந்தச் சமயம் பார்த்து, "இப்போது பாணனார் மாலைக்குரிய பண்ணைப் பாடப் போகிறார். மாலைப் பொழுதும் மாலைப் பண்ணும் சேர்ந்தால் எப்படி இருக்கும் என்பதை நாம் அறிந்து இன்புறலாம்" என்று நள்ளி நயமாகச் சொன்னான்.

பாணன் புது முறுக்குடன் யாழை மீட்டிச் செவ்வழிப் பண்ணை இசைக்கத் தொடங்கினான்.

புலவர் நள்ளியிடம் சொன்னதை அவர் பாட்டாகவே பிறகு இயற்றிச் சொன்னார். அந்தப் பாட்டு வருமாறு :

**நள்ளி வாழியோ நள்ளி ! நள்ளென்**
**மாலை மருதம் பண்ணிக் காலைக்**
**கைவழி மருங்கின் செவ்வழி பண்ணி**
**வரவுஎமர் மறந்தனர்; அதுநீ**
**புரவுக்கடன் பூண்ட வண்மை யானே.**

**இதன் பொருள் :** நள்ளியே, நீ வாழ்வாயாக! செறிந்த மாலையில் மருதப் பண்ணை வாசித்துக் காலையில் யாழில் செவ்வழிப் பண்ணை இசைத்து எம்மைச் சார்ந்தவர்கள் வரலாற்று முறையை மறந்துவிட்டார்கள்; அது நீ அவர்களை உபசரித்து விருந்துண்ணச் செய்து பாதுகாக்கும் கடமையை மேற்கொண்ட வள்ளன்மையால் வந்த விளைவு.

[கைவழி - யாழ். பண்ணி - பாடி. வரவு - வரன்முறை; மரபு. புரவு - காப்பாற்றுதல். வண்மை - கொடைத்தன்மை.]

# மீண்ட குழந்தைகள்

2000 ஆண்டுகளுக்குமுன் கிள்ளி வளவன் என்னும் அரசன் உறையூரில் ஆண்டு கொண்டிருந்தான். திருக்கோவலூரில் மலையமான் என்னும் வீரன் ஒருவன் இருந்தான். அவன் எந்த அரசனுக்குப் போரில் துணையாகச் செல்லுகிறனே அவனுக்கு நிச்சயமாக வெற்றி உண்டாகும். அதனால் அவனிடத்தில் மன்னர்களுக்கெல்லாம் அச்சம் இருந்து வந்தது.

## காட்சி 1

**இடம்:**—கிள்ளி வளவன் அரண்மனை; அரசன் வீற்றிருக்கிறன். சூழ மந்திரிகள் வீற்றிருக்கின்றனர்.

**வளவன்:**—எவ்வளவு ஆறுதலாக இருக்கிறது! இந்த ஒரு வாரமாக நான் அடைந்து வரும் இன்பத்துக்கு எல்லையே இல்லை. நம்மோடு போர் புரிய வரும் அரசன் யாராக இருந்தாலும் நம்முடைய படைப்பலத்தால் வென்றுவிடலாம் என்ற நிச்சயம் நமக்கு ஏற்பட்டிருக்கிறது.

**ஒரு மந்திரி:**—அரசே, இன்னும் நாம் படைகளை மிகுதிப்படுத்த வேண்டியது அவசியம்.

**வளவன்:**—அது தெரியும். ஆனல் எவ்வளவு மிகுதியாக இருந்தாலும் நம்முடைய பகைவன் படையில் மலையமான் சேர்ந்து விட்டால் என்ன செய்வது என்ற பயத்தோடல்லவா இதுவரைக்கும் இருந்தோம்? வெற்றியோ தோல்வியோ போரிடும் மன்னர்களின் படைப்பலத்தைப் பொறுத்து நிற்பது தான் இயற்கை. தமிழ் நாட்டில் அந்த இயற்

கைக்கு மாருக மலையமான் வந்து முளைத்தான். அவனுடைய துணை யாருக்குக் கிடைக்கிறதோ அவனுக்கே வெற்றி என்றுதானே இன்று வரைக்கும் இருந்தது? மலையமான் இறந்து விட்டான் என்ற செய்தி என் காதில் ஜிலு ஜிலு வென்று விழுந்தது.

ஒரு புலவர் :—அரசே, அப்படிச் சொல்லக்கூடாது. ஒரு மகாவீரனை நாம் பாராட்டவேண்டியது அவசியம். அவன் இருக்கும் போது அவனை நாம் மனத்துக்குள் வியந்து கொண்டிருந்தோம். அது தான் வீரர்களுக்கு அழகு.

வளவன்:—புலவரே, நீர் சொல்வீர். சண்டையில் கலந்து கொண்டு போர் செய்தவர்களுக்குத் தெரியும், அவனுடைய பயங்கரமான பலம். அப்பா! வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டல்லவா போர் செய்ய வேண்டியிருந்தது? இப்போது படைத் தலைவர்கள் நன்ருகத் தூங்குவார்கள். அவரவர்கள் தங்கள் தங்கள் படைப்பலத்தைக் காட்டி வெற்றி பெற முயல்வார்கள். இனி மலையமானல் தமிழ் நாட்டுக்குப் பயம் இல்லை.

புலவர் :—மன்னர் பெருமானே, நான் சொல்வது தவருக இருந்தாலும் சற்றுக் கேட்டருள வேண்டும். மெய்யான வீரம் யாரிடம் இருந்தாலும் அதைப் போற்ற வேண்டும். மலையமானைக் கண்டு பயந்தோம் என்று சொல்வது வீரமாகாது. அவன் இறந்தபிறகும் இருப்பவர் கூட்டத்தைச் சேர்ந்தவன். அவனைப்போன்ற வள்ளல்கள் சிலரே இந்த உலகத்தில் இருப்பார்கள். சேர சோழபாண்டிய மன்னர்களுக்குச் சமானமான

புகழ் அவனுக்கு இருக்கிறது. அதன் காரணம் என்ன?

அரசன்:—காரணம் என்ன? அவர்கள் அவனிடம் நீ எங்களுக்குத் துணையாகவேண்டும் என்று சொல்லி நின்றார்கள். அவனும் கூலிக்கு வேலை செய்வது போல அவர்கள் கொடுக்கும் பொருளை நச்சிப் போர் செய்தான்.

புலவர்:—அப்படிச் சொல்வது நியாயம் ஆகாது. அவன் கூலிக்குப் போர் செய்யவில்லை. அவன் தங்களுக்கு வெற்றியைச் சம்பாதித்துக் கொடுத்தான் என்பதை நினைந்து அரசர்கள் அவனுக்குப் பரிசில் தந்தார்கள்; காணிக்கை செலுத்தினார்கள் என்று சொன்னால் கூடத் தவறாகாது. அவன் அந்தப் பொருளை என்ன செய்தான்? தன் இன்ப வாழ்க்கைக்காகச் செலவிடவில்லை. என் போன்ற புலவர்களுக்கு வாரி வாரி வழங்கினான்.

அரசன்:—(கை கொட்டிச் சிரித்து) ஹ ஹ ஹ! இப்போது தெரிகிறது உண்மை. அரசர்கள் தந்த பணத்துக்காக மலையமான் போரிட்டான். அவன் தந்த பொருளுக்காக நீங்கள் அவனைப் புகழுகிறீர்கள். நீர் என்னுடன் சொற்போரிடுகிறீர்.

புலவர்:—அரசே, நான் கைக்கூலி வாங்கிக்கொண்டு பட்சபாதமாகப் பேசுவதாகத் தாங்கள் எண்ணுவது தர்மம் அன்று. மலையமான் இன்று உயிரோடு இல்லை. அவன் தயையை எதிர்நோக்கி நான் அவன் புகழைப் புனைந்துரைக்க வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. எங்களுக்கு எல்லோரும் நண்பினர். யாரும் பகைவர் இல்லை. உண்மையைச் சொல்வது எங்கள் அறம். இது

அரசர் பிரானுக்கு இப்போது கசப்பாக இருக்கும். ஆராய்ந்து பார்த்தால் என் வார்த்தைகளின் உண்மை விளங்கும். ஹூம்....அதிகமாகப் பேச்சை வளர்த்த நான் தான் காரணமானேன். இதோ நான் விடை பெற்றுக் கொள்கிறேன்.

(புலவர் விரைவாகப் போகிறார், தடியை ஊன்றிக்கொண்டு.)

**அரசன் :-** புலவருக்கு எவ்வளவு கோபம் பாருங்கள்! எங்களிடம் கூலி வாங்கிப் பிழைத்த ஒருவனை என் முன்னிலையிலேயே புகழ்கிறார். உண்மையாம்! வீரமாம்! இவர்களை யெல்லாம்கூடத் தன் பக்கத்தில் வைத்துக்கொண்ட மலையமான் மிகவும் பொல்லாதவனாகத்தான் இருக்கவேண்டும். சரி, இனி அவனைப்பற்றி என்ன பேச்சு? ஒழிந்தான்....அவனுக்குப் பிறகு அவன் பெயரைச் சொல்ல யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. பூண்டோடு நாசமாகி விட்டது அவன் குலம்.

**மந்திரி :-** (கனைத்துக் கொண்டு) அரசே, அவனுக்கு இரண்டு குமாரர்கள் இருக்கிறார்களாம்.

**அரசன் :-** (திடுக்கிட்டு) ஹா! என்ன? பிள்ளைகளா? அவனுக்கா? அப்படி இருப்பதாக நான் கேள்விப்படவில்லையே! இருந்திருந்தால் அவர்களும் போரில் தலைகாட்டி யிருப்பார்களே?

**மந்திரி :-** அவர்கள் இளங் குழந்தைகளாம்.

**அரசன் :—** அப்படியா! (சிறிது யோசிக்கிறான்)........ அட, அப்படியானால் நான் நினைத்தபடி அவன் குலம் நாசமாகவில்லையா? மழை விட்டும் தூவானம் விடவில்லை போலும்!....அமைச்சரே, எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. செய்யலாமா?

மந்திரி :—அரசர்பிரான் ஆணையிடட்டும்.

அரசன் :—அவர்கள் சிறு குழந்தைகள் என்று சொல்கிறீரே. குழந்தைகளாக இருந்தாலும் நாளைக்குப் பெரியவர்களாகிவிட்டால் அவர்கள் தகப்பனைப் போல அரசர்களுடைய பயத்துக்குக் காரணமாய் இருக்கக்கூடும். குட்டியாக இருந்தாலும் பாம்பு பாம்புதான். சிறிய பாம்பானாலும் பெரிய தடி கொண்டு அடிக்கவேண்டும். ஆகவே, அந்தக் குழந்தைகளையும் தகப்பன் போன இடத்துக்கே அனுப்பிவிட்டால்........?

மந்திரி :—(திடுக்கிட்டு) என்ன! மன்னர்பிரான் சொல்வது விளங்கவில்லையே! அந்தக் குழந்தைகளைக் கொல்........

அரசன் :—அதுதான் சொல்கிறேன். முள் மரத்தைச் சிறியதாக இருக்கும் போதே களைந்து விட வேண்டும்.

மந்திரி :—(தடுமாற்றத்துடன்) உ.....ல....க....ம் பழிக்குமே!

அரசன் :—என்ன? உலகமா? தனி மனிதனுக்கு உரிய தர்மம் வேறு; அரசியல் தர்மம் வேறு. நாளைக்கு அவர்கள் பெரியவர்களாகிப் பலபேருடைய நாசத்துக்குக் காரணமான பிறகு அவர்களை அழிக்க முயல்வதைவிட இப்பொழுதே செய்து விடுவது மேல். சரி....தக்க ஆட்களைக் கொண்டு அந்தச் சிறுவர்களைச் சிறையெடுத்து வர ஏற்பாடு செய்யும்.

மந்திரி:—(குழப்பத்துடன்)அரசே சிறிதுயோசித்து....

அரசன் :—சட்! யோசிப்பது ஒன்றும் இல்லை. அந்த இரண்டு பாம்புக் குட்டிகளையும் நசுக்கி விடவேண்

டும். இதில் யோசனை செய்வது முட்டாள்தனம். சிறுவர்களைக் கொண்டு வர வேண்டியதுதான். வேறு பேச்சு இல்லை. போம்.

## காட்சி 2

இடம் :—அரண்மனையை அடுத்த பரந்த வெளி. பெருங் கூட்டத்தின் ஆரவாரம். தூரத்தில் களிறு ஒன்று பிளிறிக்கொண்டு நிற்கிறது, சங்கிலியாற் கட்டப்பட்டு. மற்றொரு பக்கம் மலையமான் குழந்தைகள் இருவரும் அழுதுகொண்டு நிற்கிறார்கள்.

**கூட்டத்தில் ஒருவன் :**—என்ன ஐயா அக்கிரமம்! கிள்ளிவளவனுக்கு இப்படியா புத்தி போகும்? சாமானிய மனிதன்கூட இந்தச் சிசுஹத்தி செய்ய அஞ்சுவானே!

**மற்றொருவர் :**—சிறு குழந்தைகளை இந்த யானைக் காலால் இடறச் சொல்லிக் கட்டளையிட்டிருக்கிறானே! இவனுடைய குலம் விருத்தியாக வேண்டாமா? பச்சைப்பசும் பாலகர்கள். ஒன்றும் அறியாத குழந்தைகள். இவர்கள் என்ன பாவத்தைக் கண்டார்கள்? இவர்களுடைய தகப்பன் இந்த அரசனுக்குப் பகைவன் என்றால் அதற்கு இவர்களிடமா பழிதீர்த்துக் கொள்வது? வீரனாக இருந்தால் மலையமானைச் சிறைப்பிடித்திருக்கலாமே! அவன் இருந்தபோது எல்லோரும் அடங்கிக் கிடந்தார்கள். இப்போது குழந்தைகளிடம் தங்கள் அரக்க இயல்பைக் காட்டுகிறார்களே!

**முதலில் பேசியவன் :**—மலையமானையா சிறைப் பிடிப்பது? மலையமான் இறந்து போயும் இவனை மருள

வைக்கிருனே! அவனல்லவா வீரன்? இவன் அரசனு? மனித உணர்ச்சி உள்ளவனு? குழந்தைகளைப் பெற்றவனு?

**இரண்டாமவர்** :—யாரேனும் வளவனை அணுகி இது அடாத காரியம் என்று சொல்லக் கூடாதா?

**முதல்வர்** :—மந்திரிமார்கள் சொன்னூர்களாம். இது சம்பந்தமாக அவைக்களப் புலவர்கூட அரசனிடம் கோபங் கொண்டு அரண்மனைக்கு வருவதில்லையாம்.

(குழந்தைகள் அழுகின்றன. ஜனங்கள் ஆரவாரம் செய்கின்றனர்.)

**இரண்டாமவர்** :—ஐயோ! பாவம்! குழந்தைகள் கதறுகின்றன. குழந்தைகளைத் தெய்வமாகப் போற்றும் இந்த நாட்டில் இந்தமாதிரி அதர்மச் செயல் நடப்பது நல்லதற்கு அல்ல. இதைப் பார்ப்பதைவிட நம் கண்களைப் பிடுங்கிக்கொண்டு விடலாம்.

(ஓர் ஆரவாரம். 'கோவூர்கிழார்!' என்ற சத்தம்.)

**கூட்டத்தில் ஒருவர்** .—புலவர் பிரான் கோவூர்கிழார் வருகிருராம். அரசனுக்குப் புத்தி சொல்ல வருகிருர் போலும்! கடவுளே இவரை அனுப்பியிருக்கிருர்.

**கோவூர் கிழார்** :—(வேகமாக நடந்து கொண்டே) அரசன் எங்கே? குழந்தைகள் எங்கே? இன்னும் தண்டனையை நிறைவேற்றவில்லையே?

**உடன் வருபவர்** :—இல்லை இல்லை; நிறைவேற்றக் காத்து நிற்கிருர்கள். அரசன் அதோ அரண்மனையில் மேல் மாடத்திலிருந்து பார்த்துக் கொண்டு நிற்கிருன். கூட்டம் அதிகமாக இருக்

கிறது. மக்களுடைய உள்ளக் கொதிப்பு மிகுதியாகி வருகிறது.

**கோவூர் கிழார் :—** அரசனிடம் நான் வருவதாகச் சொல்லி அனுப்புங்கள்; கூட்டத்தைச் சற்றே விலக்குங்கள்.

**உடன் வருபவர் :—** சற்று விலகுங்கள்; வழி விடுங்கள்.

(அரசன் கோவூர் கிழாரை வரவேற்க எதிர் கொண்டு வருகிறான்.)

**கோவூர் கிழார் :—** கிள்ளிவளவன் புகழ் மங்காமல் ஓங்குக!

**அரசன் :—** என்ன இப்படித் தங்களுக்கு மூச்சு வாங்குகிறதே! உடல் நிலை சரியாக இல்லையோ?

**கோவூர் கிழார் :—** வேகமாக வந்தேன். நல்ல வேளை! சரியான சமயத்தில் வந்து சேர்ந்தேன். என் உடல்நிலை சரியாகவே இருக்கிறது உள்ள நிலை தான் சரியாக இல்லை. தயைசெய்து அரசர்பிரான் என் சிறு விண்ணப்பத்தைக் கேட்டருள வேண்டும். இப்போது செய்யத் தொடங்கிய காரியத்தைச் சிறிது நிறுத்தி வைக்கவேண்டும். நான் இரந்து கூறுவதைச் செவியேற்றபிறகு திருவுள்ளத்துக்கு எதுஉடன்பாடோ அதைச்செய்யலாம்.

**அரசன் :—** ஓ! இதுவா? பகைவரால் அச்சம் நேராமல் நாட்டைப் பாதுகாப்பது அரசன் கடமை. அந்த நீதிபற்றி நான் இதை மேற்கொண்டேன். தாங்கள் இவ்வளவு வேகமாக வந்து ஒரு விஷயத்தைச் சொல்லப் புகும்போது நான் கேளாமல் இருப்பேனா? சொல்லுங்கள்.

**கோவூர் கிழார் :—** அரச நீதியை மன்னர் பிரான் உணர்ந்ததுபற்றி உவகை கொள்கிறேன்.

அதனை முற்றும் உணரவேண்டும் என்பதுதான் என் கருத்து. வளவர் பெருங்குலம் வழிவழியாகப் புகழை ஈட்டி வருவது. அரசர் பிரானது முன்னோர்களில் ஒவ்வொருவரும் உலகம் அறிந்த புகழை உடையவர்கள். பிற உயிரைத் தம் உயிர் போல் எண்ணும் பேரருளாளர்கள். ஒரு புறவுக்காகத் தன் உடம்பின் தசையை அறுத்துத் தந்த சிபியின் புகழ் இன்று இதிகாசத்தை உண்டாக்கியிருக்கிறது. அவனுடைய பரம்பரையில் வந்த பெருமான் நம் மன்னர்பிரான் என்பதை நினைக்கையில் என் உள்ளம் பெருமிதம் அடைகிறது. இக்குல முதல்வோர் மனித சாதிக்கு வந்த இடுக்கண்கள் பலவற்றை நீக்கியிருக்கிறார்கள்.

[குழந்தைகள் அழுகிறார்கள். ஜனங்களின் ஆரவாரம்.]

**கூட்டத்தில் ஒருவர்:**—(மெல்லிய தொனியில்) கோவூர் கிழார் வந்துவிட்டார். இனி இந்த அரசன் என்ன செய்யப் போகிறான், பார்க்கலாம்.

**கோவூர் கிழார்:**—கருணையாளர் வழிப்பிறந்த தோன்றலே, அதோ அழுகிற குழந்தைகள் யாரென்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். இவர்கள் குலம் மன்னர்பிரான் குலத்துக்கு எதிர் நிற்பதா? தங்களுக்குக் கிடைத்தவற்றை நாளைக்கு என்று வைக்காமல் புலவர்களுக்குக் கொடுத்துவிடும் பரம்பரையிலே பிறந்தவர்கள் இவர்கள்.

**கூட்டத்தில் ஒருவர்:**—(மெல்ல) அரசனுக்குச் சொல்லாமல் சொல்கிறார் ஐயா! கவனியும். நீ இவர்களைக் கொன்றால் புலவர்கள் சாபத்துக்கு ஆளாவாய் என்பதைச் சொல்லாமல் சொல்கிறார்! தெரியுமா?

**கோவூர் கிழார் :—** இவர்களுடைய தந்தையின் வீரமும் கொடையும் ஒருபால் இருக்கட்டும். இந்தக் குழந்தைகளைச் சற்று உற்று நோக்கும்படி அரசர் பெருமானைக் கேட்டுக் கொள்கிறேன். இவர்கள் முகத்தில் பால்வடிகிறதே! பச்சைக் குழந்தைகள்.

இவர்கள் தங்களுக்கு நேரப் போகும் துன்பத்தை நினைந்து அழவில்லை. எதற்காகத் தங்களை இங்கே கொண்டுவந்திருக்கிறார்கள் என்பதை உணர்ந்து கொள்ளக்கூட இவர்களுக்கு வயசு வரவில்லை. பாவம்! கூட்டத்தைக் கண்டு, எல்லாம் புதிதா யிருக்கிறதனால் அழுகிறார்கள்.

[களிறு பிளிறுகிறது. குழந்தைகள் அழுகையை நிறுத்துகிறார்கள்.]

அதோ, மன்னர்பிரான் தம் அருள் விழிப் பார்வையைச் சற்றே அக் குழந்தைகளின் மேல் செலுத்தட்டும். யானையைக் கண்டு அவர்கள் அழுகையை மறந்து விட்டார்கள். அழுகிற குழந்தைகள் பொம்மையைக் கண்டு சமாதானம் அடையவில்லையா? இவர்கள் பாவம்! தங்கள் உயிரை வாங்குவதற்காக வந்து நிற்கும் யானையைக் கண்டு, முன்பு அழுத அழுகையைக் கூட நிறுத்திவிட்டு வேடிக்கை பார்க்கிறார்கள். எவ்வளவு புனிதமானவர்கள்! என்ன பேதைமை! அரசர் பிரான் ஒன்றும் அறியாத இந்தக் குழந்தைகளைக் கண்டு மருண்டு இவர்களுடைய உயிரையே போக்கத் துணிகையில், இந்தக் குழந்தைகளோ உண்மையிலேயே தங்கள் உயிரை வாங்க வந்த யானையைக் கண்டு விநோதம் அடைகிறார்களே! இது இரங்கத் தக்கது அல்லவா? மன்னர்பிரான் திருவுள்ளத்தில்.......

**வளவன்** :—(கனைத்துக்கொண்டு உரத்த குரலில்) அமைச்சரே, தண்டனையை நிறுத்துங்கள். குழந்தைகளை விடுதலை செய்யச் சொல்லுங்கள். (தழுதழுத்த குரலுடன்) புலவர் பெருமானே! என்னைத் தாங்கள் பழியினின்றும் விடுவித்தீர்கள்....என் மன நிலை சரியாக இல்லை. என் வாழ்க்கைத் தங்களுக்குச் சமர்ப்பிக்கவேண்டும்....மற்றொரு முறை சந்திக்கிறேன்.

[அரசன் வேகமாகப் போய் விடுகிருன். கோவூர் கிழார் வேகமாகச் சென்று குழந்தைகளைக் கட்டிக் கொள்கிருர்.]

**கோவூர் கிழார்** :—இன்று கடவுள் திருவருளால் நீங்கள் உயிர் பிழைத்தீர்கள். (குழந்தைகள் அழுகை.)

[கூட்டத்தில் 'கோவூர் கிழார் வாழ்க!' என்ற கோஷம்.]

# வாழைப் பாட்டு

கும்பகோணத்துக்குத் திருக்குடந்தை என்ற பெயர் உண்டு; அது தமிழ்ப் பெயர். அந்த ஊருக்கு ஒரு முறை தமிழ் மூதாட்டியாராகிய ஒளவையார் வந்தார். ஒளவையாரைக் கலைமகளின் அவதாரம் என்று தமிழ் நாட்டினர் எண்ணி மதித்துப் பாராட்டி வந்தனர். அவரை எதிர் கொண்டு அழைத்துச் சென்று வேண்டிய உபசாரங்கள் செய்வதைப் பெரிய பாக்கியமாக யாவரும் நினைத்தனர்.

ஒளவையார் எங்கேயாவது போனால் அவரைத் தனியே செல்லும்படி யார் விடுவார்கள்? எப்போதும் அவருடனே தமிழ்ப் புலவர்களும் தமிழ் மாணாக்கர்களும் தமிழ்ச்சுவை தேர்ந்து இன்புறுகிறவர்களும் இருப்பார்கள். ஒளவையார் பேசுகிற ஒவ்வொரு சொல்லும் அவருடைய கல்வித்திறமையைக் காட்டும் என்ற நினைவால் அவரிடம் பேச்சுக் கொடுத்து அவருடைய நல்லுரையை வருவிக்கச் சிலர் விரும்புவார்கள். அவர் உள்ளம் கனிந்து ஏதேனும் கவிபாடும் போது அதைக் கேட்டு இன்புற வேண்டும் என்ற ஆர்வத்தோடு சிலர் அவரைச் சுற்றிச் சுற்றி வருவார்கள். திருக்குடந்தை அப்போதும் பெரிய நகரமாக இருந்தது. ஆதலால் அந்த நகரத்துக்கு ஒளவையார் வந்த போது ஒரு சிறிய கூட்டம் எப்போதும் அவருடனே இருந்து வந்ததில் வியப்பு ஒன்றும் இல்லை.

பல அன்பர்கள் ஒளவையாரைத் தம்முடைய இல்லத்துக்கு அழைத்துச் சென்றனர். யார் அன்

போடு அழைத்தாலும் செல்லும் இயல்பையுடைய தமிழ் மூதாட்டியார் அவர்கள் செய்த உபசாரங்களை ஏற்று மகிழ்ந்தார். இவ்வாறு அவரை அழைத்து விருந்து வழங்கிக் கொண்டாடியவர்களில் மருத்தனார் என்பவர் ஒருவர். அவர் விருந்தினருக்கு உணவளித்து உபசரிப்பதில் வல்லவர். இல்லறத்தின் பயன் விருந்தினர்களுக்கு உணவு அருத்துவதே என்ற நோக்கமுடையவர். பெரிய செல்வராக இரா விட்டாலும் தமக்கு இருந்த ஓரளவு பொருளைக் கொண்டு பசித்தவர்களுக்கு உணவு அளித்து அதனால் வரும் உவகையைப் பெரிதென எண்ணி வாழ்ந்து வந்தார்.

ஔவையார் மருத்தனார் வீட்டுக்குப் போனார். அந்த உபகாரி தெய்வத்தையே நேரில் கண்டவர் போல உடம்பு பூரிக்க ஆனந்தக்கண்ணீர் பெருக அப்பிராட்டியாரை வரவேற்றார். அவருடன் வந்தவர்களையும் அன்புமொழிகள் கூறி உபசரித்தார். அன்று ஔவையாரும் அவருடன் வந்த அன்பர்களும் அங்கே விருந்துண்டார்கள்.

உணவுகொண்ட பிறகு சிறிது நேரம் ஔவையார் அங்கே தங்கியிருந்தார். மருத்தனார் தம் வீட்டுப் புழைக் கடையில் வாழைத் தோட்டம் போட்டிருந்தார். ஔவையார் அங்கே சென்று பார்த்தார். வாழை மரங்கள் பல, இலைகளே இல்லாமல் இருந்தன. பலவற்றில் தாறுகளை வெட்டியிருந்தனர்.

உடன் இருந்த அன்பர்கள் சிலர் மருத்தனாருடைய அன்னதானத்தைப் பாராட்டினர். "இந்த வாழைத் தோட்டந்தான் இவருக்குக் கற்பகக் காடாக உதவுகிறது. எந்தச் சமயத்தில் யார் வந்தா

லும் இலையோ பூவோ காயோ இதிலிருந்து பறித்து வந்தவரை உபசரிக்கிறார். அதனால்தான் பலமரங்கள் மொட்டையாக இருக்கின்றன" என்று ஒருவர் சொன்னார். வாழைத் தோட்டத்தின் காட்சி அவர் கூறியதை மெய்ப்பித்தது.

சிறிதுநேரம் மருத்தனார் வீட்டில் இருந்து விட்டு ஒளவையார் விடை பெற்றுப் புறப்பட்டார். மருத்தனார் வாழ்ந்த தெருவுக்கு அடுத்த தெருவில் திருத்தங்கி என்ற ஒருவர் வாழ்ந்து வந்தார். அவரும் மருத்தனாரும் உறவினர்கள். ஆனால் இயல்பில் இரண்டுபேரும் நேர்விரோதமானவர்கள். திருத்தங்கி என்ற பெயரே அவருக்கு ஊர்க்காரர்கள் வைத்தது. அவருடைய தாய் தகப்பனார் வைத்த பெயர் இன்னதென்பதே யாவருக்கும் மறந்து போய்விட்டது. யாருக்கும் இம்மியளவும் ஈயாத லோபியாக அவர் இருந்தார். அதனால் அவரிடம் செல்வம் தங்கியிருந்தது. அது பற்றியே திருத்தங்கி என்ற பெயரை மற்றவர்கள் அவர்களுக்கு இட்டு வழங்கினார்கள். அந்தப்பெயர்குறிப்பாகத் தம் லோபத்தன்மையைக் காட்டுகிறதென்பதை அவர் சிறிதும் எண்ணவில்லை. தம்மிடத்தில் எப்போதும் திருமகள் விலாசம் இருப்பதாக மக்கள் பாராட்டுகிறார்கள் என்றே எண்ணிக் கொண்டார். அறிவாளிகள் லோபி, கஞ்சன், அறுத்த கைக்குச் சுண்ணாம்பு கொடுக்காதவன் என்று வைவார்கள்? நயமாகத் திருத்தங்கி என்று வையாமல் வைதார்கள். அந்த நுட்பம் திருத்தங்கி யாருக்குத் தெரியவில்லை.

தம்முடைய உறவினராகிய மருத்தனாரைக் கண்டால் அவருக்குப் பிடிக்காது. "பணத்தின் அருமை

தெரியாமல் ஊராருக்கெல்லாம் பொங்கிக் கொட்டு கிறான்" என்று சொல்லி ஏளனம் செய்வார். ஆனால் மக்கள் மருத்தனாரைப் பாராட்டுவதைக் கேட்கும் போது மாத்திரம் அவருக்குப் பொறாமை உண் டாகும்.

நிருத்தங்கியும் தம் வீட்டுக்குப் பின்புறத்தில் வாழைத் தோட்டம் போட்டிருந்தார். எப்படிப் பக் குவமாக அதற்கு நீர்பாய்ச்சி உரமிட்டு வளர்க்க வேண்டுமோ அப்படிச் செய்தார். அதில் ஒரு தூசி யைக் கூடப் பிறருக்கு உதவுவதில்லை. மரங்கள் தளதள வென்று வளர்ந்து நீண்ட குலைகளைத் தாங்கி நின்றன. சிலவற்றைக் குலைகளிலே பழுக்கும்படி விடுவார். தக்க சமயம் அறிந்து அவற்றை வெட்டி விற்றுவிடுவார். ஒரு சீப்புப் பழத்தையாவது கடவுளுக்கு நிவேதனம் செய்து உண்ணமாட்டார். எல்லாவற்றையும் காசாக்க வேண்டும் என்பதே அவர் நோக்கம்.

அவருக்கும் ஒளவையார் தம் ஊருக்கு வந்திருப் பது தெரிந்தது. மருத்தனார் வீட்டுக்குச் சென்றதை யும் அங்கே விருந்துண்டதையும் கேள்வியுற்றார். "நாமும் அந்தப் பாட்டியை அழைத்துவரலாம்" என்று அவருக்கு ஓர் எண்ணம் உண்டாயிற்று. அந்த மூதாட்டியாருடன் பலபேர் வருவதைக்கேட்ட போது, அவ்வளவு பேரும் உணவுண்ண உட்கார்ந் தால் என்ன செய்வது என்ற அச்சம் எழுந்தது. ஆகவே, மருத்தனார் வீட்டில் உணவு கொண்டபிறகு அவரை வருவித்தால் அதற்கு அவசியம் இராது என்று நினைத்து, அப்படியே அந்தச் சமயத்தில் ஓர் ஆளை அனுப்பினார்.

வந்தவர் ஔவைப் பிராட்டியாரைத் திருத்தங்கி யின் வீட்டுக்கு வர வேண்டு மென்று அழைத்தார். அப்போது உடனிருந்த சிலர், "அந்த லோபி வீட்டுக்கா!" என்று முணுமுணுத்தனர். அதை ஔவையார் கவனித்தார். கூப்பிடுகிற இடத்துக்குப் போவதனால் என்ன கேடு வந்துவிடப் போகிறது என்று அவர் வருவதாகச் சொல்லியனுப்பினர். மருத்தனாரிடம் விடை பெற்றுக்கொண்டவுடன் நேரே திருத்தங்கியின் வீட்டுக்குச் சென்றார்.

அந்த வீட்டுக்குள்ளே புகும்போது திருத்தங்கி எதிர்கொண்டு அழைத்தார். வீட்டைப் பார்த்தால் எங்கும் பளபள வென்று இருந்தது. கணத்துக்கு ஒரு முறை துடைத்து வைத்திருப்பார் என்று தோன்றி யது. ஔவையாரை ஓர் ஆசனத்தில் அமரவைத் தார் திருத்தங்கி. "உங்கள் வீடு புதுக்கருக்கு அழி யாமல் இருக்கிறது" என்றார் ஔவையார்.

"ஆம், உழைத்து ஈட்டிய பொருளைக் கொண்டு வீடு கட்டுகிறோம். நாம் வாழ்வதற்காகக் கட்டுகிறோம். கண்ட பேரை இங்கே வரும்படி அழைத்து, அவர்கள் இதன் அருமை தெரியாமல் குப்பை போட ஆரம் பித்தால் வீடு எதற்காகும்? 'பொருள்தனைப்போற்றி வாழ்' என்று நீங்கள் அருளிய திருவாக்கை நான் கடைப்பிடிக்கிறேன்" என்று திருத்தங்கி கூறினர்.

'பிறருக்குக் கொடுக்காத லோபத்தனம் தம்மி டம் இருப்பதைப் பெருமையாகச் சொல்லிக் கொள் கிறாரே இந்த மனிதர்!' என்று கூட்டத்தில் இருந்த சிலர் நினைத்தனர்.

'பாட்டியின் அமுதத் திருவாக்குக்கு இந்த லோபி தவருக அல்லவா பொருள் கொண்டிருக்

கிறன்? பொருள்தனைப் போற்றவேண்டும், போற்றி வாழவேண்டும். இவன் எங்கே வாழ்கிறன்?' என்று சிலர் எண்ணினர்.

ஔவையார் திருத்தங்கியின் பேச்சைக் கேட்டுப் புன்முறுவல் பூத்தார்.

" நீங்கள் மருத்தன் வீட்டுக்குப் போனதாகச் சொன்னுர்கள். வாழத் தெரியாத மனிதன் அவன். வீடு முழுவதும் எச்சிலும் துப்புமாக இருக்கும். எப்போதும் சோம்பேறிகளுக்குச் சோறு போடுவதும் அவர்கள் படுத்துப் புரளுவதற்கு இடங் கொடுப்பதுமாக அவன் இருக்கிறன். வீட்டைத்தான் நீங்கள் பார்த்திருப்பீர்களே! கண்ணுல் காணச் சகிக்கிறதா? அவன் வீட்டு வாழைத் தோட்டத்தைப் பார்த்தீர்களா?"

" பார்த்தேன்."

" இங்கே நானும் வாழைத்தோட்டம் போட்டிருக்கிறேன். வாழையை எப்படி வளர்க்கவேண்டும் என்று அந்த முட்டாளுக்குத் தெரியாது. நான் கண்ணைப்போல் காத்து வருகிறேன். நீங்கள் வந்து பார்த்து எனக்கு ஆசிகூற வேண்டும்" என்றுர் திருத்தங்கி.

'அதையும் பார்த்துவிடுவோம்' என்று ஔவையார் எழுந்தார். பின்புறத்துத் தோட்டத்துக்குத் தமிழ்ப் பாட்டியாரை அழைத்துச் சென்றுர் லோபியர் சிகாமணி. தோட்டத்தை ஔவையாரும் பிறரும் பார்த்தார்கள். வாழை மரங்கள் நன்முக வளர்ந்து குலை தள்ளிக் கண்ணைப் பறிக்கும் வகையில் நின்று கொண்டிருந்தன. மறுபடியும் கூடத்திலே வந்து அமர்ந்தார்கள்.

கூட்டத்திற் சிலர், 'அட படுபாவி! இத்தனை வாழைப் பழங்கள் மரத்திலே பழுத்திருக்கும்போது இந்தப் பிராட்டியாருக்குச் சில பழங்களைக் கொண்டு வந்து கொடுக்க மனம் வரவில்லையே!' என்று தமக்குள் அந்தச் செல்வரை வைதனர்.

திருத்தங்கி ஔவையாரைப் பார்த்து மிகவும் பணிவோடு பேசத் தொடங்கினர். "இப்போது தாங்கள் பார்வையிட்ட வாழைத் தோட்டம் எவ்வளவு நன்றாக இருக்கிறது! ஏதோ நீங்கள் நல்ல மனசு வைத்து இங்கே எழுந்தருளி என் வாழைத் தோட்டத்தையும் பார்த்தீர்கள். இது என் பாக்கியம். தாங்கள் இங்கே வந்தீர்கள், என் தோட்டத்தைப் பார்த்தீர்கள் என்று நாளைக்கு நான் யாரிடமாவது சொன்னால் நம்பமாட்டார்கள். நான் யாரையும் அழைப்பதில்லை; தோட்டத்தைக் காட்டுவதும் இல்லை. நீங்கள் இங்கே வந்ததற்கு ஓர் அடையாளம் வேண்டாமா? தங்கள் திருவாக்கால் அடியேனுக்கு ஆசிகூறி ஒரு பாட்டுப் பாடவேண்டும்" என்று கேட்டுக் கொண்டார். அப்போது அவர் முகத்தில் அசடு வழிந்தது.

'ஆள் கெட்டிக்காரன் ஐயா! இவனுக்குப் பாட்டு வேறு வேண்டுமாம்!' என்று சிலர் ஆத்திரப்பட்டனர்.

ஔவையார் புன்னகை பூத்தவாறே, "அப்படியா? பாட்டுத்தானே வேண்டும்? இதோ பாடுகிறேன்" என்று சொல்லிப் பாட்டைச் சொல்ல ஆரம்பித்தார்.

உடன் இருந்தவர்களுக்கெல்லாம் தூக்கி வாரிப் போட்டது. 'இது என்ன! உண்மையாகவா இந்தத்

தமிழ்ப் பெருமாட்டியார் இவனைப் பாடப்போகிறார்?' என்று ஒருவரை ஒருவர் தம் பார்வையாலே கேட்டுக் கொண்டனர்.

ஔவையார் உண்மையிலே ஒரு பாட்டைச் சொன்னார். அதில் அவருடைய சாதுரியம் நன்றாக விளங்கியது.

திருத்தங்கி வளர்க்கும் வாழையையும் மருத்தனார் வீட்டு வாழையையும் பற்றி அவர் பாடினார். எப்படிப் பாடினார்? அதுதான் ரசமான செய்தி.

'இந்தத் திருத்தங்கியின் வாழை எங்கே? அந்த மருத்தனுடைய வாழை எங்கே? திருத்தங்கியின் வாழை வளர்ந்து பூத்துக் காய்த்துப் பழுத்துத் தேன் சொட்டச் சொட்ட நிற்கிறது. மருத்தனுடைய வாழையோ!—அதை என்னவென்று சொல்கிறது? வாழையாகவா தோற்றமளிக்கிறது? மரம் இருக்கிறதே ஒழிய, இலை இல்லை; பூவே இல்லை; காய் எங்கே இருக்கப் போகிறது? குருத்தைக்கூட அல்லவா மொட்டையாக்கி விட்டான்?' இப்படி விரிவாக எண்ணும்படி பாட்டு வந்தது.

திருத்தங்கி தன்வாழை தேம்பழுத்து நிற்கும்.

என்று வெண்பா ஆரம்பமாயிற்று. அதைக் கேட்ட அந்த லோபி மனம் மகிழ்ந்தார். 'பாட்டின் ஆரம்பத்திலேயே நம் புகழை வைத்துவிட்டார்' என்று களித்தார். மேலே பாட்டு வளர்ந்தது.

மருத்தன் திருக்குடந்தை வாழை—குருத்தும்
இலையும்இலை பூவுமில்லை காயுமில்லை.

திருத்தங்கியின் காதில் இந்த அடிகள் விழுந்த போது அவருக்குப் பின்னும் ஆனந்தம் உண்டா

யிற்று. 'ஆகா! நன்றாகச் சொன்னார். அந்தப் பயலை அப்படித்தான் மட்டந் தட்டவேண்டும்' என்று குதூகலித்தனர். உடன் இருந்தவர்கள் பாட்டு எப்படி முடியப்போகிறது என்று ஆவலோடு எதிர்பார்த்தார்கள்.

> மருத்தன் திருக்குடந்தை வாழை—குருத்தும்
> இலையும் இலை பூவும் இலை, காயும் இலை என்றும்
> உலகில் வருவிருந்தோர் உண்டு.

'உலகில் எங்கெங் கிருந்தோ மக்கள் வருகிறார்கள். அவர்களெல்லாம் உண்டு உண்டு வாழை மரம் ஒரே மொட்டையாக இருக்கிறது. குருத்தைக்கூட அவசரத்துக்கு நறுக்கிப் போட்டுவிடுகிறார்' என்று பாட்டானது வாழை மரத்தைக் குறைத்துச் சொன்னாலும், மருத்தனுடைய அன்னதானத்தை மறைமுகமாகச் சிறப்பித்துச் சொல்லியது. கேட்ட தமிழன்பர்கள் தமிழ் மூதாட்டியார் வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போலத் திருத்தங்கியை இகழ்ந்திருப்பதை அறிந்து உள்ளே கிளுகிளுத்தார்கள்.

திருத்தங்கியோ, "நல்ல பாட்டு! இந்த ஏழையையும் ஒரு பொருளாக எண்ணிப் பாடினீர்களே!" என்று சொல்லிக் கீழே விழுந்து வணங்கினான். அதற்குக் காசு பணம் செலவில்லை யல்லவா?

# மாற்றிய பாட்டு

மதுரையில் ஆட்சி புரிந்து வந்த பராக்கிரம பாண்டியன் என்னும் அரசன் தமிழ்ப் புலவர்களிடம் மிகவும் மதிப்பு வைத்து உபசாரம் செய்பவன். வேறு எத்தகைய அரசியல் வேலைகள் இருந்தாலும், தமிழ்ப் புலவர்கள் வரின் அவர்களை எதிர்கொண்டு வரவேற்று உபசரித்து, அவர்களுடன் உரையாடித் தமிழ்ச் சுவை தெரிந்து இன்புறுவதில் அளவற்ற ஆர்வம் பூண்டவன். அப் பாண்டியன் என்பது தமிழ் நாடு முழுவதும் பரவிய செய்தி. இதனால் அடுத்தடுத்து அப் பாண்டியனிடம் புலவர்கள் வந்து போய்க் கொண்டிருந்தார்கள். தமிழ் நாட்டுப் புலவர்களில் அவனிடம் சென்று பரிசு பெறாத புலவர்களே இல்லை யென்று சொல்லலாம்.

ஒரு புலவர் பாண்டியனைப் பார்த்துப் பழகும் வாய்ப்புக் கிடைக்காமல் இருந்தார். சார்வபௌமர் என்பது அவர் பெயர். பல பிரபுக்களைக் கண்டு சென்று பாடிப் பரிசு பெற்றவர் அவர். பராக்கிரம பாண்டியனிடம் செல்ல வேண்டும், செல்ல வேண்டும் என்ற எண்ணம் மாத்திரம் அவருக்கு இருந்து வந்தது. வேறு புலவர்களைச் சந்திக்கும்போது, அவர்கள் பாண்டியனுடைய பெருமையையும் அவனிடம் தாங்கள் சென்று பெற்ற பரிசையும் எடுத்துச் சொல்வார்கள். அப்பொழுதெல்லாம், தாமும் பாண்டியனிடம் சென்று தம் புலமையைத் தெரி

வித்துப் பரிசு பெற்றுவர வேண்டும் என்ற அவா சார்வபௌமருக்கு உண்டாயிற்று.

பலநாள் நினைத்த காரியம் ஒருநாள் கைகூடும் என்ற நிலை வந்தது. புலவர் மதுரையை நோக்கிப் புறப்பட்டார். பல காலமாகப் பார்க்க வேண்டும், பார்க்கவேண்டுமென்ற ஆர்வம் அவர் உள்ளத்தே இருந்தமையால், அங்கே போனவுடன் இன்ன இன்ன நடக்கும் என்று கற்பனை செய்து கொண்டார். பாண்டியன் ஓடிவந்து உபசரிப்பானென்றும், தம்முடைய கவிகளைக் கேட்டு இன்புற்றுப் பாராட்டுவானென்றும், பலவகைப் பரிசுகள் அங்கே கிடைக்குமென்றும் அவர் கற்பனை விரிந்தது.

மதுரையை அடைந்தார் புலவர். அவர் வந்த வேளை நல்ல வேளை அன்று. பராக்கிரம பாண்டியன் பிறநாட்டுப் போர் விஷயமாகக் கவலையுற்று மந்திரிகளுடன் ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தான். இந்த ஆலோசனை பல நாட்களாக நடந்து கொண்டிருந்தது. புலவர் போன அன்றும் அவன் மந்திராலோசனையில் ஈடுபட்டிருந்தான்.

புலவர் அரண்மனையை அடைந்ததும், அவரை இன்னாரென்று அறிந்துகொண்டு, அதிகாரி ஒருவர், அவரை ஓரிடத்தில் தங்கச் செய்து வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்தார். பாண்டிய மன்னனைக் காணவேண்டுமென்ற ஆர்வத்தோடு வந்த புலவர், "மன்னரைப் பார்க்கலாமா?" என்று கேட்டார். "பார்க்கலாம். நீராடி உணவு கொண்டு இருங்கள். மன்னரைப் பார்க்கும் சமயம் தெரிந்து சொல்கிறேன். அப்பொழுது போய்க் காணலாம்" என்று அதிகாரி சொன்னார்.

புலவர் கட்டி யிருந்த மனக்கோட்டை தளர்ச்சி அடைந்தது. 'புலவர்களெல்லாம் பாண்டியனை வானளாவப் புகழ்ந்தார்களே! அப்படியே ஓடி வந்து கட்டிக் கொள்வான் என்று சொன்னார்களே! இங்கே நடப்பது வேறாக அல்லவோ இருக்கிறது?' என்று அவர் எண்ணினார். 'பார்க்கலாம்' என்று பொறுத்திருந்தார். அன்று முழுவதும் பாண்டிய மன்னனைப் பார்க்க முடியவில்லை. அதிகாரி, "இதோ பார்க்கலாம். மிகவும் முக்கியமான ஆலோசனையில் ஈடுபட்டிருக்கிறார். கொஞ்சம் பொறுத்திருங்கள்" என்றெல்லாம் சொல்லி வந்தார். இரண்டாவது நாளும் புலவரால் பாண்டியனைக் காண முடியவில்லை. புலவருடைய ஆர்வம் தளர்ந்தது; சிறிது கோபங்கூட வந்தது.

உண்மை என்னவென்றால், அதிகாரி பாண்டியனுக்குச் செய்தியையே தெரிவிக்கவில்லை. மிகவும் ரகசியமாக மந்திராலோசனை நடந்து வந்தமையால், அரசனைக் காண முடியாதென்று அவர் நினைத்தார். அன்றியும் அதிகாரிக்கு, மந்திராலோசனையைவிடப் புலவரைப் பார்ப்பது பெரிதாகத் தோன்றவில்லை. 'புலவர் இங்கே சௌகரியமாக விருந்துண்டு கொண்டு இருக்கட்டுமே. அரசருக்கு எப்போது பார்க்க இயலுமோ, அப்போது போய்ப் பார்த்துப் பேசிக் கொள்ளலாம். இப்பொழுதே போய்ப் பார்க்க வேண்டும் என்ற அவசரம் எதற்கு?' என்பது அவர் எண்ணம்.

புலவருக்கு உபசாரத்தில் குறைவில்லை; விருந்திலும் குறைவில்லை. ஆனால் அவர் வெறும் சோற்றுக்காகவா அங்கே வந்தார்? தமிழ்ச் சுவை தேரும்

அரசனோடு அளவளாவ அல்லவா வந்தார்? 'இவ்வளவு காலம் இங்கே வராமல் இறைவனே தடுத்து விட்டான். புலவனைப் பார்க்க முடியாமல் அவ்வளவு தலைமையான வேலை என்ன இருக்கப் போகிறது? இனி, இங்கே நாம் காத்திருப்பது பேதைமைச் செயல். புறப்பட வேண்டியதுதான்' என்று அவர் தீர்மானித்தார்.

அதிகாரியிடம், "உம்முடைய பாண்டிய மன்னரைப் பார்க்கும் செவ்வி எனக்குக் கிடைக்காதென்றே தோன்றுகிறது. அவர் தமிழ்ப் புலவர்களைத் தெய்வமாகப் போற்றுகிறவர் என்று சொல்லிக் கொண்டார்கள். ஆனால் இங்கே வந்த பிறகு எனக்கு உண்மை விளங்கி விட்டது. புலவனை மனிதனாக மதித்துப் பார்க்கக்கூட விரும்பாதவர் அவர் என்றே நான் நினைக்கவேண்டி யிருக்கிறது. சரி, நான் விடை பெற்றுக் கொள்கிறேன்" என்றார். அவருடைய பேச்சில் வெறுப்பும் கோபமும் தொனித்தன. அதிகாரி அப்போதுதான் தம் குற்றத்தை உணர்ந்தார். அரசனுக்குப் புலவர் வரவைத் தெரிவிக்காமல் நாள் கடத்தியதை எண்ணி நடுங்கினார்.

"புலவரேறே! மன்னர்பிரானை இன்று நீங்கள் அவசியம் பார்க்க முடியும் என்று நம்புகிறேன். இந்த ஒருநாள் பொறுத்திருங்கள்" என்று சொல்லி அதிகாரி, அரசனிடம் புலவர் வந்திருக்கும் செய்தியைத் தெரிவிக்கச் சென்றார்.

"சார்வபௌமர் என்ற புலவர் வந்து மூன்று நாட்களாகக் காத்திருக்கிறார்" என்ற செய்தி பாண்டியன் காதில் விழுந்தது. தன் அவைக் களத்துக்கு

அதுகாறும் வராத புலவர் அவர் என்பதை அவன் உணர்வான். "அவரை வந்தவுடனே என்னிடம் அழைத்து வருவதற்கு என்ன?" என்று கேட்டான். "மன்னர்பிரான் மந்திராலோசனையில் ஈடுபட்டிருந்தமையால்..............." என்று அதிகாரி சமாதானம் சொல்ல வந்தார். "ஆலோசனையைச் சிறிது நேரம் கழித்துச் செய்யலாம். புலவரைக் காத்திருக்க வைக்கலாமா?" என்று கோபத்துடன் கேட்டான் பாண்டியன்.

"சரி, இவ்வளவு நாள் காத்திருக்கும்படி செய்த குற்றத்திற்கு நான் பிராயச்சித்தம் செய்து கொள்ள வேண்டும். புலவர் என்னை வந்து பார்ப்பது கிடக்கட்டும். நானே அவர் உள்ள இடத்துக்குப் போய்ப் பார்ப்பேன். தமிழுக்கு நான் செய்த அபசாரத்துக்கு இதுதான் பரிகாரம்" என்று சொல்லிப் புறப்பட்டு விட்டான் பாண்டியன்.

அங்கே, புலவர் இன்னும் அதிகாரி வந்து சேரவில்லையே என்று கோபத்துடன் காத்திருந்தார். 'இந்த மன்னனைத் தமிழ் நயம் தெரிந்தவன் என்று சொல்வதெல்லாம் புரட்டு' என்று தம்முள்ளே கூறிக் கொண்டார். புலவருக்குக் கோபம் வந்தால் அது பாட்டாக உருக்கொள்ளும். சார்வபௌமரும் கோபத்தைப் பாட்டிலே காட்டத் தொடங்கினார். 'இவன் தமிழ் நூலறிவில் அகத்தியன் என்று சொல்வதெல்லாம் அறியாமை; உண்மை அல்ல' என்று சொல்ல ஆரம்பித்தார்.

**எண்ணீர்மை நூலுக்கு அகத்தியன் ஆம்இவன்**
**என்பதெல்லாம்**
**வெண்ணீர்மை யன்றி விரகல்ல.**

பாட்டு ஆரம்பமாகி விட்டது. அதற்கு முன்பே பாண்டியன் தன் இடத்திலிருந்து புறப்பட்டு விட்டான். பாட்டின் இரண்டடி முடிவதற்குள் அரசன் புலவரை நாடி வருகிறானென்பதை, அதிகாரி ஓடி வந்து சொன்னார். புலவருக்கு வியப்புண்டாயிற்று. 'இவ்வளவு நாள் காக்க வைத்த அரசன் நேரே வருவதாவது! இதில் ஏதோ சூதிருக்கிறது' என்று நினைத்தார். அதற்குள் அதிகாரி, "அடியேன் பிழை செய்து விட்டேன். மன்னருக்குத் தங்கள் வரவை இதுவரையில் சொல்லவில்லை. இப்போதுதான் சொன்னேன். அரசர் மிகவும் கோபமாக இருக்கிறார். நீங்களே என்னைக் காப்பாற்ற வேண்டும்" என்று புலவருடைய காலில் விழுந்தார்.

புலவருக்கு உண்மை விளங்கி விட்டது. தாம் காத்திருந்தது பாண்டியனுக்குத் துன்பத்தை விளைவித்திருக்கிறதென்பதை உணர்ந்தார். அவன் தம்மைப் பார்க்க வரும் இயல்பை எண்ணியபோது அவர் உடம்பு புளகம் போர்த்தது. அவர் மன்னனை எதிர்கொண்டழைக்கப் புறப்பட்டார்.

பாண்டியனும் புலவரும் சந்தித்தனர். "புலவர் பெருமானே, பிழை பொறுக்க வேண்டும்" என்று அரசன் கூறினான். "நான் முதலில் ஏமாற்றம் அடைந்தேன். ஆனால் உண்மை தெரிந்த பிறகு மாற்றம் அடைந்தேன். என் கவியும் மாற்றம் அடைந்தது" என்றார் புலவர்.

"கவி மாற்றம் அடைந்ததா? அது என்ன?" என்று ஆவலோடு கேட்டான் அரசன்.

புலவர் தாம் தொடங்கிய பாட்டை முடித்து விட்டார், ஆரம்பித்தபோது இகழ்ச்சியாகப் பாட

எண்ணியே ஆரம்பித்தார். பாட்டு முடிவதற்குள் புலவர் உண்மையை உணர்ந்து கொண்டார். இப்போது பாட்டைப் பாண்டியனுக்குரிய புகழைச் சொல்வதாக அமையும்படி பாடி முடித்து விட்டார். "அகத்தியன் என்று இவனைச் சொல்வது அறியாமை; உண்மைஅன்று" என்றல்லவா தொடங்கினர்? இப்போது, "அந்த அகத்தியன் இவனுடைய கால் கழுவிய நீரைக் குடித்தல்லவா தமிழைக் கற்றான்? அப்படி இருக்க இவனை அகத்தியன் என்று சொல்லலாமா?" என்ற பொருள் தோன்றும்படி பாட்டை முடித்தார்.

எண்ணீர்மை நூலுக் ககத்திய னும்இவன்
என்பதெல்லாம்
வெண்ணீர்மை அன்றி விரகல்ல—
விக்ரம மாறன் செஞ்சொற்
பண்ணீர்மை தேரும் பராக்ரம மாறன்
பதம்கழுவும்
தண்ணீர் குடித்தல்ல வோகும்பம் வந்தோன்
தமிழ்கற்றதே,

[எண்ணீர்மை-மனத்தால் எண்ணிச் சுவைக்கும் இயல்பை யுடைய. வெண்ணீர்மை - பேதைமை. விரகு - உண்மை. விக்ரம மாறன் - வெற்றியையுடைய பாண்டியன். கும்பம் வந்தோன் - குடத்திலே பிறந்த அகத்திய முனிவர்.]

பாண்டியன் பாட்டைக் கேட்டான்; பிரமித்துப் போனன். "நான் செய்த பிழைக்கு அகத்திய முனிவரல்லவா இகழ்ச்சி பெற்றார்?" என்றான்.

புலவர் உடனே, "நான் ஒன்றும் தவறாகச் சொல்ல வில்லையே! பழங் காலத்தில் இருந்த பாண்டிய மன்னர்களில் ஒருவனாகிய கடல் வடிம்

பலம்ப நின்ற பாண்டியன் கதையை மன்னர்பிரான் அறிந்திருக்கலாமே. கடலானது அப் பாண்டிய மன்னனுடைய திருவடியை அலம்பியது. அப் பாண்டியனையே நெடியோன் என்று புலவர்கள் சிறப்பிப்பார்கள். அந்தக் கடல் நீரை அகத்தியர் ஆசமனீயம் செய்தார் என்ற வரலாற்றையும் மன்னர் அறிந்திருக்கலாம். ஆகவே பாண்டிய மன்னன் பதங் கழுவும் தண்ணீரைக் கும்பமுனி குடித்தார் என்பது நான் புதிதாகச் சொல்லும் செய்தியல்லவே!" என்று விடை கூறினர்.

பாண்டியன் மேலே ஒன்றும் சொல்ல இயலாமல் அன்பும் வியப்பும் தோன்றப் புலவரைப் பார்த்தான்.

# செருக்கழிந்த புலவர்

சோழநாட்டிலேபிறந்து வளர்ந்த புலவர் அவர். தமிழ்ப் புலமையிற் சிறந்தவர். ஆயினும் இறுமாப்பு மிகுதியாக உள்ளவர். தம்முடைய புலமைத் திறத்துக்கு எதிரே யாரும் நிற்க முடியாமல் செய்யவேண்டும் என்ற கருத்துடையவர். சாமானியப் புலவர்களாக இருந்தால் கேள்வி கேட்டும், அவர்கள் பாடலிற் குற்றம் கண்டும் அவமானப் படுத்தும் இயல்புடையவர். நல்லவர்கள் அவரைக் கண்டால் பேசாமல் ஒதுங்கிவிடுவார்கள், சிறிய புலவர்கள் அஞ்சி விலகுவார்கள். சோழ நாடு முழுவதிலும் அவர் செருக்குள்ளவர் என்ற செய்தி தெரியாதவர் இல்லை.

அப்புலவர் பாண்டி நாட்டுக்குச் சென்று தம் புலமையை வெளிப்படுத்த வேண்டுமென்று நினைத்தார். அங்குள்ள புலவர்களைத் தலைகுனியச் செய்து மகிழவேண்டுமென்ற ஆசை அவருக்கு உண்டாயிற்று. மதுரையில் புலவர் பலர் இருப்பது அவருக்குத் தெரியும். இதுவரையில் அவர் அந்நகரத்துக்குச் சென்றதில்லை. பாண்டியனுடைய அவைக்களப் புலவர்களைக் கண்டு சோழன், சோழ நாடு, சோழ நாட்டுப் புலவர்கள் இவர்களின் பெருமையைச் சொல்லவும், தம் புலமையை வெளிப்படுத்தவும் விரும்பினார்.

மதுரைக்குப் போனார். பாண்டியனுடைய அவைக்களப்புலவர் இருக்குமிடம் சென்றார். அங்கே பல புலவர்கள் இருந்தார்கள். அவர்கள் சோழ

நாட்டுப் புலவரை அன்புடன் வரவேற்று உபசரித்தனர். புலவர்கள் மனங்கலந்து வாழும் இடம் மதுரை. அங்குள்ள புலவர்களிடம் பொறாமை சிறிதும் இல்லை; பெருந்தன்மையே உருவாக இருப்பவர்கள் அவர்கள். ஆகவே சோழநாட்டிலிருந்து ஒரு புலவர் வந்திருக்கிறார் என்றால் அவர்களுக்கு உவகை உண்டாவது இயல்புதானே? சோழ நாட்டுச் செய்திகளை யெல்லாம் விசாரித்து அறிந்து கொண்டார்கள்.

சோழ நாட்டுப் புலவர் பேசும்போதே அவர் பேச்சில் அகங்காரம் குமிழியிட்டது. பாண்டியன் அவைக்களப் புலவர்கள் அதைக் கவனித்தனர். சோழ நாட்டுப் புலவர், தாம் பல இடங்களுக்கும் சென்று கவிதை பாடிப் பிற புலவர்களை அடக்கி வென்று வந்த பிரதாபங்களை அடுக்கிக்கொண்டே போனார். சோழ நாட்டின் சிறப்புகளைச் சொல்ல மறந்தார்; சோழனைப் பற்றிப் பேச மறந்தார். தம்முடைய புகழையே கொட்டி அளந்தார்.

மதுரைப் புலவர்களில் தலைவராகிய ஒருவருக்கு இவரை எப்படியாவது தலைகுனியச் செய்ய வேண்டுமென்ற எண்ணம் தோன்றியது. 'படித்தவனும்! தமிழ்ப் புலவனும்! சிறிதாவது பணிவு இருக்கிறதா? தமிழின் எல்லையைக் கண்டவர் யார்? இவன் அகத்தியரின் அவதாரமாகத் தன்னை நினைத்துக்கொண்டு பேசுகிறானே!' என்று அவர்பால் அவமதிப்பே உண்டாயிற்று.

"அதெல்லாம் சரி, புலவரே! நாம் இப்போது ஏதாவது பாடல் சொல்லலாமே. உங்கள் சோழ மன்னனுடைய புகழை வைத்து ஒரு பாட்டுப் பாடுங்கள்" என்றார் புலவர் தலைவர்.

சோழநாட்டுப் புலவர் தக்க சமயம் வாய்த்த தென்று கருதிப் பாடலைச் சொல்ல ஆரம்பித்தார். சோழனுடைய வீரத்தைத் தெரிவிக்கும் பாடலாக ஒரு வெண்பாவைச் சொல்லலானர். "சோழன் மகா வீரன். போரில் புறங்கொடாது வெல்பவன். ஆகவே அவன் கவசம் அணியும்போது முதுகுக்குக் கவசம் அணிவதில்லை. யாருக்கும் முதுகு காட்டாத நிலையில் அதற்குப் பாதுகாப்பு எதற்கு?" பாட்டின் முதல் இரண்டடியைச் சொன்னர் புலவர்.

> வென்றி வளவன் விறல்வேந்தர் தம்பிரான்
>
> என்றும் முதுகுக் கிடான்கவசம்.

பின் இரண்டடியிலே இதற்குரிய காரணத்தைச் சொல்லலாம் என்று நினைத்திருந்தார். இரண்டடியைச் சொன்னவுடன் மதுரைப் புலவர் தலைவர் கைகாட்டினர். "புலவரே நிறுத்துங்கள்! இந்த வெண்பா யாருடைய புகழைச் சொல்வது?" என்று கேட்டார்.

"ஏன், இது கூடத் தெரியவில்லையா? எங்கள் சோழ மன்னனது புகழைத்தான் சொல்கிறது. அவன் புறமுதுகு காட்டாத பெரிய வீரன் என்பதை விளக்குகிறது" என்ருர் சோழநாட்டார்.

"இந்த இரண்டடியில் அப்படி இல்லையே! உங்கள் சோழன் முதுகுக்குக் கவசம் இடுவதில்லை என்பதுதானே இருக்கிறது?" என்று கேட்டார் புலவர் தலைவர்.

"ஆம்; அதற்குக் காரணம் அவன் புறமுதுகு காட்டாத வீரம் அன்ரே? இந்த இரண்டடியிலிருந்தே அதை ஊகித்துக் கொள்ளலாமே

பாட்டு முழுவதும் சொல்வதற்கு முன்பே இந்தப் பொருள் குறிப்பாகப் புலப்படுகிறதே!"

"இல்லை, இல்லை; இந்த இரண்டடியாலே சோழன் புகழ் வெளிப்படவில்லை; சோழனுக்கு இகழ்ச்சியாகக் கூடப் பாட்டை முடிக்கலாம்."

இப்படி மதுரைப் புலவர் சொன்னவுடன் சோழ நாட்டுப் புலவருக்குச் சினம் மூண்டது.

"பாட்டில் வெளிப்படையாகச் சோழனது பெருமை விளங்குகிறது. நீங்கள் காக்கை வெள்ளை என்பது போலப் பேசுகிறீர்களே!" என்றார்.

"இதே இரண்டடியை வைத்துக்கொண்டு, உங்கள் சோழ மன்னனை இகழ்ந்தும் எங்கள் பாண்டியனைப் புகழ்ந்தும் பின் இரண்டடிகள் சேர்த்துப் பாடலாம்."

சோழ மண்டலப் புலவருக்கு ஆத்திரம் அதிகமாயிற்றே ஒழிய, விஷயம் ஒன்றும் விளங்கவில்லை. "எங்கே, பாடுங்கள் பார்க்கலாம்" என்று கோபத்தோடு சொன்னார்.

மதுரைப் புலவர் அமைதியாகப் பாட்டைச் சொல்லத் தொடங்கினார். 'சோழன் முதுகுக்குக் கவசம் இடான்' என்று சோழ தேசப் புலவர் சொன்ன செய்திக்கு உரிய காரணம் இன்னதென்பதைப் பின் இரண்டடியில் வைத்துப் பாடினார்.

வென்றி வளவன் விறல்வேந்தர் தம்பிரான்
என்றும் முதுகுக்கு இடான்கவசம்—துன்றும்
வெறியார் தொடைகமழும் மீனவர்கோன் கைவேல்
எறியான் புறங்கொடுக்கின் என்று.

'சோழன் ஏன் முதுகுக்குக் கவசம் இடுவதில்லை தெரியுமா? புறங் காட்டாத இயல்பு காரணம் அன்று.

சோழனோடு போர் செய்யும் ஆற்றல் பாண்டியனுக்குத் தான் உண்டு. அவனுடன் சோழன் போர் செய்தால் நிச்சயம் சோழன் புறமுதுகிட்டோடுவான். ஆனால் அவன் புறங்கொடுப்பதைக் கண்டவுடன் பாண்டியன் அவனை ஒன்றும் செய்யமாட்டான்; அவன் முதுகின்மேல் வேலை எறியமாட்டான். அவ்வளவு உதாரகுணமும் பெரு வீரமும் உடையவன் பாண்டியன். முதுகில் வேலைப் பாண்டியன் எறிய மாட்டான் என்ற உறுதி இருக்கும்போது சோழன் அஞ்ச வேண்டிய அவசியமே இல்லை. அதனால் தான் சோழ மன்னன் முதுகுக்குக் கவசம் அணிவதில்லை!'—இப்படியெல்லாம் பொருள் கூறும்படியாக அந்தப் பாட்டு அமைந்தது.

பாவம்! சோழ மண்டலப் புலவர் வாயடைத்துப் போனார். எது சோழனது வீரத்தை வெளிப் படுத்தும் என்று நினைத்தாரோ, அதையே வைத்து, அவனுடைய இழிவையும் பாண்டியனது உயர்வையும் காட்டும்படி மதுரைப் புலவர் பாடி விட்டார்.

புலவர் செருக்கழிந்து அறிவு பெற்றார்.

# கிழவியின் தந்திரம்

சிவகங்கைச் சம்ஸ்தானத்தில் மருது சேர்வை காரர் என்ற ஜமீன்தார் ஆட்சிபுரிந்து வந்தார். வீரத்திலும் கொடையிலும் புலவர்களைப் போற்றும் திறத்திலும் அவர் சிறந்தவர். அதனால் அவரைச் சிற்றரசராக எண்ணாமல் முடியுடை மன்னராக எண்ணிப் பாராட்டினார்கள் மக்கள். மருத பாண்டியர் என்று அழைத்தார்கள். வேறு சிலரும் மருது என்ற பெயருடன் அந்தச் சம்ஸ்தானத்தை ஆண்டதுண்டு. அவர்களுக்குள் வேற்றுமை தெரிவதற்காகக் குடி மக்கள் ஒவ்வொருவரையும் தனித் தனியே அடையாளச் சொல் கூட்டிக் குறிப்பிட்டு வந்தார்கள். பெரிய மருது, சின்ன மருது, வெள்ளை மருது என்று வேறுபாடு தோன்றும்படி பேச்சு வழக்கில் பேசி வந்தார்கள்.

இந்த மருத பாண்டியர்களில் ஒருவராகிய வெள்ளை மருது ஆட்சி புரிந்த காலம்: அவருக்கும் தமிழ்ப் புலவர்களிடத்தில் அன்பு இருந்தது. புலவர்களின் கோபத்துக்குப் பாத்திரரானால் என்றும் குன்றாத பழியை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற உண்மையை அவர் நன்றாக அறிந்திருந்தார்.

ஒரு சமயம் அவருடைய கணக்கப் பிள்ளை வரிகளைச் சற்றுக் கடுமையாகத் தண்டி வந்தான். பணம் தேவையாக இருந்ததால் வெள்ளை மருது அவ்வாறு செய்வதைத் தடுக்காமல் இருந்தார். கொடுக்கக் கூடியவர்கள், சண்டித்தனம் செய்

பவர்கள், நல்லவர்கள், பொல்லாதவர்கள் என்று பாராமல் எல்லோரையும் ஒரே கிட்டிக்குள் அகப் படுத்துவதுபோல அந்தக் கணக்கப் பிள்ளை செய்து வந்தான். இதனால் சில பெரிய மனிதர்களுக்கு மனத்தில் வெறுப்பு உண்டாயிற்று. ஆனால் நாட்டுத் தலைவருடைய ஆணைக்கு மாறு சொல்லலாமா? வெள்ளை மருது சொல்லித்தான் கணக்கப் பிள்ளை அவ்வளவு கண்டிப்பாக இருக்கிறான் என்று யாவரும் எண்ணி யிருந்தனர். "காலம் நன்றாக இருந்தால், மழை சரியாகப் பெய்து விளைச்சலும் உள்ளபடி விளைந்தால், நாங்களே வரியைக் கட்டி விட மாட்டோமா? பஞ்சகாலம் ஆகையால் கையில் பணம் சேரவில்லை. இந்தக் காலத்தில் இப்படிக் கெடுபிடி பண்ணுவதனால் லாபம் ஒன்றும் இல்லை" என்று அவர்கள் தமக்குள்ளே பேசிக் கொண் டார்கள்.

வரி வசூலாகி வருகின்றதைக் கண்டு வெள்ளை மருதுக்கு ஆனந்தந்தான். எப்படி வசூலாகிறது என்பதை விசாரிக்க அவன் புகவில்லை. கணக்கப் பிள்ளை செய்யும் கொடுமைகள் அவர் காதுவரையில் எட்டவில்லை.

புலவர் பரம்பரையைச் சேர்ந்த கிழவி ஒருத்தி இருந்தாள். அவளும் சம்ஸ்தானத்துக்கு வரி செலுத்த வேண்டிய பாக்கி இருந்தது. கணக் கப் பிள்ளை இரண்டு மூன்று தடவை வந்து கேட் டான், பயமுறுத்தினான். அப்பால் ஒரு நாள் வந்து, "இன்று வரி தராவிட்டால் உன் வீட்டுப் பண்டங் களை எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்வேன்" என்றான்.

கிழவிக்குக் கோபம் வந்து விட்டது; "கொடுக்க முடிந்தால் இந்த வரியை முன்பே கொடுத்திருக்க மாட்டேனா? நீர் இப்படியெல்லாம் வந்து மிரட்டுகிறீரே! நானும் இவ்வளவு காலமாகப் பார்த்திருக்கிறேன். இப்படிக் கிட்டி கட்டி வரி தண்டுவதைக் கண்டதே இல்லை" என்றாள்.

"உன்னுடைய ஒப்பாரியையெல்லாம் இப்போது விரிக்க வேண்டாம். பணம் கொடுக்கிறாயா? இல்லையா?"

"பணம் இருந்தால்தானே கொடுக்க? இவ்வளவு அதிகாரம் உமக்குக் கொடுத்தவர் யார்?"

"ஏன்? நம்முடைய வெள்ளை மருது துரை தாம். அவரே உன்னிடம் வரி வாங்கச் சொன்னார்."

கிழவிக்குக் கோபம் கனலாக மூண்டது. "ஓகோ! வெள்ளை மருதுக்கு மிஞ்சிப் போச்சோ?" என்று கேட்டாள்.

"கிழவியா இப்படிப் பேசுகிறாள்!" என்று கணக்கப் பிள்ளைக்கு ஆச்சரியம் உண்டாயிற்று. சம்ஸ்தானாதிபதியாகிய வீரரை அவ்வளவு அலட்சியமாகப் பேசும் தைரியம் வேறு யாருக்கும் இல்லை. அப்படிப் பேசி அந்தச் சம்ஸ்தானத்தில் வாழ முடியுமா?

கணக்கப் பிள்ளைக்கு, 'இந்த ராட்சசியை அடக்க நம்முடைய துரையவர்களையேதான் அழைத்து வர வேண்டும்' என்று தோன்றி விட்டது. கோபத்தால் உடம்பு பதற ஓடினான். வெள்ளை மருது துரைக்கு முன்னால் போய், "சமூகத்துக்கு இருந்த பெருமை இன்று அடியோடு போய்விட்டது.

அந்தக் கிழவியைத் துரையவர்களே நேரில் வந்து தான் அடக்க வேண்டும்" என்று படபடப்போடு கூறினான்.

வெள்ளை மருது விஷயத்தை விசாரித்து அறிந்தார். "அந்தப் புலவர் வீட்டுக் கிழவியா? அவள் அப்படிச் சொல்லமாட்டாளே! நீ என்ன சொன்னாயோ?" என்றார்.

கணக்கப் பிள்ளை கிழவியைப் பற்றியே குறை கூறினான். "இந்த மாதிரி ஒரு கிழவி நடந்து கொண்டால், மற்றவர்களுக்கு எப்படி மரியாதை இருக்கும்? வரியைத் தண்டுவது தான் எப்படி?" என்று அங்கலாய்த்தான். வெள்ளை மருது அவனுடைய தொந்தரவு பொறுக்காமல் புறப்பட்டார்.

கிழவியின் வீட்டுக்கு ஆளுடன் யாவரும் சென்றனர். வீட்டுக்குள் நுழைந்தபோது கிழவி தன் பேரனைத் தொட்டிலில் இட்டுத் தாலாட்டிக் கொண்டிருந்தாள்.

அவள் ஆத்திரத்தில் பேசிவிட்டாலும் அப்பால், 'ஏன் இவ்வாறு சொன்னோம்!' என்ற எண்ணம் உண்டாயிற்று. உள்ளுக்குள் அச்சமும் ஏற்பட்டது. அதற்கு என்ன தண்டனை கிடைத்தாலும் உட்பட வேண்டியதுதான் என்று தீர்மானித்துக் கொண்டாள்.

ஆனாலும் அவள் மனசு ஏதாவது தந்திரம் செய்து தப்ப வழி உண்டா என்று யோசித்தது. குழந்தையைத் தாலாட்டியபடியே அந்தச் சிந்தனையில் ஆழ்ந்தாள். அவளுக்கு ஏதோ ஒரு தந்திரம் தோன்றிவிட்டது போலும்! சிந்தனை தேங்கிய அவள் முகத்தில் ஒளி லேசாகப் படர்ந்தது. அதே

சமயத்தில் வெள்ளை மருது இடைகழியில் வந்து கொண்டிருந்தார். கிழவிக்கு யாரோ வருகிறார்கள் என்று தெரிந்துவிட்டது. உடனே குரலெடுத்துத் தாலாட்டுப் பாட ஆரம்பித்தாள்.

ஆராரோ ஆராரோ ஆராரோ ஆரிரரோ
கட்டிக் கரும்பே என் கண்மணியே கண்வளராய்

குன்றுமே கம்கிளம்பிக் குன்றுற்றி லேவிழுந்து
வெள்ளம்வருது என்றதல்லால்
வெள்ளமருது என்றேனே ?

கொஞ்சி விளையாடும் குழந்தைதன் காலில் இட்ட
மிஞ்சிபோச் சென்றதல்லால்
மிஞ்சிப்போச் சென்றேனே ?

அவள் செய்த தந்திரம் அது. தான் கூறிய வார்த்தைகளின் தொனியையும் பொருளையும் மாற்றி விட்டாள் அவள். வெள்ளைமருது என்பதை 'வெள் ளம் வருது' என்று மாற்றி, 'மிஞ்சிப் போச்சோ' என்பதை 'மிஞ்சி போச்சு' என்று மாற்றிக் காட்டி னாள். வேகமாகப் பேசுகையில் இரண்டு வகைத் தொடர்களுக்கும் தொனியில் வித்தியாசம் தோற் றாது. அவள், "நான் அப்படிச் சொல்லவில்லையே! வெள்ளம் வருது என்று சொன்னேன். அது இவர்கள் காதில் வெள்ளைமருது என்று விழுந்திருக் கிறதுபோல் இருக்கிறது. அப்படியே மிஞ்சி போச்சு என்றது வேறு விதமாகப் பட்டிருக்கிறது. நான் என்ன செய்வேன்! வெள்ளம் வந்ததையும், தண்ணீ ரில் அளைந்த குழந்தையின் மிஞ்சி காணமற் போன தையும் சேர்த்துச் சொல்லப்போக இப்படி விபரீத மாக விளைந்ததே!" என்று அந்தக் கிழவி வாதித்

திருந்தால்கூட அது வெள்ளை மருதுக்குச் சமாதானமாக இருந்திருக்காது. ஆனால் கிழவி பாடிய தாலாட்டுப் பாட்டு அத்தனை வாதத்தையும் சொல்லாமற் சொல்லியது. கிழவியின் சாமர்த்தியத்தையும், புலவர் வீட்டில் அவள் பிறந்ததனால் பெற்ற ஆற்றலையும் காட்டியதோடு, அவள் தான் சொன்னதை நினைந்து வருந்துவதையும் புலப்படுத்தியது. தாலாட்டுப் பாட்டைக் கேட்ட கணக்கப் பிள்ளைகூட ஸ்தம்பித்து நின்றான்.

வெள்ளைமருது வீட்டுக்குள் நுழையவில்லை. இடை கழியிலிருந்தே தம் பரிவாரத்துடன் திரும்பிச் சென்றுவிட்டார். அரண்மனைக்குப் போன பிறகும் அவர் காதில்,

> குன்றுமே கங்கிளம்பிக் குன்றாற்றி லேவிழுந்து
> வெள்ளம் வருது என்றதல்லால் வெள்ளை மருதென்றே
> கொஞ்சி விளையாடும் குழந்தைதன் காலில்இட்ட [னே
> மிஞ்சிபோச் சென்றதல்லால் மிஞ்சிப்போச் சென்றேனே

என்ற கண்ணிகள் ஒலித்துக்கொண்டேயிருந்தன.

[இந்தப் பாடல்களையும் வரலாற்றையும் எனக்குத் தெரிவித்தவர் ஸ்ரீமதி எஸ். பிருந்தாதேவி.]

# இருளும் நிலவும்

"இந்தப் பைத்தியம் இங்கே கண்ணை மூடிக் கொண்டு நிற்கிறதே! சரபோஜி மகாராஜா இங்கே வந்திருக்கிறார். கோயிலுக்கு வருவாரென்று தெரி கிறது. இந்தப் பைத்தியம் அம்பிகை சந்நிதியில் எதையாவது உளறிக் கொண்டிருக்குமே!" என்றார் ஒருவர்.

"உளறினால் உமக்கு என்ன? மகாராஜா வந் தால் யாராவது இவரைக் கழுத்தில் கைகொடுத்து நெட்டித் தள்ளுகிறார்கள். மகாராஜா வரும் வரை யில் இவரை இங்கே நின்றிருக்கும்படி செய்வார் களா, என்ன?" என்றார் மற்றவர்.

திருக்கடவூரில் அபிராமியம்மையின் சந்நிதியில் தம்மை மறந்த நிலையில் நின்றுகொண்டிருந்தார் அபி ராமிபட்டர். உடம்பில் பளிச்சென்ற திருநீறு; நெற்றி யில் திருநீற்றுக்கு இடையே இரண்டு புருவத்துக்கும் நடுவில் அகலமான குங்குமக்கீற்று.- இந்தக் கோலத் தோடு நின்றிருந்தார். அவரைப் பற்றியே அந்த இரண்டு பேர்வழிகளும் பேசிக் கொண்டிருந்தார் கள். அபிராமிபட்டர் காதில் அந்தப் பேச்சு விழ வில்லை. அவர் தாம் இந்த உலக நினைவிலேயே இல்லையே!

தேவியைத் தீவிரமாக உபாசனை புரிவதில் சிறந்தவர் அபிராமிபட்டர். யந்திரங்களை வைத்து மந்திர பூர்வமாகத் தந்திரநெறியில் அம்பிகையை வழிபட்டு வந்தார். பரம்பரையாக அம்பிகையை

உபாசிக்கும் குடும்பம் அது. அவரோ அந்த உபா சனையில் மிகவும் முறுகியவர். பூஜை செய்வதும், கோயிலுக்கு வந்து அம்பிகையைத் தரிசிப்பதும் அவருடைய வாழ்வின் முக்கியமான வேலைகள். கொஞ்சம் சோதிடம் பார்ப்பார். நாள் நட்சத்திரம் பார்த்துச் சொல்வார். சிலர் அவரிடத்தில் அன்பு வைத்துப் பழகினார்கள். சாதுக்களுக்கு அவர் சிறந்த பக்தர் என்பது தெரியும்.

அவர் யாரிடமும் அதிகமாகப் பேசுவதில்லை. அபிராமியின் திருவருளுக்கு இலக்காகி அத் தேவியி னுடைய தியானத்தால் உண்டாகும் இன்பப்போதை யிலே அவர் மிதந்து கொண்டிருப்பார். ஆகையால் யாராவது ஏதாவது கேட்டால் அதைக்கவனிக்காமல் வேறு எதையாவது சொல்வார். இதனால் சிலர் அவ ரைப் பைத்தியமென்று எண்ணிவிட்டார்கள். பலர், “ஏதோ துர்த்தேவதையை வழிபடுகிறார். அதனால் தான் அப்படி இருக்கிறார்” என்றனர். அம்பிகையின் சந்நிதானத்தில் சில சமயங்களில் தம்மை மறந்து கூத்தாடுவார். சுலோகங்களை இசைப்பார். புதிய பாடல்களைப் பாடுவார். தமிழில் பக்திச் சுவை ததும் பும் பாடல்களை இயற்றும் ஆற்றல் அவருக்கு இருந் தது. யாராவது பார்த்து நகைப்பார்களே என்ற நினைவு அவருக்கு இல்லை. அம்பிகையை நினைந்து அலறுவார்; தேம்பித் தேம்பி அழுவார். நகரிகமாக வந்து நின்று சுற்று முற்றும் பார்த்துத் தீபாராதனை ஆகும்போது கன்னத்தில் அடித்துக்கொண்டு, அம் பிகையின் குங்குமப் பிரசாதத்தை வாங்கி இடது கையில் வைத்துக்கொண்டு, நுனிவிரலால் சிறிது எடுத்து நெற்றியில் நிதானமாகவும் ஒழுங்காகவும்

இட்டுக் கொண்டு, பாக்கிக் குங்குமத்தை அருகில் உள்ள தூணின்மேல் தடவிவிடும் மகாஜனங்களின் இடையில் அவர் பைத்தியக்காரராகத் தோற்றிய தில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை.

★

அபிராமிபட்டர் தியானத்தில் ஆழ்ந்திருந்தார். அவரை அவ்விடத்தை விட்டுப் போகும்படி சொல்ல யாருக்கும் தைரியம் இல்லை. கடவுளின் சந்நிதானத் தில் வணங்கும் சுதந்தரத்தைப் பறிக்கும் அதிகாரம் யாருக்கும் இல்லை.

சரபோஜி மன்னர் ஆலயதரிசனம் செய்யும் பொருட்டு வந்தார். அவர் வந்தால் தனியாகவா வருவார்? ஒரு பட்டாளம் ஜனங்களுடன் வந்தார். ஆலயத்தில் அப்போது ஒரு புதிய பரபரப்பு எங்கும் உண்டாயிற்று. குருக்கள்மார் சுறுசுறுப்பாக ஓடி னார்கள். மாலை தொடுப்பவர்கள் படபடப்பாக இருந்தார்கள். வாத்தியக்காரர்கள் ஜாக்கிரதையாக இருந்தார்கள். அரசர் சுவாமி சந்நிதிக்குப் போய் விட்டு அம்பிகையின் சந்நிதிக்கு வந்தார்.

இந்த அல்லோல கல்லோலத்துக்கு இடையே அபிராமி பட்டர் ஒன்றையும் உணராமல் ஒளியாய், ஒளிரும் ஒளிக்கு இடமாய், எண்ணில் ஒன்றும் இல்லா வெளியாய், வெளிமுதற் பூதங்களாகி விரிந்த அம்மையின் அடித்தாமரையிலே ஈடுபட்டு நின்றார். அப்போது சரபோஜி மன்னர் அங்கே வந்தார். அவரைக் கண்டு யாவரும் வழிவிட்டு விலகி நின்றனர். இந்த அந்தணர் மாத்திரம் விலகாமல் நின்றார். அவர் இந்த உலகத்தில் இருந்தால் தானே? குருக் கள் முதலியவர்கள் அவரை உறுத்து உறுத்துப்

பார்த்தார்கள். அவர் கண்ணை மூடித் தியானத்தில் ஆழ்ந்திருந்தார். அவர்கள் பார்த்த பார்வை அவருக்கு என்ன தெரியும்?

சரபோஜி மன்னர் உடன் வந்த ஒருவரிடம், "இவர் யார்?" என்று கேட்டார். "கொஞ்சம் ஜோஸ்யம் தெரிந்தவர். ஒருமாதிரி. ஏதோ சிறு தெய்வ உபாசனை உள்ளவர் என்று சொல்லிக் கொள்கிறார்கள்" என்று மெல்லச் சொன்னார் அந்த மனிதர். அதைக்கேட்ட சரபோஜி மன்னர் அபிராமிபட்டரை ஏற இறங்கப் பார்த்தார். அந்தப் பக்தசிரோமணி மன்னர் தம்மைப் பார்ப்பதை உணர்ந்தாரா? இல்லை.

விசேஷ அர்ச்சனை ஆயிற்று. மணி அடித்தார்கள். தீபாராதனை ஆயிற்று. யாவரும் ஆரவாரம்செய்து கன்னத்தில் போட்டுக் கொண்டார்கள். அந்தக் கோஷத்தினால் அபிராம பட்டரின் தியானம் கலைந்தது. கண்ணை விழித்துப் பார்த்தார். அம்பிகை சந்நிதியில் ஒரேகூட்டம். எதிரே சரபோஜிமன்னர்நின்று கொண்டிருந்தார். பட்டர் கண்ணை விழித்தவுடன் அரசர் அவரிடம், "இன்று என்ன திதி?" என்று ஒரு கேள்வி கேட்டார். சந்திர மண்டிலத்தில் அமுதமயமாய் வீற்றிருக்கும் அம்பிகையைத் தம் அகக்கண்ணில் தரிசித்து அங்கே சூழும்சுடர்க்கு நடுவேகிடந்து சுடர்கின்ற திருக்கோலத்தில் ஈடுபட்டிருந்த பட்டர் காதில் மன்னரின்வார்த்தைகள் அரைகுறையாகவே விழுந்தன. "பௌர்ணமி" என்ற வார்த்தைகள் அவர் வாயினின்று நழுவின. அவர் பூர்ண சந்திர மண்டிலத்தை உள்ளே கண்டவர் அல்லவா?

அன்று அமாவாசைக்கு மறுநாள்; பிரதமை. அபிராமி பட்டரோ பௌர்ணமி என்று சொன்னார்.

அப்படிச் சொன்னவுடன் பக்கத்தில் உள்ளவர்கள் கேட்டுச் சிரித்தார்கள். சரபோஜி அரசரும் சற்றுத் திகைத்தார். "அவர் ஒரு மாதிரி" என்று ஒருவர் சொன்னது உண்மை என்று எண்ணலானார்.

தரிசனம் செய்த மன்னர் தாம் தங்கியிருக்கும் மாளிகைக்குப் போய்விட்டார். அபிராமி பட்டருக்கு மெல்ல மெல்ல உலக நினைவு வந்தது. அப்போது தாம் தவறிப்போய்ப் பௌர்ணமி என்று சொன்னது தெளிவாயிற்று. 'அடடா! என்ன காரியம் செய்து விட்டோம்! முன்பே பைத்தியக்காரப் பட்டம் கட்டியிருக்கிறார்கள். இப்போது அரசர் முன்பு அதை உறுதி செய்து விட்டோமே!' என்று வருந்தினார். அடுத்த கணம் அவர் மனம் அம்பிகையை நினைந்தது. "தாயே! எல்லாம் உன் செயல். நன்றே செயினும் தீதே வரினும் நான் அறிவது ஒன்றேயும் இல்லை. உன் சந்நிதியில் என்னிடம் தோன்றிய வார்த்தை என் முயற்சியால் வந்தது அல்ல. இதனால் வரும் நன்மை தீமைகள் என்னைச் சார்வன அல்ல. எல்லாம் உன் திருவிளையாடல்" என்று சொல்லிவிட்டு வீட்டுக்குச் சென்றார். அவர் மனம் இன்னும் உறுத்திக்கொண்டே இருந்தது. அந்த நிலை மாறுவதற்காக அபிராமியம்மையைத் துதிக்கத் தொடங்கினார். புதிய செய்யுட்களால் அந்தாதியாகப் பாமாலை தொடுக்கலானார். ஒவ்வொன்றாகப் பாடல் வந்து கொண்டிருந்தது.

★

ஆலயத்திலிருந்து சென்ற மன்னருக்கு அபிராமி பட்டரின் உருவம் மனசை விட்டுப் போகவே இல்லை. அவர் நெடுநேரம் புறவுலகத்தையே மறந்து

நின்றதைக் கவனித்தவராதலின் அவரைப் பைத்தியமென்று துணியக்கூடவில்லை. இந்த நிலையில் அவருக்குச் சற்று உறக்கம் வந்தது. அந்த உறக்கத்தில் சின்னஞ் சிறிய கனவு ஒன்றை அவர் கண்டார்.

எங்கும் இருள் கவிந்திருக்கிறது. அமாவாசை இருட்டு. அப்போது திடீரென்று ஒரு சோதி தோன்றுகிறது. எதிரே அம்பிகையின் தோற்றம். அம்மை தன் காதுத் தோட்டில் ஒன்றை எடுத்து வானில் வீசுகிறாள். அது நேரே கீழ்த்திசையில் சென்று நிற்கிறது. என்ன ஆச்சரியம்! பூரண சந்திரன் உதயமாகிவிட்டான். அம்பிகையின் தாடங்கம் சந்திரனைப்போல ஒளிவிடுகிறது.

உலகத்தை மூடியிருந்த இருள் இப்போது இல்லை. பால் போன்ற வெண்ணிலவு வீசுகிறது. குன்றும் மலையும், ஆறும் குளமும், காடும் மேடும், முள்ளும் மலரும், மரமும் செடியும் அந்த நிலவொளியில் ஒரு மோகன சோபையைப் பெற்றுத் திகழ்கின்றன. அமாவாசையாகிய அன்று பௌர்ணமி வந்துவிட்டதா என்ன? அரசர் கணநேரம் இந்த யோசனையில் ஆழ்ந்தபோது அவர் அருகே அபிராமி பட்டர் தோன்றுகிறார். "அதோ அதோ! பூர்ண சந்திரன்!" என்று வானத்தைச் சுட்டிக் காட்டுகிறார். அம்பிகையைத் தரிசித்த ஆனந்தத்தில் மூழ்கி நின்ற மன்னர் அபிராமி பட்டரை அடிபணியச் செல்கிறார்.

★

கனவினிடையே மன்னர் விழித்துக் கொண்டார். கனவிலே கண்ட நிலவொளி இன்னும் தம்மைச் சூழ்ந்து விரிந்திருப்பது போன்ற பிரமை

அவருக்கு இருந்தது. கனவேயானாலும் அம்பிகையைத் தரிசித்தார் அல்லவா? அதனால் உண்டான புளகம் இன்னும் அடங்கவில்லை. மெல்ல மெல்ல இந்த இன்ப மயக்கம் தெளிந்தது. எழுந்து அமர்ந்தார். அபிராமி பட்டர் ஒரு மகான் என்ற நினைவு அவருக்கு உண்டாயிற்று. கனவிலே பட்டரை வணங்கினார் அரசர். நனவிலும் வணங்க வேண்டும் என்ற கருத்து உண்டாயிற்று. அதில் வேகமும் இருந்தது. அரசர் அபிராமி பட்டர் வீட்டை நோக்கிப் புறப்பட்டுவிட்டார்.

அரசர் அந்தச் சிறுகுடிலில் நுழைந்தார். அவர் நுழைவதற்கும் அபிராமி பட்டர் 79-ஆவது பாட்டை முடிப்பதற்கும் சரியாக இருந்தது. அந்தப் பாடலை மீட்டும் சொல்லித் துதித்தார்.

விழிக்கே அருள்உண்டு அபிராம
வல்லிக்கு; வேதம்சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்டு
எமக்கு; அவ் வழிகிடக்கப்
பழிக்கே சுழன்றுவெம் பாவங்க
ளேசெய்து பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர்தம்
மோடுஎன்ன கூட்டுஇனியே? *

என்ற பாடல் அது.

சரபோஜி மன்னர் உள்ளே வந்து நின்றார். அபிராமி பட்டர் எழுந்தார். "சுவாமி! தாங்கள் எழுந்திருக்கலாகாது. இன்று தங்களை அவமதித்த பெரும்

---

* அபிராம வல்லியின் விழியில் அருள் உண்டு; வேதம் சொன்னவாறு அத் தேவியை வணங்க எமக்கு மனம் உண்டு; அவ்வழி இருக்கவும் பழிதரும் வழிகளிலே திரிந்து கொடிய பாவங்களையே செய்து பாழான நரகக் குழியில் ஆழும் இழித்கையோருடன் இனி நமக்கு என்ன உறவு வேண்டும்?

பாவத்தைச் செய்தேன். ஆனாலும் தங்களைத் தரிசித்த புண்ணியத்தால் அம்பிகையின் தரிசனம் கிடைத்தது" என்று சொல்லியபடியே அரசர் அபிராமிபட்டர் திருவடியில் பணிந்தார். பட்டர் ஒன்றுமே விளங்காமல் விழித்தார். உடன் வந்தவர்களும் திடுக்கிட்டுப் போயினர். அரசர் தாம் கண்ட கனவைச் சொன்னார். "உங்கள் பெருமையைக் கனவிலே கண்டேன். அம்பிகை உங்களுக்காக அமாவாசையைப் பௌர்ணமி ஆக்கினாள். இந்தப் பேதைக்கும் தன் காட்சியை நல்கினாள். என் உள்ளத்தில் படர்ந்த இருளை ஓடச் செய்தாள். நீங்கள் அதற்கு வழிகாட்டினீர்கள்" என்று கூறி உருகினார்.

அபிராமிபட்டர் அம்பிகையின் திருவருளை எண்ணி உருகினார். "தாயே! நீ எப்படியெல்லாம் என்னை ஆட்டுவிக்கிறாய்!" என்று துதித்தார்.

கூட்டிய வாஎன்னைத் தன்அடி
யாரில்; கொடியவினை
ஓட்டிய வா!என்கண் ஓடிய
வா! தன்னை உள்ளவண்ணம்
காட்டிய வா!கண்ட கண்ணும்
மனமும் களிக்கின்றவா!
ஆட்டிய வாநடம்! ஆடகத்
தாமரை ஆரணங்கே! *

* பொற்றாமரையில் எழுந்தருளிய தேவி, என்னைத் தன் அடியார்களில் ஒருவனைச் சேர்த்தியவாறு என்ன வியப்பு! என், கொடிய பாவங்களை ஓட்டியவாறு என்ன ஆச்சரியம்! எனக்கு அருள் செய்யும் பொருட்டு என்னிடம் ஓடி வந்தவாறு என்னே! தன்னை உள்ளபடி நான் தரிசிக்கும் வண்ணம் காட்டியருளியது என்னே! அப் பெருமாட்டியின் தரிசனம் செய்த என் கண்ணும் மனமும் களிக்கின்ற வாறு என்னே! என்னைத் தேவி கூத்தாட்டியவாறு என்ன வியப்பு!

என்று பாட்டு வந்தது. அரசர் அங்கேயே அமர்ந்து விட்டார். அபிராமியின்மேல் அதுகாறும் 80 பாடல்கள் நிறைவேறி யிருந்தன. "மற்றவற்றையும் நிறைவேற்ற வேண்டும். அவற்றை நான் கேட்கும்படி கிருபை பாலிக்கவேண்டும்" என்று வேண்டிக் கொண்டார் மன்னர். அப்படியே அபிராமி பட்டர் மேலே இருபது பாடல்கள் பாடி அபிராமி அந்தாதியை முடித்தார்.

அரசர் விடைபெற்றுச் சென்றார்; பிறகு தஞ்சைக்குப் போனார். அபிராமி பட்டரும் அவருடைய பரம்பரையினரும் பெறும் வண்ணம் சில நிலங்களை வழங்கினார். அபிராமிபட்டர் அபிராமியின் தியானத்தில் மாறாமல் நின்றார். அவர் பாடிய அந்தாதி பக்தர்கள் உள்ளத்தில் இன்றும் நின்று நிலவுகிறது.

# வசையும் இசையும்

தொண்டை நாட்டிலே உள்ள துறையூரிலே பிறந்த பொய்யாமொழிப் புலவர் தமிழை வளர்த்த மதுரையைப் பார்த்துவரப் புறப்பட்டார். பிற்காலத்துப் பாண்டிய அரசர்களில் ஒருவன் வாழ்ந்திருந்த காலம் அது. பாண்டியனைப் பார்த்து அளவளாவுவதோடு, அவனோடு இருந்த புலவர்களையும் கண்டு பழகி வரலாம் என்பது புலவருடைய எண்ணம். இடையிலே உள்ள பல ஊர்களைப் பார்த்துக் கொண்டு சோழ நாடு சென்று அங்குள்ள திருச்சிராப்பள்ளிக்குப் போய்ச் சிலநாள் தங்கி அப்பால் பாண்டி நாட்டுக்குச் சென்றார்.

புலவர் மதுரையை அடைந்தார். பழங்காலத்தில் தெய்வப் புலமை பெற்ற புலவர்கள் சங்கத்திலிருந்து தமிழ் ஆராய்ந்த அந்த நகரத்தில் அப்போது சிறந்த புலவர்கள் யாரும் இல்லை. பாண்டியனுடைய அவைக் களத்தில் புலவரென்று பெயர் வைத்துக் கொண்டு சிலர் இருந்தார்கள். ஆனால் அவர்களுக்குப் போதிய புலமை இல்லை. பொறாமை, தம்நலம் ஆகிய இழிந்த பண்புகள் அவர்களிடம் இருந்தன. வெளியூர்களிலிருந்து யாரேனும் புலவர் வந்தால் அவர் பாண்டியனை அணுகுவதற்கு இடங்கொடுக்காமல் ஏதேனும் தடை செய்து வந்தனர். தக்க புலவர் யாரேனும் வந்தால் தம்முடைய மதிப்புக் குறைந்து விடுமே என்ற பயம் அவர்களிடம் இருந்தது.

பொய்யாமொழிப் புலவருக்கு அந்நகரத்தில் இருந்த புலவர்களின் இயல்பு தெரியாது. ஆகவே, 'இந்த அவைக்களப் புலவர்களைக் கண்டு அவர்களைப் பழக்கம் செய்துகொண்டு பிறகு அரசனைக் காணலாம்' என்று எண்ணி ஒரு புலவரை அணுகினார். அந்தப் புலவர் பொய்யாமொழியாரின் பேச்சிலிருந்தே அவர் சிறந்த புலவர் என்பதை அறிந்து கொண்டார். அவரைப் பாண்டியனிடம் அணுக விட்டால் தம் நிலையும் தம்முடைய நண்பர்களின் நிலையும் என்ன ஆகுமோ என்று பயந்தார். ஆயினும் தம் கருத்தை வெளிப்படுத்தாமற் பேசினார். பாண்டிய மன்னனுடைய சமயமறிந்து பார்க்க வேண்டுமென்றும், அந்தச் சமயத்தைப் பிறகு தெரிவிப்பதாகவும் சொன்னார்.

பொய்யாமொழிப் புலவர் திருக்கோயில் சென்று ஆலவாய்ப் பெருமானையும் மீனாட்சியம்மையையும் தரிசித்துக் கொண்டு ஒரு செல்வர் வீட்டில் தங்கினார். தமிழ்ப் பெரும் புலவராகிய அவருக்கு எங்கே சென்றாலும் சிறப்பு உண்டாவதற்குத் தடை என்ன? அரசன் இருக்கவும் தம்மிடம் வந்ததைப் பெருமையாக எண்ணி அந்தச் செல்வர் புலவரைப் போற்றி உபசரித்தார். சில அமைச்சர்களோடு அவரைப் பழக்கம் செய்து வைத்தார்.

பாண்டிய அரசனைப் பார்க்க முடியவில்லை. இப்படிச் சில நாட்கள் கழிந்தன. அவைக்களப் புலவரே இதற்குக் காரணமென்பதைப் பொய்யாமொழியார் தெரிந்துகொண்டார். 'இனி இப்படியே இங்கிருந்து பயன் இல்லை. பாரரசனைவிடப் பாவர

சன் சிறந்தவன் என்பதைக் காட்டிவிடவேண்டும்' என்று உறுதி பூண்டார்.

இன்று பார்க்கலாம், நாளைப் பார்க்கலாம் என்று அரண்மனையிலிருந்து செய்தி வந்துகொண்டிருந்ததேயொழிய, "வரலாம்" என்ற அழைப்பு வரவில்லை. அதனால் பொய்யாமொழியாருக்குச் சினம் மூண்டது. "இந்தச் சம்பிரதாயமெல்லாம் எதற்கு? நானே அரசனை நேரிலே போய்ப் பார்க்கிறேன்" என்று புறப்பட்டுவிட்டார். 'தகுதியில்லாதவர்களை அருகில் வைத்துக்கொண்டு நெடுந்தூரத்திலிருந்து பார்க்க வந்திருக்கும் நம்மைப் போன்றவர்களைப் புறக்கணிக்கிறான்' என்ற கோபம் அவருக்கு. பாண்டியனிடம் சென்று அவன் இப்படிச் செய்வதைக் கண்டித்து ஒரு பாட்டின் மூலமாகச் சொல்லிவிடலாம் என்று துணிந்தார்.

அவர் புறப்பட்டபோது பாண்டியன் திருக்கோயிலுக்குப் போயிருக்கிறானென்ற செய்தி தெரிந்தது. "நல்ல வேளை! அரண்மனையில் காவல் கடந்து சென்று பார்க்கவேண்டும். ஆலயத்தில் எளிதில் பார்த்துவிடலாம்" என்று அவரும் சொக்கநாதப் பெருமான் திருக்கோயிலுக்குச் சென்றார். அங்கே பாண்டியன் பரிவாரங்களுடன் சென்று கடவுளைத் தரிசனம் செய்தான். பொய்யாமொழியாருடன் சில அன்பர்கள் வந்திருந்தனர். வரும்போது அவர்களுடன் புலவர் பேசிக்கொண்டு வந்தார். "இந்தப் பாண்டியன் தன்னுடைய குலம் சந்திரகுலம் என்று காட்டிவிட்டான். சிறந்த மலர்களாகிய தாமரைகள் முகம் குவிந்து மூடவும், அவற்றைவிடத் தாழ்ந்த குமுதமலர்கள் மலரவும் செய்வது சந்திரனுடைய

இயல்பு. இந்த அரசனும் சிறந்த புலவர்கள் தன்னைப் பார்க்கவும் இடம் கொடாமல் அவர்கள் மனத்தைப் புண்படுத்துகிறான். சாமானியமான புலவர்களை உடன் வைத்துக்கொண்டு பாராட்டுகிறான்" என்று சொன்னார்.

கோயிலுக்கு வந்தவுடன் தம் கருத்தைப் பாட்டாகச் சொல்லத் தொடங்கினார்.

குழற்கால் அரவிந்தம் கூம்பக்
குமுதம் பொதிஅவிழ்ப்ப
நிழற்கால் மதியமன் றோநின்
திருக்குலம்

என்று பாதிப் பாட்டைப் பாடினார். 'உள்ளே துளையை உடையதாய்க் குழல்போல இருக்கும் தண்டைப் பெற்ற தாமரை குவியவும், குமுத மலர் கட்டவிழ்ந்து மலரவும் தன் கதிரை வீசும் சந்திரன் அல்லவா உன்னுடைய திருக்குலம்?' என்ற பொருளுடையது அந்தப் பகுதி. இதை உவமையாக வைத்து, பாண்டியன் தக்கவரை அவமதித்துத் தகுதியில்லாதவரைப் பாராட்டும் செயலை உபமேயமாகச் சொல்லிப் பாட்டை முடிப்பதாக எண்ணியிருந்தார் புலவர்.

இந்தப் பாதிப் பாட்டைப் பாடிக் கொண்டிருக்கும்போதே பாண்டியன் தரிசனம் செய்து கொண்டு வெளியே வந்து விட்டான். அவன் பொய்யாமொழிப் புலவரையும் அவருடன் இருக்கும் சிலரையும் கண்டான். "மதியமன்றோ நின் திருக்குலம்" என்ற பகுதி அவன் காதில் விழுந்ததும், 'நம் குலத்தைப் பற்றிய பாடலாக இருக்

கிறதே!' என்று எண்ணிச் சற்றே நின்றான். "பாடலைச் சொல்பவரை அழைத்து வாருங்கள்" என்றான்.

பொய்யாமொழிப் புலவர் பாண்டியன் முன் சென்றார்.

"தங்களைப் பார்த்தால் தமிழ்ப் புலவர் என்று தோன்றுகிறதே. தாங்கள் யார்?" என்று கேட்டான் மன்னன்.

"நான் பொய்யாமொழிப் புலவன். மன்னர் பிரானைப் பார்க்க இயலாமல் பல நாள் இவ்வூரில் இருக்கிறேன்" என்றார்.

பொய்யாமொழிப் புலவரைப் பற்றி முன்பே பாண்டியன் கேட்டிருக்கிறான். ஆகவே, "அடடா! தாங்கள் பொய்யாமொழியா? எனக்குத் தாங்கள் வந்திருப்பது தெரியாதே!" என்றான்.

"எதற்கும் காலம் ஒன்று உண்டல்லவா?" என்றார் புலவர்.

"தாங்கள் இப்போது ஏதோ ஒரு பாட்டைச் சொல்லிக் கொண்டிருந்தீர்களே; அது என்ன பாட்டு?" என்று பாண்டியன் கேட்டான்.

பொய்யாமொழியுடன் வந்தவர்கள், 'இவர் வசையாகப் பாடின பாட்டல்லவா? அதைப் பாண்டியன் கேட்டால் என்ன நினைப்பானோ?' என்று அஞ்சினார்கள்.

பாண்டியனுக்குத் தாம் வந்து காத்துக் கொண்டிருக்கும் செய்தியே தெரியாதென்பதைப் பொய்யா மொழியார் உணர்ந்து கொண்டார். பாண்டியன் தம் பெயரைக் கேட்டதும் திடுக்கிட்டதைக் கண்டார்.

பாண்டியன்மேலே பிழை இல்லை என்று தெளிந்தார். ஆதலால் அவன்மேல் வசையாகப் பாடுவது தவறு என்ற முடிவுக்கு வந்தார். என்றாலும் பாதிப் பாட்டைப் பாடியாகி விட்டதே. அந்தப் பாதியை மாத்திரம் பாண்டியனிடம் கூறினால் நன்றாக இருக்குமா?

புலவருடைய அறிவையும் புலமைத் திறத்தையும் என்ன என்று சொல்வது! அவர் அந்தப் பாதிப் பாட்டையே மேலும் பாடி முழுப் பாட்டாக்கி விட்டார். வசையாகப் பாட எண்ணி ஆரம்பித்தாலும், அதையே வைத்துக் கொண்டு பாண்டியனுக்கு இசை உண்டாகும்படி பாடிவிட்டார். பாண்டியன், "என்ன பாட்டு?" என்று கேட்கும்போதே மிக விரைவில் பாட்டை முடித்துச் சொல்லத் தொடங்கினார்.

"அரசர் பெருமான் இங்கே ஆலவாய்ப் பெருமானை வணங்கியதாகக் கேட்டு ஒரு பாடல் பாட எடுத்தேன். தம்மைக் காட்டிலும் உயர்ந்தவரைத் தலைமேல் வைத்துக் கொண்டாடுவது உலக இயல்பு. பாண்டிய குல முதல்வன் சந்திரன். அவனைத் தலைமேல் வைத்துக் கொண்டிருக்கிறார் சொக்கநாதர். அரசர்பிரானுடைய குல முதல்வனைத் தம் தலையாலே தாங்கும் ஒருவரைப் போய் அக் குலத்தில் உதித்தவர் வணங்கலாமா? வணங்காமுடிப் பாண்டியர் என்று சொல்வார்கள். குல முதல்வனும் குலத்தில் உதித்தோரும் சரிசமானமானவர்கள். ஆதலால் சொக்கநாதர் தலையின்மேல் பாண்டிய குல முதல்வன் இருப்பது அக்குலத்தோர் இருப்பதற்கு ஒப்பானதே. யார்க்கும் வணங்காத முடியையுடைய

அரசர்பிரான் தம்மைத் தலையிலே வைத்துக் கொண்டிருக்கும் ஒருவரை வணங்கலாமா?—இப்படி ஒரு கற்பனை செய்தேன்.''

பொய்யாமொழிப் புலவர் முன்னே வசை பாட எடுத்தபோது கேட்ட அன்பர்கள் பிரமித்துப் போனார்கள். பாட்டு எப்படி வரப்போகிறதென்று ஆவலோடு நோக்கினார்கள்.

"பாட்டைச் சொல்லுங்கள்'' என்று பாண்டியன் சொன்னான்.

புலவர் அந்தக் கணத்தில் முடித்த முழுப் பாட்டையும் சொன்னார்.

குழற்கால் அரவிந்தம் கூம்பக்
குமுதம் பொதிஅவிழ்ப்ப
நிழற்கால் மதியம்அன் றோநின்
திருக்குலம்?—நீ அவன்றன்
அழற்கால் அவிர்சடை மீதே
இருந்தும்,அவ் வந்திவண்ணன்
கழற்கால் வணங்குதி யோவணங்
காமுடிக் கைதவனே.

[...நீ அந்தச் சிவபிரானுடைய நெருப்பின் நிறத்தை வெளிப் படுத்தி விளங்கும் சடையின் மீதே இருந்தும் அந்த அந்தியின் செவ்வண்ணத்தைப் பெற்றவனுடைய கழலையணிந்த பாதத்தை வணங்குவாயோ? வணங்கா முடியையுடைய பாண்டியனே !]

முன் பாதிப் பாட்டைக் கேட்டவர்கள் தம்மையும் மறந்து, "ஆ ஆ!'' என்று வாய் விட்டுக் கூவினர். வசைப் பாட்டு இசைப் பாட்டாக மாறிய அற்புதம் அவர்களை அப்படி ஆக்கியது.

மற்றவர்கள், "அழகான கற்பனை'' என்றார்கள்.

பாண்டியன், "பாட்டு அழகாக இருக்கிறது. குழந்தையைத் தலையில் தூக்கி வைத்துக் கொள்கிறோம். அது அன்பினாலே. அந்தக் குழந்தை நம்மை வணங்குகிறது. அது மரபு" என்று சொல்லித் தன் அறிவையும் காட்டினான்.

புலவரும் புரவலரும் ஒருவரை ஒருவர் அறிந்து கொண்டனர்.

# சொற்கோயில்

திருப்பாதிரிப்புலியூரிலும் அதற்கு அருகிலும் சில ஜைன சமயத்தவர்கள் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் வழிபடும் கோயில் ஒன்று அவ்வூரில் இருந்தது. மிகச் சிறிய கோயிலாக இருந்ததனால் அதைப் பெரிதாகக் கட்டவேண்டுமென்று அன்பர்கள் எண்ணினார்கள். கருங்கல்லால் கட்ட இயல வில்லை; போதிய பொருள் இல்லாததுதான் காரணம். ஆகவே செங்கல்லால் கட்டலாம் என்று எண்ணி, அதற்கு வேண்டிய முயற்சியைச் செய்தார்கள்.

அந்த அன்பர் கூட்டத்தில் தொல்காப்பியத் தேவர் என்ற தமிழ்ப் புலவர் இருந்தார். அவர் சமரச ஞானம் உடையவர். ஒரு கடவுளே அந்த அந்த மதத்தினருக்கு ஏற்றபடி உருவம் கொண்டு அவர்களுடைய வழிபாட்டை ஏற்றருளுகிறார் என்ற எண்ணம் கொண்டவர்.

ஜைனர்கள் வணங்கும் கடவுளுக்கு அருகன், ஜினன் என்று பெயர். ஜினாலயத்தைக் கட்ட வேறு ஓரிடத்தில் செங்கல் வாங்குவதானால் பொருட் செலவாகும் என்று எண்ணி, செங்கல் அறுத்துச் சூளை வைக்கலாம் என்று அன்பர்கள் தீர்மானித்தனர். ஓரிடத்தில் செங்கல் அறுத்து வந்தார்கள். அந்த இடம் திருப்பாதிரிப்புலியூரில் உள்ள சிவபெருமான் ஆலயத்தைச் சார்ந்தது. மண்ணை எடுத்துச் செங்கல் அறுப்பதனால் யாருக்கு என்ன நஷ்டம் வரப்

போகிறது என்று ஜைனர்கள் எண்ணிவிட்டார்கள். ஆகையால் அவர்கள் சிவாலய அதிகாரிகளிடம் உடம்பாடு பெறவில்லை. அந்தக் காலத்தில் ஊரில் வேறுபாடு இல்லாமல் யாவரும் மனம் ஒன்றுபட்டுப் பழகி வந்தார்கள். தாங்கள் கல் அறுப்பது தெரிந்தாலும் ஆலய அதிகாரிகள் ஒன்றும் சொல்ல மாட்டார்கள் என்று ஜைனர்கள் நம்பினார்கள். "நல்ல காரியத்துக்குத்தானே நாம் மண் எடுக்கிறோம்? ஒரு மனிதன் தன் வீடு கட்ட உபயோகப்படுத்திக் கொள்வதாக இருந்தால் தவறு. இது பொதுக் காரியந்தானே?" என்பது அவர்கள் எண்ணம்.

ஆனால், நல்ல காரியத்துக்குத்தானே நானூறு தடைகள் வரும்? மக்களுக்குள் சில இழி தகைமையுடைய கயவர்கள் எந்தக் காலத்திலும் இருந்து கொண்டே இருக்கிறார்கள். அவர்களால் நல்ல செயல் ஒன்றும் செய்ய இயலாவிட்டாலும், பிறருக்குத் தீங்கு புரிவதிலும் பிறர் செய்யும் நற்செய்கைகளை இடைநின்று தடுப்பதிலும் அவர்கள் தம்முடைய சாமர்த்தியத்தைக் காட்டுவார்கள். இத்தகைய பேர்வழிகளில் ஒருவர் ஜினாலயத்துக்குச் செங்கல் அறுக்கும் வேலை நடைபெறுவதைக் கவனித்தார். தம்முடைய கலகம் மூட்டும் தொண்டுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததென்று மகிழ்ச்சி அடைந்தார். உடனே திருப்பாதிரிப்புலியூரில் உள்ள தோன்றாத் துணையீசர் திருக்கோயில் அதிகாரியிடம் சென்றார்.

"வரவரக் காலம் கெட்டுப் போய்விட்டது. கொள்ளைக்காரர்கள் மிகுதியாகி விட்டார்கள்" என்று பேச்சை ஆரம்பித்தார்.

"ஏன்? உங்கள் வீட்டில் ஏதாவது திருட்டுப் போய்விட்டதா?" என்று ஆலய அதிகாரி கேட்டார்.

"என் வீட்டில் திருட்டுப் போனால் உங்களிடம் ஏன் வந்து சொல்கிறேன்? உங்கள் வீட்டில்தான் திருட்டுப் போய்க் கொண்டே இருக்கிறது" என்றார் கோள் சொல்லும் கோமான்.

"என்ன ஐயா உளறுகிறீர்? என் வீட்டில் எனக்குத் தெரியாமல் திருட்டுப் போகிறதாவது!"

"உங்கள் வீடு என்றால், நீங்கள் குடியிருக்கும் வீடு என்று எண்ணிக் கொண்டு பேசுகிறீர்கள். உங்கள் பொறுப்பில் இருக்கும் இடங்களெல்லாம் உங்கள் வீட்டைப் போன்றவை என்று நீங்கள் நினைக்க வேண்டாமா?"

"சொல்லும் செய்தியைத் தெளிவாகச் சொல்லுங்கள். எங்கே எப்பொழுது என்ன நடந்தது?"

"நம்முடைய சிவபிரானுக்குரிய பொருள் திருட்டுப் போனால் அதை நாம் விடலாமா?"

"விடக்கூடாது. ஆலயத்தில் திருட்டுப் போகிறது என்ற செய்தி உமக்கு எப்படிக் கிடைத்தது? அதை மெய்ப்பித்துக் காட்ட முடியுமா?" என்று படபடப்பாகக் கேட்டார் கோயிற் பொறுப்பாளர்.

"ஆலயத்துக்குள்ளே திருட்டு நடக்கவில்லை. தோன்றாத்துணையப்பருக்குச் சொந்தமான பொருள் கோயிலுக்கு வெளியேயும் இருக்கிறதல்லவா? அது திருட்டுப் போகிறது."

"என்ன பொருள்?"

"நான் இதைக் கவனித்து வந்து சொல்லுகிறேன். நீங்கள் அதுபற்றிச் சிறிதும் கவலைப்படுபவராகத் தோன்றவில்லை. சிவபெருமானுடைய

சொத்தை ஒருவர் திருடினாலும், பிறர் திருடப் பார்த்துக் கொண்டிருந்தாலும் என்ன பயன் உண்டாகும் என்பதை நீங்கள் சிந்திக்கவே இல்லை. நான் சொல்ல வந்தால் அதில் சிறிதும் கருத்து இருப்பவராகக் காட்டிக் கொள்ளவும் இல்லை."

அதிகாரிக்குச் சிறிது கோபங்கூட வந்தது. "சொல்வதைத் தெளிவாகச் சொன்னால் நன்றாக இருக்கும். எதற்காக இப்படிச் சுற்றி வளைத்துப் பேசுகிறீர்கள்? என்ன நடந்ததென்று சுருக்கமாகச் சொல்லுங்கள்; தெளிவாகச் சொல்லுங்கள்" என்றார்.

"நம்முடைய தோன்றாத்துணையப்பருடைய நிலத்தில் செங்கல் அறுத்துச் சூளை போட்டு ஜைனர்கள் ஆலயம் கட்டப் போகிறார்களாம். செங்கல் அறுக்கும் வேலை நடந்துகொண்டே இருக்கிறது."

"அதனால் என்ன? கோவில் கட்டத் தானே மண் எடுக்கிறார்கள்? அதனால் என்ன குறை நேரப் போகிறது? செங்கல் அறுப்பதனால் அந்த நிலம் பள்ளமாகும். அது நமக்குத்தானே நல்லது?" என்றார் அதிகாரி.

கோள்மூட்டும் மனிதர் அதைக் கேட்டுச் சிரித்தார். "வீட்டிலே பாம்பு வந்து விட்டதே என்றால் வரட்டுமே என்று சொல்பவனைப் போல நீங்கள் பேசுகிறீர்கள். ஜைனர்கள் சைவர்களுக்கு விரோதிகள். சைவத்தை அழிக்க வேண்டுமென்பதே ஜைனர்களுடைய நோக்கம். அத்தகைய பகைவர்களுக்கு நம்முடைய நிலத்தைக் கொடுக்கலாமா?" என்று நியாயம் பேசினார்.

"நிலத்தையா கொடுத்து விட்டோம்? அதில் இருக்த மண்ணைத்தானே எடுத்துக் கொள்கிறார்கள்?"

"நீங்கள் சொல்வது விநோதமாக இருக்கிறது. நிலம் என்பது என்ன? மண் தானே? சிவபக்தர்கள், இப்படி ஒரு திருட்டு நடக்கிறது, அதைக் கோயில் அதிகாரி தடுக்கவில்லை என்று தெரிந்து கொண்டார்களானால், நாளைக்கு உங்கள் மேல் பழி வந்து சூழும். அந்த ஜைனர்களுக்கு இது தவறான காரியம் என்று தெரியும். உங்களிடம் சொன்னால் நீங்கள் இடம் கொடுக்க மாட்டீர்கள் என்ற பயம். ஆகையால் திருட்டுத்தனமாக இதைச் செய்கிறார்கள். யோசித்துப் பாருங்கள். அவர்கள் கோயில் கட்டுகிறார்களோ, குளம் கட்டுகிறார்களோ அதைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டாம். வேறு ஒருவருக்குச் சொந்தமான பொருளை, உடையவரின் அநுமதி இல்லாமல் அவர்கள் எப்படி எடுத்துக் கொள்ளலாம்? இது பெரிய குற்றம். மற்றொன்று: நீங்கள் இதைப் பெரிதாக எண்ணவில்லை. உங்களுக்குச் சைவ சமயத்தின் பெருமை தெரியாது. பழைய வரலாறுகளையும் நீங்கள் நினைத்துப் பார்க்கவில்லை. சிவபெருமானிடத்தில் சிறந்த பக்தியுடைய பெரியவர்கள் காதில் இந்தச் செய்தி விழுந்தால், அவர்கள் எத்தனை சினம் கொள்வார்கள், தெரியுமா? கிளிக்குக் கொடுக்கும் பாலைப் பாம்புக்குக் கொடுக்க இவர் யார் என்று உங்களைக் குறை கூறுவார்கள். நாலு பேருக்குத் தெரியாமல் இருக்கும் விஷயம் அல்ல இது. பட்டப் பகலில் கொள்ளை போகிறதுபோல இந்தத் திருட்டு நடக்கிறது. சிவபெருமான் கோயில்

நிலத்தில் இது நடப்பது உங்களுக்குத் தெரியாதே ஒழியப் பல சிவபக்த சிரோமணிகளுக்கு நன்றாகத் தெரியும். நீங்கள் இந்த அபசாரத்தைத் தடுத்துவிடுவீர்கள் என்று அவர்கள் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் உங்களைப் பற்றித் தங்களுக்குள் அவதூறாகப் பேசுகிறார்கள். இது என் காதில் விழுந்தது. எனக்கு உங்களிடத்தில் எப்போதுமே அன்பு உண்டு. இதை உங்களுக்குத் தெரிவிப்பது என் கடமை என்று நினைத்துச் சொன்னேன். விஷயம் எல்லை மீறிச் செல்வதற்கு முன் தடை செய்து, சிவபெருமான் நிலத்தையும் உங்கள் பெயரையும் காப்பாற்றிக் கொள்ளுங்கள். நான் சொல்வதைச் சொல்லிவிட்டேன். என்னை நீங்கள் வாயடக்கி அனுப்பி விடலாம், ஊர் வாயை மூடமுடியாது. சரி; நான் போய்வருகிறேன்."—அவர் தீயை மூட்டிவிட்டுப் புறப்பட்டுப் போய்விட்டார்.

## 2

குரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும் என்று சொல்வார்கள். கோயில் அதிகாரி குண்டுணிக் கோமான் கூறிய வார்த்தைகளைச் சிந்தித்துப் பார்த்தார். தம்மிடம் உடம்பாடு பெறாமல் ஜைனர்கள் செங்கல் அறுப்பது தவறு என்றே உணர்ந்தார். ஊரார் பழி சொல்வார்கள் என்று அவர் எடுத்துக் காட்டினாரே, அதுதான் அதிகாரிக்கு அச்சத்தை உண்டாக்கியது. ஆதலின் ஜைனர்கள் செங்கல் அறுப்பதைத் தடுக்கவேண்டும் என்ற முடிவுக்கு வந்தார். கோயில் ஊழியக்காரர்களை

அனுப்பி, சிவபெருமானுக்குரிய நிலமாகையால் அங்கு ஜைனர்கள் செங்கல் அறுக்கக்கூடாதென்று தடை செய்யும்படி செய்தார். ஜைனர்கள் தடையை மீறி ஒன்றும் செய்ய இயலவில்லை. முன்பே அநுமதி கேளாமற் போனதை எண்ணி வருந்தினார்கள்.

செங்கல்லை அறுத்துச் சூளைபோட்டு விரைவிலே கோயிலைக் கட்டிவிடலாம் என்று அவர்கள் எண்ணிச் செய்து வந்த காரியம் தடைப்பட்டு விட்டது. 'இனி என்ன செய்வது?' என்று சிந்தித்தார்கள். அதுவரையில் சிரமப்பட்டு அறுத்த கற்கள் அந்த இடத்திலே கிடந்தன. இன்னும் சில வாரங்கள் போனால் மழை வந்துவிடும். பட்ட பாடு அவ்வளவும் வீணாகப் போகும்.

தொல்காப்பியத் தேவருக்கு இந்தச் செய்தி தெரிந்தது. அவருடைய தமிழ்ப் புலமை ஊர் அறிந்தது; நாடு அறிந்தது. அவரிடம் ஊரில் உள்ள எல்லோருக்குமே நன்மதிப்பு உண்டு. ஆகவே, ஜைனர்கள் அவரிடம் போனார்கள். "நீங்கள் முயற்சி பண்ணினால் இப்போது வந்திருக்கும் தடை நீங்கிவிடும் என்று தோன்றுகிறது. ஆலய அதிகாரியிடம் நேரே சென்று, நாங்கள் முன்பே அவரிடம் சொல்லாமற் செய்தது பிழை என்று சொல்லிப் பிழை பொறுக்கும்படி வேண்டிக் கொள்ளச் சித்தமாக இருக்கிறோம். எங்கள் வார்த்தைகளைக் கேட்டு அவர் இசைவார் என்பது நிச்சயம் அன்று. நீங்களும் வந்தால் காரியத்தைச் சாதித்துக் கொள்ளலாம். எங்கள் வார்த்தைகளைவிட உங்கள் வார்த்தைக்கு எப்போதும் எவ்விடத்திலும் மதிப்பு உண்டு" என்று பணிவாகச் சொன்னார்கள்.

தொல்காப்பியத் தேவர் யோசித்துப் பார்த்தார். பல நாட்களாகச் செய்த வேலை வீணுகி விடுமே என்ற நினைப்பு அவர் மனத்தில் முன்னே நின்றது. அவர் தம்மாலான முயற்சியைச் செய்ய எழுந்தார்.

ஜைன அன்பர்கள் தொல்காப்பியத் தேவரை முன்னிட்டுக்கொண்டு, சிவாலய அதிகாரியிடம் போனார்கள். அதிகாரி புலவரைக் கண்டவுடன் எழுந்து வந்து இனிய மொழிகளைப் பேசி அமரச் செய்தார். ஜைனர்கள் இன்ன தற்காகத்தான் வந்திருக்கிருர்கள் என்பதை அதிகாரி ஊகித்துக் கொண்டார்.

"எங்கே அருமையாக வந்தீர்கள்? இத்தனை பேரைக் கூட்டிக்கொண்டு வந்திருக்கிறீர்களே!" என்று ஆலய அதிகாரி கேட்டார்.

"இவர்கள் ஒரு தவறு செய்துவிட்டார்கள். அதை உங்களிடம் சொல்லிக் குற்றத்தைப் பொறுத்துக் கொள்ளும்படியும், மேலே இவர்கள் காரியத்தை நிறைவேற்றிக் கொடுக்கும்படியும் உங்களைக்கேட்டுக் கொள்வதற்காக வந்திருக்கிறேன்."

"அப்படியா! இதற்கு நீங்கள் வரவேண்டும் என்பதில்லையே! இவர்கள் வந்தால் போதாதா?"

"உங்களுக்கு இது சிறிய விஷயம். ஆனல் இவர்களுக்கு இது பெரிய காரியம். இது நிறைவேற வேண்டுமென்ற கவலை மிகுதியால் நானும் வந்தேன்."

இரண்டு பேரும் பேசினர்கள். நடந்த காரியத்தை அதிகாரி சொன்னர். நடக்கவேண்டியதைத் தொல்காப்பியத் தேவர் சொன்னர். கடைசியில்,

" இந்த விஷயத்தில் நான் ஒருவனே முடிவு பண்ணு வதற்கு எனக்கு உரிமை இல்லை. இன்னும் நான்கு பேர்களைக் கேட்டுத்தான் செய்யவேண்டும். சிறந்த புலவர் பெருமானாகிய நீங்கள் வந்திருக்கும்போது உங்கள் வேண்டுகோளைப் புறக்கணிக்கக் கூடாது. மற்றவர்களையும் கலந்துகொண்டு முடிவைத் தெரி விக்கிறேன்" என்று அதிகாரி சொல்லி அவர்களை அனுப்பினார். குறிப்பிட்ட காலத்தில் வந்து சந்திப் பதாகச் சொல்லித் தொல்காப்பியத் தேவர் விடை பெற்றுக்கொண்டு நண்பர்களுடன் புறப்பட்டார்.

## 3

வீட்டுக்குச் சென்ற தொல்காப்பியத் தேவர் சிந்தனையில் ஆழ்ந்தார். 'அதிகாரி வேறு நான்கு பேர்களுடன் ஆலோசித்து முடிவு சொல்வதாகச் சொன்னாரே. அவர்கள் செங்கல் அறுக்கக்கூடாது என்று சொல்லிவிட்டால் என்ன செய்வது?' என்ற எண்ணம் அவர் மன அமைதியைக் குலைத்தது. அப் படி அவர்கள் மறுத்தால் அருகக் கடவுளின் கோயில் கட்டாமலே நிற்கவேண்டியதுதானா? முன்பே அறுத்த செங்கல்கள் உழைத்தவர்களுக் குப் பயன் படாமல் வீணாகிப் போவதா?—அவர் யோசனை படர்ந்தது.

இறுதியில் ஒரு வழி அவருக்கு உதயமாயிற்று. 'சிவபெருமானாகவும் அருகனாகவும் திருமாலாகவும் இருக்கிறவர் ஒரே கடவுள்தானே? சிவபெருமானே எங்கும் நிறைந்திருக்கிறார் என்று சைவர்கள் சொல் லிக் கொள்கிறார்களே! அந்தச் சமசர ஞானம் சில ருக்கு இல்லாததனால்தான் வீண் பூசல்கள் நேர்கின்

றன. அதை அவர்களுக்கு எடுத்துக் காட்டி அவர்களுடைய இசைவைப் பெறலாம்' என்று நினைத்தார். பிறகுதான் அவருக்குத் தூக்கம் வந்தது.

குறிப்பிட்ட நாளில் மறுபடியும் தொல்காப்பியத்தேவர் திருக்கோயில் அதிகாரியிடம் சென்றார். புலவர் வருவாரென்று அதிகாரி எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். அவருடன் நான்கு சைவ அன்பர்கள் இருந்தார்கள்.

தொல்காப்பியத்தேவர் அதிகாரியின் வீட்டுக்குள் நுழைந்தார். அதிகாரி தமக்குத் துணையாக நான்கு பேர்களை அழைத்து வந்திருக்கிறார் என்று தெரிந்து கொண்டார். 'இவர்கள் நமக்கு இணங்கப் போவதில்லை. அதிகாரி தாமாகச் சொல்ல முடியாதென்று எண்ணி இவர்களையும் கூட்டி வைத்திருக்கிறார்' என்ற உண்மை அவருக்குத் தெளிவாகிவிட்டது.

புலவர் உள்ளே போய் அமர்ந்தார். எல்லோரும் அவரவர்களின் நலந் தீங்குகளைப் பற்றிப் பேசிக் கொண்டார்கள். பிறகு அவர்களில் வயசு முதிர்ந்தவராகிய ஒருவர், "புலவரவர்களுடைய சொந்த வீட்டுக்காக இருந்தால் செங்கல் அறுக்க அநுமதித்துவிடலாம். ஏதோ பேருக்குச் சிறுதொகையை வாங்கிக் கொள்ளலாம். ஆனால் சிவன் கோயில் சொத்தை ஜினன் கோயிலுக்குக் கொடுப்பதென்பது முறையன்று. தமிழ்நாடு முழுவதிலும் சைவர்கள் இருக்கிறார்கள். இந்தத் தலம் சைவ சமய ஆசாரியர்களாலே பாடப் பெற்றது. நெடுந் தூரத்திலிருந்து பல அன்பர்கள் வந்து இந்தக் கோயிலைத் தரிசித்துக் கொண்டு போகிறார்கள். நமக்குள்ளே இருக்கிற ஒற்றுமை அவர்களுக்குத்

தெரியாது. 'அப்பர் சுவாமிகளுக்குத் தீங்கு இயற்றிய ஜைனர்களுக்குச் சிவபெருமான் கோயிற் சொத்தைக் கொடுத்து விட்டார்கள்' என்று தமிழ் நாட்டில் உள்ள சைவர்களெல்லாம் குறை கூறுவார்கள். ஆகையால் இந்தக் காரியத்தை இதோடு நிறுத்துவதுதான் நல்லது. நீங்கள் நினைத்தால் செங்கல் அறுக்க வேறு இடமா கிடைக்காது?" என்று நயமாகச் சொன்னார். அவர் படித்தவர். அநுபவத்தில் பழுத்தவர்.

தொல்காப்பியத் தேவர் இந்த மறுப்பை எதிர் பார்த்துத்தானே வந்திருக்கிறார்? அவர் முன்பே தீர்மானித்து வைத்திருந்தபடி இப்போது பேசத் தொடங்கினார்.

"நீங்கள் சொல்லும் நியாயத்தை நான் கேட்டுக் கொண்டேன். நீங்கள் நன்றாகப் படித்தவர்கள். சிவபெருமானுடைய பெருமையை உணர்ந்தவர்கள். நான் ஜைனனாக இருந்தாலும் சைவர்களுக்கு விரோதி அல்ல. சிவபெருமானுடைய புகழைக் கூறும் நூல்களை நன்றாகப் படித்திருக்கிறேன். அதனால் நான் கூறும் நியாயங்களுக்கு நீங்கள் சிறிதே செவி சாய்க்க வேண்டும்" என்று பணிவாகத் தொடங்கினார் புலவர்.

"அப்படியா! சைவ சமய நூல்களை நீங்கள் படித்திருக்கிறீர்களா? ஆச்சரியந்தான்" என்று முதியவர் சொன்னார்.

"சைவர்கள் தமிழ் நாடு முழுவதும் இருக்கிறார்கள் என்று நீங்கள் சொன்னீர்கள். அது உண்மை தான். அதைக் காட்டிலும் பெரிய உண்மை ஒன்றை உங்களுக்கு நினைவுறுத்த விரும்புகிறேன்.

சிவபெருமான் எவ்விடத்திலும் இருக்கிறார் அல்லவா? அவர் உலகமே திருவுருவமாக விளங்குகிறவர். ஐம் பெரும் பூதங்களும் சந்திர சூரியர்களும் உயிரும் அப்பெருமானுடைய திருவுருவங்கள். அதனால் தானே அட்ட மூர்த்தி என்று இறைவனை நூல்கள் சொல்கின்றன? அப்பர் சுவாமிகள்,

இருநிலனாய்த் தீயாகி நீரு மாகி
இயமான னாய்எறியும் காற்று மாகி
அருநிலைய திங்களாய் ஞாயி றாகி
ஆகாச மாய்அட்ட மூர்த்தி யாகிப்
பெருநலமும் குற்றமும் பெண்ணும் ஆணும்
பிறர்உருவும் தம்உருவும் தாமே ஆகி
நெருநலையாய் இன்றாகி நாளை யாகி
நிமிர்புன் சடையடிகள் நின்ற வாறே

என்றல்லவா திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்? 'பிறர் உருவும் தம் முருவும் தாமே ஆகி' என்று சுவாமிகள் சொல்வதை ஊன்றிக் கவனித்துப் பாருங்கள். அருகக் கடவுள் என்றும் வேறு வகை யாகவும் பிற சமயத்தார் வணங்கும் பிறர் உருவம் அவருடையனவே என்று திருநாவுக்கரசர் சொல் கிறாரே. அதன்படி ஜைனர்கள் கட்டும் கோயிலில் அருகனாக எழுந்தருளி யிருக்கிறவன் சிவபிரான் அல்லவோ?"

முன்னே உட்கார்ந்திருந்த சைவ அன்பர்கள் தேவாரப் பாடலைக்கேட்டு மகிழ்ந்தனர். முதியவரோ, சிவபெருமானுடைய வியாபகத்தைப் புலவர் கூறும் போது மனம் உருகிப் போனார். யாரோ ஒரு சைவர் பிரசங்கம் செய்வது போலத் தோன்றிற்றே ஒழிய,

வேறு நினைப்பு அவருக்கு உண்டாகவில்லை. புலவர் மேலும் பேச ஆரம்பித்தார்.

"சிவபெருமானுடைய வியாபகத்தை என்னவென்று சொல்வது! அவர் திருவாக்குத் தான் வேதம். விசும்பே அவர் திருமேனி. கதிரவன், சந்திரன், அக்கினி என்ற மூன்றுமே அவருடைய கண்கள். இந்த நிலவுலகம் முழுவதும் அப்பெருமானுடைய திருவடி. அவர் உடுத்த சிறப்பான ஆடை எது? உலகைச் சூழ்ந்துள்ள கடல். எட்டுத் திசையும் அவருடைய திருக் கைகள். அவருடைய மூச்சுத்தான் காற்று. எங்குமாகி யாவுமாகி நின்ற சிவபெருமானை நாம் திருப்பாதிரிப் புலியூர் நாதராக வணங்குகிறோம். இதை எண்ணும் போது நான் கூட அப்பெருமானுடைய பெருமையை நினைந்து பாடினேன்."

"என்ன, நீங்கள் எங்கள் சிவபெருமானைப் பாடினீர்களா?" என்று திடுக்கிட்டு ஒருவர் கேட்டார்.

"ஆம்; நீங்கள் மறந்து போனதை நான் நினைத்துப் பாடினேன். பாட்டைக் கேளுங்கள்" என்று சொல்லி மெல்ல,

**வேதம் மொழி, விசும்பு மேனி, சுடர்விழி, மண்**
**பாதம், திருப்பா திரிப்புலியூர்—நாதர்**
**பரமாம் பரமாம் படுகடல், எண் திக்கும்**
**கரமாம், அவர்க்குஉயிர்ப்பாம் கால்.***

---

* திருப்பாதிரிப்புலியூர் நாதருக்கு வேதமே திருவாக்கு; ஆகாயமே திருமேனி; மூன்று சுடர்களே மூன்று கண்கள்; உலகமே திருவடி; ஒலிக்கின்ற கடலே மேலான ஆடையாம்; எட்டுத் திசையும் திருக்கரங்களாம்; அவருக்கு மூச்சாக இருப்பது காற்று. பரமாம்பரம்-பரம அம்பரம்; மேலான ஆடை. உயிர்ப்பு-மூச்சு. கால் - காற்று.

என்ற பாட்டைச் சொன்னார்.

அதற்கு முன் அவர் சொல்லி வந்த செய்திகளிலே மனத்தைப் பறிகொடுத்து அமர்ந்திருந்த முதியவர், இந்தப் பாட்டைக் கேட்டாரோ இல்லையோ, கடகடவென்று கண்ணீரைப் பெருக்கினார். அவர் உண்மையான பக்தர். "ஆ ஆ! என்ன அழகான பாட்டு! உங்கள் வாக்கு எவ்வளவு சிறப்பாக இருக்கிறது!" என்று பாராட்டினார். காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ள வேண்டும் என்று எண்ணிய தொல்காப்பியத் தேவர் அந்த முதியவரின் உள்ளம் நெகிழ்ந்திருக்கிற அப்போதே மேலும் சில நியாயங்களைச் சொல்லலானார்.

"உலக முழுவதையும் திருவடியாக உடைய பெருமானுக்கு இந்தக் கோயில்தான் சொந்தம், இந்த நிலந்தான் சொத்து என்று வரையறுத்து அவனுடைய பெருமைக்கும் அருளாட்சிக்கும் எல்லை கோலலாமா? நினைத்துப் பாருங்கள். நாங்கள் செங்கல் அறுக்கும் இடம் தோன்றாத் துணையப்பருக்குச் சொந்தம் என்பதை ஒப்புக் கொள்கிறேன். ஆனால் நாங்கள் வேறு எங்கே போவது? சிவபெருமானுக்குச் சொந்தமல்லாத இடம் என்று ஒன்றைக் காட்டுங்கள்; அங்கே போகிறோம். உலகப் பரப்பு முழுவதும் அவன் திருவடியாக இருக்கும்போது அதற்குள்ளே இருந்து வாழும் மக்களுக்கு அதற்குப் புறம்பே செல்ல வகை ஏது? வேறு இடம் நீங்கள் நினைத்தால் கிடைக்காதா என்று எளிதாகச் சொன்னீர்கள். சிவபெருமானுக்குச் சொந்தம் அல்லாத இடம் ஒன்று உண்டென்று நீங்கள் நினைக்கிறீர்களா? அப்படியானால் ஒன்றைக் காட்டுங்

கள்; நாங்கள் அங்கே போகிறோம். சிவபெருமானுடைய வியாபகம் இல்லாத இடமும் உண்டு என்று நீங்கள் சொல்வீர்களா ?"

முதியவர், " அப்படிச் சொல்வது அபசாரம்! அபசாரம்!" என்று சொல்லிவிட்டு உடன் இருந்த நண்பர்களின் முகத்தைப் பார்த்தார். பிறகு ஆலய அதிகாரியைப் பார்த்துச் சொல்லலானார். "தொல்காப்பியத்தேவர் சொன்ன அத்தனையும் சாஸ்திர சம்மதமானது. அவர் இவ்வளவு தூரம் சிவபெருமானிடத்தில் ஈடுபட்டவர் என்பதை நாம் அறிந்து கொள்ளவே இல்லை. சைவர்கள் என்று பேர் வைத்துக்கொண்டிருக்கும் எத்தனையோ பேர்களைவிடச் சிறந்த சைவர் இவர். இவர் வேண்டுகோளை மறுப்பது தவறு. இவர் விருப்பப்படியே இணங்குவது தான் திருவருளுக்குச் சம்மதமாக இருக்கும். அது மாத்திரம் அன்று. இப்போது திருப்பாதிரிப் புலியூர் நாதரைப் பற்றி ஒரு பாடலைச் சொன்னாரே, அந்தப் பாட்டுக்கு விலையாகச் செங்கல் அறுக்கும் நிலத்தையே கொடுத்து விடலாம்; அது சிறிதும் முறையினின்றும் பிறழ்ந்தது ஆகாது...." முதியவர் உணர்ச்சி வசப்பட்டுப் பேசினார்.

தொல்காப்பியத் தேவர் இடைமறித்துப் பேசினார்: "தாங்கள் உண்மையை உணர்ந்து கொண்டது பற்றி நான் மகிழ்ச்சி அடைகிறேன். சிவபெருமானாக விளங்கும் அருட்கடலே வெவ்வேறு சமயத்தில் உறையும் தெய்வமாக இருக்கிறான் என்பதை நீங்கள் தெரிந்து கொண்டவர்கள். இந்த ஒரு பாட்டல்ல, இன்னும் நூறு பாட்டு வேண்டுமானாலும் இறைவனைப் பற்றி நான் பாடுகிறேன்" என்றார்.

"அப்படியா! உண்மையாகவே சொல்கிறீர்களா?" என்று முதியவர் வியப்புத் தாங்காமல் கேட்டார்.

"இதுவரைக்கும் கூறிய செய்திகள் எவ்வளவு உண்மையோ, அவ்வளவு உண்மை இதுவும். நான் நூறு பாட்டையுடைய ஒரு நூலையே பாடி அளிக்கிறேன். இப்போது சொன்ன பாடலும் அதில் இருக்கும்."

முதியவர் எழுந்தார். தொல்காப்பியத் தேவர் காலில் விழுந்து பணிந்தார்.

"உங்கள் பக்தியை எண்ணி நான் வியப்படைகிறேன். எல்லாம் சிவபெருமான் திருவருள். ஆலய அதிகாரி தடை செய்ததும் நல்லதாகப் போயிற்று. உங்கள் பங்கில் உண்டாகும் லாபத்தைக் காட்டிலும் எங்கள் பங்கில்தான் லாபம் அதிகம். நீங்கள் நூலைப் பாடி நிறைவேற்றுங்கள்" என்றார்.

"மறுபடியும் உங்கள் பங்கு, எங்கள் பங்கு என்று வேறு பிரித்துப் பேசாதீர்கள். எல்லோரும் ஒரே கடவுளுக்கு அடியார்களே!" என்று தொல்காப்பியத் தேவர் கூறிப் புன்முறுவல் பூத்தார்.

## 4

செங்கல் அறுக்கும் வேலை மீண்டும் ஆரம்பமாயிற்று. முன்னாலே நினைத்ததை விடப் பின்னும் மிகுதியாகச் செங்கல் அறுத்துச் சூளை போட்டார்கள் ஜைனர்கள். பிறகு ஜினேந்திரனுடைய திருக்கோயிலையும் கட்டினார்கள். அந்தக் கோயில் கட்டி முடிவதற்குள்ளே தொல்காப்பியத் தேவர் திருப்பாதிரிப்புலியூரில் எழுந்தருளியிருக்கும் சிவபெரு

மான் மேல் நூறு செய்யுட்கள் அடங்கிய கலம்பகம் ஒன்றைப் பாடி முடித்தார். அந்தக் கலம்பகத்தில், "வேதம் மொழி" என்ற பாட்டை இரண்டாவதாக அமைத்தார்.

கலம்பகம் நிறைவேறியவுடன் அதை அரங்கேற்றினார். மிக இனிய பாடல்கள் அடங்கிய அக் கலம்பகத்தைச் சைவர்களும் தமிழன்பர்களும் கேட்டு மகிழ்ந்து பாராட்டினார்கள்.

அரங்கேற்றத்துக்குப் பின் சில நாட்களில் ஜினேந்திரனுடைய திருக் கோயில் கட்டி நிறைவேறியது. கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. தொல்காப்பியத் தேவரை, "எங்கள் பெருமானுக்கு ஓர் அழகிய செஞ்சொற் கோயில் கட்டி அளித்தார்" என்று சைவர்கள் கொண்டாடினார்கள். "எங்கள் பெருமானுக்கு ஓர் அழகிய செங்கற் கோயில் கட்டி அளித்தார்" என்று ஜைனர்கள் பாராட்டினார்கள்.

# குறிப்புகள்

**எப்படிப் புகழ்வேன்!:** "புறவின் அல்லல்" என்பது புறநானூற்றில் 39-ஆவது பாட்டு.

**யார் குற்றம்:** "நள்ளி வாழியோ" என்பது புறநானூற்றில் 149-ஆவது பாட்டு.

**மீண்ட குழந்தைகள்:** இந்த வரலாற்றுக்கு ஆதாரமான பாடல் வருமாறு:

நீயே, புறவின் அல்லல் அன்றியும் பிறவும்
இடுக்கண் பலவும் விடுத்தோன் மருகனை;
இவரே, புலன்உழுது உண்மார் புன்கண் அஞ்சித்
தமதுபகுத்து உண்ணும் தண்ணிழல் வாழ்நர்;
களிறுகண்டு அழூஉம் அழாஅல் மறந்த
புன்தலைச் சிறாஅர் மன்றுமருண்டு நோக்கி
விருந்திற் புன்கணோ உடையர்
கேட்டனை ஆயின்நீ வேட்டது செய்ம்மே.

(புறநானூறு, 46)

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் மலையமான் மக்களை யானைக்கு இடுவுழிக் கோவூர் கிழார் பாடி உய்யக் கொண்டது.

**வாழைப் பாட்டு:** இந்த வரலாற்றில் வரும் பாடல் தமிழ் நாவலர் சரிதையிற் கண்டது.

**மாற்றிய பாட்டு:** இதில் வரும் பாடல், 'சார்வ பௌமன் பாண்டியன் வாசலில் வந்து, அவன் புறப்படவில்லை யென்று பழியாகப் பாதி பாடி, அவன் வந்து வணங்கப் புகழாகப் பாதி பாடியது' என்ற குறிப்புடன் தமிழ் நாவலர் சரிதையில் உள்ளது. இவ்வரலாற்றில் வரும் பராக்கிரம பாண்டியன் தென்காசியிலுள்ள விசுவநாதர் திருக்கோயிலைக் கட்டியவன். "தண்ணீர் குடித்தல்ல வோகும்ப யோனி தமிழ் கற்றதே" என்பது பாடம்.

**செருக்கழிந்த புலவர்:** இதில் வரும் பாடல் கூத்தர் பாதி, புகழேந்தி பாதியாகப் பாடியதென்றும் சொல்வதுண்டு.

**கிழவியின் தந்திரம்:** நாடோடியாக வழங்கும் வரலாறு.

**இருளும் நிலவும்:** அபிராமி பட்டர் தாம் பௌர்ணமி யென்று கூறியதை நினைந்து திருக்கோயிற்கு முன் ஒரு குண்டம் வெட்டி அதில் தீயை மூட்டி அதன்மேல் நூறு புரிகள் அமைந்த உறி ஒன்றைக் கட்டி அதில் ஏறி அபிராமி அந்தாதியைப் பாடத் தொடங்கினாரென்றும், ஒவ்வொரு பாடல் பாடி முடித்தவுடன் ஒவ்வொரு புரியாக அறுத்து வந்தா ரென்றும், அம்பிகை தன் காதணியை வாங்கிக் கீழ்த் திசையில் எறிய அது சந்திரனைப் போல் ஒளி வீசச் சந்திரோதயம் ஆன அற்புதத்தைக் கண்டு சரபோஜி வந்து பணிந்தா ரென்றும் வேறுவகையாக இந்த வரலாற்றைச் சொல்வதுண்டு.

ப. 66. அம்பிகையைத் தியானித்தபோது அபிராமிபட்டர் நிலை இன்னவாறு இருந்தது என்பதை,

கிளியே கிளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்தொளிரும்
ஒளியே ஒளிரும் ஒளிக்கிட மேஎண்ணில் ஒன்றுமில்லா
வெளியே வெளிமுதற் பூதங்க ளாகி விரிந்தஅம்மே
அளியேன் அறிவள விற்கள வான ததிசயமே

என்ற அபிராமி அந்தாதிப் பாட்டால் உணரலாம்.

ப. 67. சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்ற திருக் கோலம்:

வாழும் படிஒன்று கண்டுகொண் டேன்மனத் தேஒருவர்
வீழும் படிஅன்று விள்ளும் படியன்று வேலைநிலம்
ஏழும் பருவரை எட்டும்எட் டாமல் இரவுபகல்
சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே

என்பது அபிராமி அந்தாதிப் பாட்டு.

68. நன்றே செயினும்................

நன்றே வருகினும் தீதே விளைகினும் நான்அறிவ
தொன்றேயும் இல்லை; உனக்கே பரம்எனக்கு உள்ளவெல்லாம்
அன்றே உனதென் றளித்துவிட் டேன்அழி யாதகுணக்
குன்றே அருட்கட லேஇம வான்பெற்ற கோமளமே.

(அபிராமி அந்தாதி, 95.)

**வசையும் இசையும்:** இந்த வரலாற்றில் வரும் பாடல், 'பொய்யா மொழிப் புலவர் பாண்டியன் வாசலிற் போய்ப் பாதி வசையும் பாதி நசையுமாகப் பாடிய கலித்துறை' என்ற குறிப்போடு தமிழ் நாவலர் சரிதையில் உள்ளது.

**சொற்கோயில்:** "வேதம் மொழி" என்ற பாடல் திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகத்தில் இரண்டாம் பாடலாக இருக்கிறது. இந்நூல் என் ஆசிரியப் பிரானாகிய **மகா மகோபாத்தியாய டாக்டர் ஐயரவர்களால்** குறிப்புரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கிறது.

'சமணர் கோயிலுக்குச் செங்கல் அனுப்பிக்கச் சிவதலத்தார் தங்கள் எல்லை என்றபோது பாடியது' என்ற குறிப்புடன் இப்பாடல் தமிழ் நாவலர் சரிதையிலும் காணப்படுகிறது. தொல்காப்பியத் தேவர் முதலில் சைனராக இருந்து பின்பு சைவராக மாறியிருக்கலாம் என்ற கருத்தை ஸ்ரீமத் ஐயரவர்கள் இந்தக் கலம்பகத்தின் முகவுரையில் தெரிவித்திருக்கிறார்கள்.

# சிறந்த நூல்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| மறுமலர்ச்சி: | "மாயாவி" | 7 | 0 | 0 |
| ஒரே ஒரு வார்த்தை: | "அநுத்தமா" | 5 | 8 | 0 |
| கேட்ட வரம்: | ,, | 4 | 8 | 0 |
| வாடா மலர்: | "மாயாவி" | 3 | 8 | 0 |
| ஆசை வலை: | "ரகி" | 3 | 8 | 0 |
| பாருஷாவின் காதல்: | சுதர்சன்-ரா. விழிநாதன் | 3 | 0 | 0 |
| மனை விளக்கு: | கி.வா.ஜ. | 3 | 0 | 0 |
| குறிஞ்சித் தேன்: | ,, | 3 | 0 | 0 |
| தாமரைப் பொய்கை: | ,, | 3 | 0 | 0 |
| பிடியும் களிறும்: | ,, | 3 | 0 | 0 |
| அறப் போர்: | ,, | 3 | 0 | 0 |
| இன்ப மலை: | ,, | 3 | 0 | 0 |
| பேசாத பேச்சு: | ,, | 2 | 8 | 0 |
| போராட்டம்: | ஜி. எஸ். மணி | 2 | 8 | 0 |
| சபதம்: | "எல்லார்வி" | 2 | 4 | 0 |
| துணைவி: | "அகிலன்" | 2 | 0 | 0 |
| இரு நண்பர்கள்: | சுதர்சன்-ரா. விழிநாதன் | 2 | 0 | 0 |
| குழந்தை உலகம்: | கி.வா.ஜ. | 2 | 0 | 0 |
| கலைச் செல்வி: | ,, | 2 | 0 | 0 |
| பவள மல்லிகை: | ,, | 2 | 0 | 0 |
| உரிமைப் பெண்: | பெ. தூரன் | 2 | 0 | 0 |
| வால் நட்சத்திரம்: | "மாயாவி" | 1 | 12 | 0 |
| ருமா: | "அநுத்தமா" | 1 | 12 | 0 |
| உதயபானு: | "சாண்டில்யன்" | 1 | 10 | 0 |
| கதையும் கற்பனையும்: | "மாயாவி" | 1 | 8 | 0 |
| விடுதலை: | த. நா. குமாரஸ்வாமி | 1 | 8 | 0 |
| நவநீதம்: | "எல்லார்வி" | 1 | 8 | 0 |
| கஞ்சியிலும் இன்பம்: | கி.வா.ஜ. | 1 | 8 | 0 |
| எல்லாம் தமிழ்: | ,, | 1 | 8 | 0 |
| மச்சு வீடு: | ,, | 1 | 8 | 0 |
| யோசிக்கும் வேளையில்: | தி.ஜ.ர. | 1 | 8 | 0 |
| காளி தரிசனம்: | ,, | 1 | 8 | 0 |
| பூவின் சிரிப்பு: | பெ. தூரன் | 1 | 8 | 0 |
| அழகு மயக்கம்: | ,, | 1 | 8 | 0 |
| ரமா: | "குங்குமம்" | 1 | 6 | 0 |
| காட்டு வழிதனிலே: | பெ. தூரன் | 1 | 4 | 0 |
| கரிகால் வளவன்: | கி. வா. ஜ. | 1 | 4 | 0 |
| செங்கரும்பு: | "அகிலன்" | 1 | 4 | 0 |
| இன்பத் தேன்: | "அநுத்தமா" | 1 | 4 | 0 |
| கதேயின் பாஸ்ட்: | பொ. ஐயாசாமி | 1 | 4 | 0 |
| நீலாம்பரி: | "எல்லார்வி" | 1 | 0 | 0 |
| பஞ்சத்துக்கு ஆண்டி: | "சங்கரராம்" | 1 | 0 | 0 |
| கோபுர வாசல்: | கி. ரா. | 1 | 0 | 0 |

## அமுத நிலையம் லிமிடெட்

91, மவுண்ட் ரோடு, சென்னை-18